www.tamilarangam.net
தந்துதவியவர்: தேச

# தமிழோசை

THAMIZHOSAI

உள்ளே........

* நவராத்திரி மகிமை
* திருவருளும் குருவருளும்
* அந்தி மந்தாரை
* யாருக்காக உரிமை?
* சொற்சதுரங்கம்
* மன்றத்தில் ஒலித்தவை
* பப்பட மகான்மியம்

ஓசை : 1
ஒலி : 7 ஆங்கீரஸ ஆடு புரட்டாதி மீ 9ந் திகதி (25-9/9-10-1992) 253 Western Avenue London W3 0PP Tel: 44-(0)81-993 7652 Fax: 44-(0)81-993 8611

## இலங்கையில் தமிழர் பிரச்னை:

# புலிகளுடன் அரசு பேசவில்லை வெளிநாட்டு சமரசமும் இல்லை

(நமது கொழும்பு நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் எவரையும் பேச்சு வார்த்தைக்காக அரசு அழைக்கவில்லை என்று இலங்கை அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளரான கைத்தொழில் அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பான செய்திகளுக்கு மறுப்புத் தெரிவித்துள்ளார். புலிகள் இயக்கத்தின் தலைவர்கள் சிலருக்கு கொழும்பில் இப்போது பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பதையும் அவர் மறுத்தார்.

பாதுகாப்பு நிச்சயம் அளிக்கப் படவேண்டியவர்களுக்கு பொலிசார் அந்தப் பாதுகாப்பை அளிப்பார்கள் என்றும் அமைச்சர் சொன்னார். ஆனால், புலிகளின் தலைவர் தங்கியுள்ள ஹோட்டலின் பெயரையும் அறை எண்ணையும் தெரிவிக்க முடியுமா? என்று நிருபர் ஒருவர் கேட்டபோது, அமைச்சர் அதற்கும் பதில் எதுவும் கூறவில்லை. பாராளுமன்ற தெரிவுக்குழுவே பேச்சுவார்த்தைக்கு பெரிதும் உகந்த இடம் என்று தெரிவித்த அமைச்சர் விக்கிரமசிங்க, அரசு - புலிகள் தொடர்பு, பேச்சு பற்றிய வதந்திகளும், எதிர்பார்ப்புகளும் கடந்த சில மாதங்களாக நிலவுவதாக தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு, கிழக்கு பிரச்னைகள் முற்றிலும் உள்விவகாரங்களே என்றும் இதைத் தீர்ப்பதில் வெளிநாட்டு சமரசம் எதனையும் பெறுவதில் அரசுக்கு நம்பிக்கை இல்லை என்றும் பிரதமர் திரு டி.பி.விஜயதுங்க பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை தெரிவித்தார். யாழ்ப்பாண பிரஜைகள் குழு, பிரிட்டன், அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளுக்கு முறையீடு ஒன்றை அனுப்பி தமக்கு அனுப்பப்படும் உதவிகள் வடக்கில் இன ஒழிப்புக்கே பயன்படுத்தப் படுவதாகவும் வடக்கு கிழக்கில் ஒரு சமாதான தீர்வுக்கு ஐக்கிய நாடுகளின் சமரசத்தை நாடும்படி ஜனாதிபதி பிரேமதாசவை கோரவும் கேட்டதாவென சுதந்திரக்கட்சி எம்.பி.ஒருவர் கேட்ட வினாவொன்றுக்கு பிரதமர் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, 'கிட்டு' யாழ்ப்பாணம் திரும்பி விட்டார் என்ற செய்தியை விடுதலைப்புலிகள் மறுத்துள்ளனர். இவை தவறான அபிப்பிராயம் கொள்ளவைக்கும் செய்திகள் என்று புலிகளின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இதேவேளை சில மேலைநாட்டு அரசாங்ககங்கள் இன நெருக்கடிக்கும் தற்போதைய சிவில் யுத்தத்துக்கும் தீர்வாக சில ஆலோசனைகளடங்கிய நகல் ஒன்றை அனுப்பியுள்ளன என்ற செய்தியையும் அப்பேச்சாளர் மறுத்தார்.



ஆய தமிழ்க் கலைவாணி – நின்னருள்
பாயும் துறையெலாம் பண்ணாகும்!
தூய வெள்ளைக் கமலமும் – வீணையும்
கையுமே உலகின் கண்ணாகும்!
–சங்கர்

# தமிழக சட்டசபையில் பத்திரிகையாளருக்கு கண்டனம்

(நமது சென்னை நிருபர்)

சபை உரிமையை மீறியதாக சென்னையிலிருந்து வெளிவரும் 'முரசொலி' நாளிதழின் ஆசிரியர் திரு செல்வம் இம்மாதம் 21ஆம் தேதியன்று காலை தமிழக சட்டப் பேரவையில் கூண்டில் ஏற்றிக் கண்டிக்கப்பட்டார். பத்திரிகையாளர் ஒருவர் இப்படிக் கண்டிக்கப்பட்டது தமிழக சட்டப்பேரவை வரலாற்றிலேயே இதுதான் முதல் தடவை.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 9ஆம் தேதி நிகழ்ந்த சட்ட சபைக் கூட்டத்தில் சபைக் குறிப்புகளிலிருந்து சபாநாயகரால் நீக்கப்பட்ட பகுதிகளை முரசொலியில் வெளியிட்டது தொடர்பாக திரு செல்வம் இத்தகைய கண்டனத்துக்கு உள்ளானார். இந்த விடயம் பற்றி சபாநாயகர் விடுத்த உத்தரவு காதுகளில் தெளிவாக விழவில்லை என்று திரு செல்வம் தமது கட்டுரையில் பிற்குறிப்பு ஒன்றை வெளியிட்டிருந்தார்.

திரு செல்வத்துடன் மற்றும் இரு பத்திரிகையாளர்கள் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. ஆனாலும் அவர்கள் உயர்நீதிமன்றம் சென்று தடை உத்தரவு ஒன்றைப் பெற்றதால் சட்டசபைக்கு வரவில்லை.

திரு செல்வம் சபை முன் கொண்டுவரப்பட முன்னர் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவர்மீது இரக்கம் காட்டும்படி சபாநாயகரிடம் கோரிக்கை எழுப்பினார்கள். "பத்திரிகையாளர்களை பரந்த மனப்பான்மையுடன் இந்த சபை நடத்திவரும் ஒரு பாரம்பரியம் இருக்கிறது" என்று திமுக, கம்யூனிஸ்ட், (மா) கம்யூனிஸ்ட், ஜனதாதளம், பாட்டாளி மக்கள் கட்சி, அண்ணா திமுக கட்சிகளின் உறுப்பினர்கள் சபாநாயகரை கோரினார்கள். இக்கோரிக்கையை சபாநாயகர் நிராகரித்ததால் அவர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தார்கள்.

இது "துக்ககரமான தினம்" என்று அறிந்த திமுகவினர் கறுப்பு ஷேர்ட், கறுப்பு கைப்பட்டி அணிந்து "அதிமுக ஆட்சியின் கீழ் பத்திரிகைச் சுதந்திரத்தின் மீது, பேச்சு சுதந்திரத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்!" என்று கண்டனம் தெரிவித்தார்கள். வெளிநடப்புக்குப்பின்னர், எதிர்க்கட்சி உறுப்பினர் அமரும் பகுதியில் முன் வரிசைக்கு அருகே அமைக்கப் பட்டிருந்த விசாரணைக் கூண்டில் வந்து முரசொலி ஆசிரியர் செல்வம் நின்று சபைக்கு வணக்கம் தெரிவித்தார்.

அவையின் சார்பில் தன் கண்டனத்தை பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா தெரிவித்தபின் செல்வம் வெளியேறினார்.

# படையினருக்கு எச்சரிக்கை

(கொழும்பு நிருபர்)

லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ மற்றும் இராணுவ, கடற்படை அதிகாரிகள் அராலித்துறையில் ஆகஸ்ட் 8ஆம் தேதி நிலக் கண்ணி வெடியில் கொல்லப்பட்டது தொடர்பாக விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட தனிநபர் விசாரணைக் கமிஷன், முன்னரெப்போதோ புதைத்து வைக்கப்பட்ட அமுக்க கண்ணி வெடியே இதற்குக் காரணம் என தெரிவித்திருக்கிறது.

ஆணையாளரான ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ஐ.எம்.இஸ்மாயில், இராணுவ அதிகாரிகள் பிரயாணஞ்செய்த வாகனம் அதற்கு மேலாக சென்றதால் வெடிப்பு ஏற்பட்டதாக தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தன்னுடைய அறிக்கையை கடந்தவாரம் பாதுகாப்பு அமைச்சுக்கு சமர்ப்பித்த ஆணையாளர், அக்கண்


(16ம் பக்கம் பார்க்க)

லண்டனிலிருந்து வெளியாகும் அனைத்துலக தமிழர் பத்திரிகை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

முதலாவது

# பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் சாயி

லண்டன் சுரேந்திரா-சுவர்ணா தம்பதிகளின் அருந்தவப்புதல்வன் செல்வன் சாயி தனது முதலாவது பிறந்தநாளை **19.9.92** சனிக்கிழமையன்று மனோர் பார்க் தமிழ் இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடினார். இவரைத் தமிழ் ஈழத்தில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, மாமா, மாமி, பிள்ளைகள், பெரியப்பா, சித்தப்பா, பாட்டி, பெரிய அம்மப்பா, பெரிய அம்மம்மா ஆகியோரும் லண்டனில் வசிக்கும் அம்மம்மா, மாமாமார், மாமிமார், பிள்ளைகள், பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார் ஆகியோரும், கனடாவில் வசிக்கும் மாமா, மாமி, மச்சாள், சித்தப்பா, சித்தி ஆகியோரும் நோர்வேயில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, பிள்ளைகள் ஆகியோரும் ஏனைய உற்றார் உறவினர்களும் எங்கள் சாயி குட்டியை பல்லாண்டு காலம் சகல நலங்களும் வளங்களும் சிறந்து வாழ்க என்று மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் வாழ்த்தினார்கள்.


# இப்படியும் சொன்னார்கள்

உலகத்தின் முதலாவது பெண் பிரதமராக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவு செய்யப்பட்டு பதவிப்பிரமாணம் செய்துகொண்ட 32வது ஆண்டுநிறைவை கொண்டாடுமுகமாக அத்தனகல தொகுதியின் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி நித்தம்புவ என்ற இடத்தில் கடந்தவாரம் ஏற்பாடு செய்த கூட்டத்தில் திருமதி சிறிமாவோ பேசும்போது கூறியது:

"இலங்கையின் ஜனாதிபதியாக தான் ஒரு நாள் பதவிக்கு வர முடியும் என்று அமைச்சர் தொண்டமான் கனவு காண்கிறார் அந்தக் கனவு பலிக்காது! மலையக மக்களில் 60 சதவிகிதத்தினர் எங்கள் கட்சியையே ஆதரிக்கிறார்கள்!"

மாத்தறையில் நடந்த கூட்டம் ஒன்றில் ஸ்ரீமாவோ அம்மையார் பேசும்போது:

"..நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் அந்தப்பதவியை நீண்டகாலம் வைத்திருக்க மாட்டேன்! சர்ச்சைக்குரிய தற்போதைய ஜனாதிபதி ஆட்சி முறையை கழற்றி அகற்றிவிட்டு மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஜனநாயக ஜனாதிபதி ஆட்சி முறையை மீண்டும் ஏற்படுத்துவேன்!..."

ஐ.தே.க.தற்போதைய அரசாங்கத்தின் நீதி உயர் கல்வித்துறை அமைச்சர் ஹமீட் இலங்கை நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் பேசும்போது கூறியது:

"சிங்கள, தமிழ் மொழிகளை அரசகருமங்களுக்கு பயன்படுத்தும் விஷயத்தில் மொழிபெயர்ப்பாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள் மற்றும் இதர ஊழியர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மூன்று மொழிகளையுமே பயன்படுத்தும் ஒரு மும்மொழி நாடாக இலங்கை மாறவேண்டும். மொழிகளுக்கிடையில் உள்ள பிளவுகள் வேறுபாடுகள் அகற்றப்பட வேண்டும். சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் மத்தியில் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் மனப்பான்மை ஏற்பட வேண்டும். மொழி அடிப்படையிலான துவேஷத்தை ஒவ்வொரு ஊழியரும் களைந்துவிட முன்வர வேண்டும்!"

-விமல்

# பொலிஸ் அதிகாரி கொலை

(கொழும்பு நிருபர்)

கொழும்பு மோசடி புலனாய்வு பிரிவு பொலிஸ் அதிபரான திரு அந்தனிப்பிள்ளை தியோபிலஸ்(57) கடந்த புதன் மாலை கொம்பனித் தெரு யூனியன் பிளேஸில் இனந் தெரியாத நபர் ஒருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தம்முடைய காரிலிருந்து இறங்கி சிறிது தூரம் நடந்து சென்றபோது அவர் மீது சரமாரியான குண்டுகள் பொழியப்பட்டதும் அவர் ஸ்தலத்திலேயே மரணமானார். அப்போது அவருடைய மகள் காரினுள் இருந்தார். கொலையாளியும் அவரின் சகாக்கள் மூவரும் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் சனநெரிசலில் தப்பிச் சென்றுவிட்டதாக கூறப்படுகிறது.

தியோபிலஸ் முன்னர் ஏறாவூரில் உதவி பொலிஸ் அதிபராக கடமையாற்றி 1986இல் தீவிரவாதிககளின் தாக்குதலை துணிச்சலோடு எதிர்கொண்டதில் பதவி உயர்த்தப்பட்டார். 17 வயதான அவருடைய புதல்வர் ஒருவர் மட்டக்களப்பில் தீவிரவாதிகளால் 1986இல் கொல்லப்பட்டார்.



ஐக்கிய இராச்சிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் 15ஆவது ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 12ஆம் திகதி ஈஸ்ற்ஹாம் லண்டன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. நியூஹாம் மேயர் பில் சாப்மன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.


தமிழோசை

சந்தா படிவம்

தமிழோசை பத்திரிகையை அஞ்சலில் பெற கீழ்க்காணும் விண்ணப்பப் பத்திரத்தை பூர்த்தி செய்து அதற்கான பணத்தையும் காசோலையாகவோ அல்லது தபால் கட்டளையாகவோ அனுப்பி வைக்கவும்.
(Please mark Cheques or Postal Orders Payable to "THAMIZHOSAI")

Name: ______________

Address: ______________

Postcode: ______________

| | UK/Europe | Other Countrys |
|---|---|---|
| 12 Issues | £ 7.00 | Us $ 20.00 |
| 24 Issues | £ 12.00 | Us $ 40.00 |

PLEASE SEND THIS FORM TO
THAMIZHOSAI
253, WESTERN AVENUE
LONDON W3 0PP
UNITED KINGDOM



டீப்த்தி படப்பிடிப்பாளர்கள்

* தங்களின் விசேஷ வைபவங்கள்
பிறந்த நாள் விழாக்களா!
* பூப்புனித நீராட்டு விழாக்களா!
திருமண வைபவங்களா!
* எதுவானாலும் நவீன Mixture இன்
உதவியுடன் நான்கு தொழில்
நுட்பம் கூடிய வீடியோ கமராக்கள் மூலம்
படப்பிடிப்பு செய்து தருபவர்கள்
அத்துடன் சிறந்த முறையில் புகைப்
படங்களும் எடுத்துக் கொள்ள
நீங்கள் தொடர்பு கொள்க.



ஜெவி.வே.த.காண்டீபன்
அல்லது
கெ.குமார்
அல்லது
அ.யோகா

தொலைபேசி:081 855 7862



For All Your Legal Needs
SRI KANTH & CO
SOLICITORS
N.Balakrishnan L.L.B
S.Srikanthalingam B.A
Assistant
Mrs Kamalika Ratnayake

SRI KANTH & CO
1st Floor
604 High Road
Wembley
Middx HA0 2AF
TEL:081 795 0648
FAX:081 795 0649
MOBILE: 0831 195979

www.tamilarangam.net

# நெருக்கடி நிலையில் இராணுவம் புலிகளின் தாக்குதல் தொடரலாம்

**ஏ.ஸி.எம். சாலி**

கிழக்கு மாகாணத்தில் இவ்வார ஆரம்பத்தில் தங்களின் தாக்குதல்களை மீள ஆரம்பித்ததிலிருந்து திடமான தாக்குதலுக்கான இராணுவ பலம் இன்னமும் தங்களுக்கு இருக்கிறது; பின்வாங்கும் நடவடிக்கைகளில் தாம் இல்லை என்பதை, கடந்த வாரம் பாதுகாப்புப் படைகள் பண்டத்தரிப்பை கைப்பற்றி, பின்னர் அங்கிருந்து மாதகலுக்கு திரும்பிச் சென்று விட்டாலும், விடுதலைப்புலிகள் இந்த சமிக்ஞையை கொழும்புக்கு துல்லியமாக தெரிவித்திருக்கிறார்கள்.

ரோந்துவந்த 23 படைவீரர்கள் கடந்த திங்கள் அதிகாலை வாழைச்சேனைக்கு வடக்கேயுள்ள காயாங்கேணியில் புலிகளின் தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டார்கள். இவர்களிடமிருந்த ஆயுதங்களிலும் பெருமளவிலானவை அபகரிக்கப்பட்டன.திருகோணமலையில் மற்றொரு சம்பவத்தில் 9 இராணுவ வீரர்கள் புலிகளின் நில கண்ணி வெடிக்கு பலியானார்கள்.

கடந்த சுமார் 3 மாதங்களாக, குறிப்பாக, யாழ்ப்பாண குடாநாட்டில் பாதுகாப்பு படைகளின் வெற்றிகரமான நடவடிக்கைகளையடுத்து, கிழக்கிலும் எல்லைப்புறங்களிலும் புலிகள் தங்கள் பதில் தாக்குதல்களை, இராணுவத்தினரின் கவனத்தை திசைதிருப்புமுகமாக தீவிரப்படுத்தியிருக்கிறார்கள். எல்லைப்பகுதிகளில் உறுதியளிக்கப்பட்ட பாதுகாப்பையும் கிழக்கில் தங்களின் இராணுவ ஆதிக்கம் பற்றிய அதிகாரிகளின் கூற்றையும் விஞ்சிய புலிகளின் இந்நடவடிக்கைகள், பொதுவில், மிகவும் வெற்றிகரமானவையே. ஆயுதப்படையினருக்கு பாரிய இழப்பை இவை ஏற்படுத்தியிருக்கின்றன.

ஏப்ரலிலிருந்து இதுவரை சுமார் 575 படையினரை பாதுகாப்புப்படை இழந்திருக்கிறது. இது அதிகமான எண்ணிக்கையே. அத்துடன் இந்த இழப்புகளுக்கான தாக்குதல்கள் வேகமாக- குறைந்த கால இடைவெளிகளிலும் நிகழ்ந்தன. இது, இப்பொழுது புதிய ஆள்சேர்த்தலுக்காக அவசரப்படும் பாதுகாப்புப் படைகளை வெளிப்படையாகவே கவலையுற வைக்கிறது.

ஆனால், அநுபவத்தின் அடிப்படையில், புதிதாக ஆள்சேர்த்தல் என்பது அவ்வளவு எளிதாக இல்லை. அண்மையில் மாத்தறை இராணுவ முகாமில் நடைபெற்ற நேர்முகத் தேர்வுக்கு இரு இளைஞர்கள் மாத்திரமே வந்திருந்தார்கள். சிங்கள இளைஞர்களிடம் இந்த உற்சாக மின்மையைக்கண்டு புதிய நியமனங்களுக்கான கல்வித் தகைமைகளை இராணுவம் தளர்த்தியிருக்கிறது. இராணுவம் எதிர்நோக்கும் மற்றொரு பிரச்னை இரகசியமாகவே வேலையிலிருந்து நின்றுவிடுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பாகும். விடுமுறைகளில் வீடுகளுக்குச் சென்ற பலர் வேலைக்கு திரும்பவில்லை.

இந்த நிர்ப்பந்தங்களும் புதிய ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதிலான நிதி நெருக்கடியும் பாதுகாப்புபடைகள் வடக்கு கிழக்கில் தமது இராணுவ நடவடிக்கைகளை தாமதப்படுத்த வைக்கின்றன.

இது இராணுவ உயர்பீடங்களில் அச்சத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தும் அதேவேளை புலிகள் தம்மை மீள அமைத்துக் கொள்ளவும், புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வாய்ப்பாகின்றன.

அத்துடன் இது, எல்லைப்பகுதிகளில் சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு உத்தரவாதமிடப்பட்ட பாதுகாப்பை அளிப்பதிலும் பாதுகாப்பு படைகளின் வலுவை பாதிப்படையச் செய்திருக்கிறது. புலிகளின் அண்மைக்கால தாக்குதல்களினதும்- அவர்கள் இனியும் மேற்கொள்ளக்கூடிய தாக்கு தல்களின் அச்சத்தினதும் விளைவாக கணிசமான அளவு எண்ணிக்கையினரான சிங்கள கிராம வாசிகள் எல்லையான மதவாச்சித் தொகுதியிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதாக அப்பிரதேசத்தவரான சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முதிர்ந்த தலைவர் திரு மைத்திரிபால சேனநாயக்க முறையிடுகிறார்.

ஆனால் அரசாங்கம் பாரதூரமான நிதி நெருக்கடியில் இருக்கிறது. இது, பதிவு செய்யப்பட்ட 477 அகதி முகாம்களில் தங்கியிருக்கும் வடக்கு கிழக்கு பகுதி அகதிகளின் வாழ்வை மேலும் பரிதாபமுறச் செய்யும் விதத் தில் செப்டம்பர் முதலாந் தேதியிலிருந்து அகதிகளுக்கான அரசின் நிவாரண உதவியை அரைமடங்காக வெட்டியதிலிருந்து புலனானது. யாழ்.குடாநாட்டிலான அண்மைக் கால இராணுவ நடவடிக்கைகளையடுத்து அங்கு இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை சரியாக தெரியாவிட்டாலும் பலவிதங்களில் அதிகரித்திருக்கிறது.

இந்த நிலைமை வழக்கமாக விளம்பரத்தை விரும்பாத இராணுவ கமாண்டர் லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்தின யுத்தத்தை தாக்கமாக முன்னெடுக்கவும் விடுதலைப்புலிகளை இராணுவரீதியல் பலவீனப்படுத்தவும் அரசாங்கத்திடம் கூடுதல் நிதியை பகிரங்கமாகவே கேட்பதற்கு தூண்டியது. ஆனால் உடனடியாக அரசுஅதைச் செய்து விடக்கூடிய ஒரு நிலையிருக்கிறதென்பதற்கான அறிகுறிகள் எதுவுமே இல்லை. இப்படியான ஒரு பொருளாதார மந்த நிலையில், அடுத்துவரும் வாரங்களில் மேலும் புலிகளின் தாக்குதல்களை இராணுவ வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன. எப்படியெனினும், புதிய நடவடிக்கைகளில் ஈடபடுவதை விட நிலைமையை சமாளிக்க வேண்டிய ஒரு நெருக்கடி இது.

## தமிழன் என்று சொல்லடா

**சரவெடி**

கூண்டு தெரியுமா, ஐயா, கூண்டு? கிளிக்கூண்டு அல்ல; சட்ட சபைக் கூண்டு; நீதிமன்றக் கூண்டை விடப் புனிதமானது. வரலாறு படைத்து வரும் தமிழக முதல்வர் ஜெயலலிதா பத்திரிகையாளர்களுக்கென புதிதாகக் கட்டி வைத்த கூண்டில் திமுக நாளேடு முரசொலியின் ஆசிரியர் எஸ்.செல்வம் செப்டெம்பர் 21-ஆம் தேதி ஏறி நின்று அவை உறுப்பினர்களின் உரிமையை மீறியதற்காக அவையின் கண்டனத்தைப் பெற்றுக் கொண்டார். அவையின் உரிமை என்னவோ ஏதோ தெரியாது, பத்திரிகையாளர்கள் வாயைத் திறக்கக்கூடாது என்பதே எழுதாத சட்டம். நாளை ஒரு வேளை வரலாறு ஜெயலலிதாவுக்காக வேறு ஒரு கூண்டை உருவாக்காதா என்று ஒரு அறுந்த வால் கேட்கிறது. கொஞ்சம் பெரிய கூண்டு தேவை! அவ்வளவு தான்.

*****

தமிழர் வாழ்வுரிமை மாநாடு என்ற பெயரில் பேரணி, பொதுக் கூட்டம் என்று நடத்தி சென்னையையும் ஜெயலலிதாவின் வயிறையும் ஒரு சேரக்கலக்கிய பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் டாக்டர் ராமதாஸ், அக்கட்சியின் ஒரே சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் இருவரும் கைதாகி, ஜாமீனில் விடுதலையாகி மீண்டும் கைதாகி இருக்கிறார்கள். பிரிவினை பேசுவதாகக் குற்றச்சாட்டு. பேசுகிறார்கள் என்பதும் உண்மை. ஆனால் பஞ்சாப் தீவிரவாதிகளை, விடு தலைப்புலிகளை, பாமக தலைவர் களை ஆட்சியாளர்கள், எதிர்க் கட்சிகள் தங்களுக்குத் தேவைப்படும் பொழுதெல்லாம் அடுத்தவர்களை தர்ம சங்கடப்படுத்த ஆதரிக்கிறார்கள். தாமே தர்ம சங்கடப் படும் பொழுது கை கழுவி விடுகிறார்கள்; தண்டிக்கவும் செய்கிறார்கள். ஆனால் ஒன்று, விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்கு முன்பே பாட்டாளி மக்கள் கட்சியைத் தடை செய்திருக்க வேண்டும் என்பது விபரமறிந்தவர்கள் கருத்து. என்ன செய்வது, விபரமறிந்தவர்கள் எப்பொழுதும் அரசியலுக்கு வெளியே அல்லவா இருக்கிறார்கள்! அதுதான் சுதந்திரமோ?

*****

ஜெயலலிதா மீது ஊழல் பட்டியல் தயாரித்து கருணாநிதி ஆளுநரிடம் கொடுத்திருக்கிறார்; அதற்கு முன்பே ஜெ.கருணாநிதி மீது ஊழல் விசாரணைக் கமிஷன் அமைந்திருக்கிறார். கருணாநிதியின் பட்டியல் எல்லாப் பத்திரிகைகளிலும் முழுமையாக வெளிவந்தது. ஜெயலலிதா அரசு விலாவாரியாக இந்த விசாரணைக் கமிஷன் விளம்பரங்களை வெளியிட்டிருக்கிறது. இப்படி ஒருவர் மீது மற்றவர் சேறு வாரி இறைத்துக் கொண்டிருக்க, ஊழலில் புரட்டப் பட்டதாகச் சொல்லப்படும் பெருந் தொகை எல்லாம் மக்களின் வரிப் பணம், (தொழிலதிபர்கள் தம் பணத்தைப் போட்டாலும், அதை தம் தயாரிப்புகளின் கூடுதல் விலையாக மக்களிடமிருந்து கறந்து விடப்போகிறார்கள்!) ஆயினும் மக்கள் இதையெல்லாம் சினிமாக் காட்சி போல ரசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஐ.ஏ.எஸ்.அதிகாரிகள் மட்டும் கருணாநிதி மீது பாய்ந்திருக்கிறார்கள். எல்லோரும் அல்ல; ஒரு சிலர்; அவர்களிடேயும் கோஷ்டி. நாங்கள் அத்தனைபேரும் உத்தமர்கள் என்று அவர்கள் சொல்லத்தயாராக இல்லை. விரைவில் ஓரிரு ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் அரசியலில் குதிக்கலாம்.

*****

மதுரையில் கூடல் நகர்ப்பகுதியில் சனிக்கிழமை நள்ளிரவு இலங்கைத் தமிழர் என்று சந்தேகிக்கப்படும் ஒரு இளைஞர், ரோந்து வந்தபோது தன் பணியைச் செய்த ஒரு சப் இன்ஸ்பெக்டரைச் சுட்டுக்கொன்று, இரண்டு போலீஸ்காரர்களைக் காயப்படுத்தி, ஒரு ஆட்டோ ரிக்ஷாவில் தப்பி விட்டார். அவரை அடையாளம் காண அகதிகள் முகாமில் அணிவகுப்பு. கொன்ற பின்பும் அவர் முகாமில் தங்கி இருப்பாரா என்ன? புலிகள் நடமாட்டம் இல்லை என்று சாதித்து வந்த ஜெயலலிதாவுக்கு இது இலங்கைத் தமிழர் ஒருவர் தந்த சூடு! மூன்று இலங்கைத் தமிழர்கள் இப்பொழுது கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

# செய்திச் சரம்

07.09.92

### தமிழ்க் கட்சிகள் சந்திப்பு

இனப்பிரச்சனை தீர்வு தொடர்பான ஏழு தமிழ்க்கட்சிகளின் அவசரசந்திப்பு கொழும்பில் நடைபெற்றது.ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரசின் இழுத்தடிக்கும் போக்குகளைக் கண்டித்து ரெலோ இயக்கம் வெளியேறியது தொடர்பாக இதர கட்சிகள் ஆராய்ந்தன.

தீர்வுத்திட்ட ஆலோசனைகளை 11 ம் திகதி பாராளுமன்ற தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் பதிலளித்துள்ளது.

08.09.92

### பதவியேற்பு

வட கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அவைத் தலைவர் திரு.பொன் ராம் ராஜகாரியர் இரண்டரை வருட கால தலைமறைவிற்குப் பின்னர், திருமலை நகர் சென்று, முன்னைய மாகாண சபை அலுவலகத்தில் தனது பதவியை பொறுப்பேற்றுள்ளார்.திடீரென இடம் பெற்ற இப்பதவிப் பொறுப்பேற்பு தொடர்பாக தமக்கு எதுவும் தெரியாதென,இவரை முன்னர் பதவியில் அமர்த்திய ஈபிஆர்எல்எப் அமைப்பு கூறியுள்ளது.

### திருகோணமலையில் இராணுவம் பலி.

திருமலை குரங்குப்பாலம் அருகே பாலம்போட்டாறில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பதுங்கித் தாக்குதலில், 8 இலங்கை இராணுவத்தினர் கொல்லப்பட்டு ஐவர் காயமடைந்துள்ளனர். கண்ணி வெடியை வெடிக்க வைத்து, மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இராணுவம் மீளத்தாக்கியதாகத் தெரியவரவில்லை.பின்னர் அப் பகுதியைச் சூழ்ந்த மேலதிக படையினர், அப் பகுதியில் தேடுதல் நடாத்தி, அங்கிருந்த 7 பொது மக்களை விசாரணைக்காக முகாமிற்கு அழைத்துச் சென்றனர்.

9.9.92

### மணலாற்றில் 14 படையினர் பலி.

முல்லைத்தீவு மாவட்ட மணலாறு (வெலிஓயா) பகுதியில், ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைப் படையணி ஒன்று நிலக்கண்ணி வெடியில் சிக்கி, குறைந்தது 14 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். வழமையான ரோந்துப் பாதையில் மேற்படி இராணுவத்தினரைத் தாங்கிய ட்ரக் வண்டி செல்கையில், விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியில், இவ் இராணுவத்தினர் பலி கொள்ளப்பட்டனர்.

அன்று மாலை விடுதலைப் புலிகள் நடமாட்டம் அவதானிக்கப்பட்ட இப் பகுதியை அண்மித்த காட்டுப் பகுதிகள் மீது, விமானங்கள் குண்டுகள் வீசித்தாக்கியுள்ளன. சேதவிபரங்கள் அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை, வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெறுவதாகவும்,பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு விபரங்கள் வெளியிடப்படாதென்றும், பிரதமர் டி.பி.விஜயதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

10.09.92,

### அதிகரிக்கும் அகதிகள்

யாழ்ப்பாண குடாநாட்டில் தற்பொழுது, 188 அகதி முகாம்களில் 17 ஆயிரத்தி 367 குடும்பங்கள் தஞ்சம்புகுந்துள்ள அதே வேளை, 52 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் முகாம்களிற்கு வெளியே அகதிகளாக வாழவைக்கப்பட்டுள்ளனர்.பூமியதிர்ச்சி இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர், இவ் அகதிகளின் தொகை 2 இலட்சத்து 43 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

யாழ் குடாநாட்டில் உள்ள சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் அகதிகளாக உள்ள நிலையில்,மேலுமொரு இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டால் முழு குடாநாடுமே அகதிகள் முகாமாகிவிடுமென யாழ் பிரஜைகள் குழு மற்றும் பொது ஸ்தாபனங்கள் ஜனாதிபதிக்கு எழுதிய மகஜரில் தெரிவித்துள்ளன. இன்நிலையில் அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் அரசு' இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டுமென்றும். அப்படியானால்' அதனை பரிசீலனை செய்ய விடுதலைப் புலிகளை தாம் வற்புறுத்த முடியுமென்றும் இவ் அமைப்புகள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

19.09.92,

### பாதுகாப்பை உறுதிசெய்க

யாழ் குடாநாடு மீதான இராணுவ நடவடிக்கையின் போது,பொது மக்கள் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டுமென, செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவின் யாழ்ப்பாண பிரதிநிதி திரு.ஜேன். பிராங்கோயி,யாழ் மாவட்ட இராணுவ பிரிகேடியர் தலுவத்தையிடம் வலியுறுத்தியுள்ளார்.

இருப்பினும்,கடற்பகுதிகளில் இருந்து வீசப்பட்ட ஷெல் வீச்சுக்களில் யாழ் நகரப் பகுதிகளில் சில பொது மக்கள் காயமடைந்து,13 வயது சிறுவன் கொல்லப்பட்டுமுள்ளார்.

### கைது

தமிழ் நாட்டில் சுயநிர்ணய உரிமையைக் கோரியும்,ஈழத்தில் விடுதலைப் புலிகளிற்கு ஆதரவு தெரிவித்தும் ஆர்ப்பாட்டம் செய்த பாடடாளிகள் மக்கள் கட்சி டாக்டர் ராமதாஸ், பண்ணுருட்டி ராமச்சந்திரன், ப.நெடுமாறன்,உட்பட சுமார் 1500 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது தேசத்துரோக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இக்குற்றச் சாட்டிற்கு ஆகக் கூடுதல் தண்டணை ஆயுட்கால சிறைவாசமாகும்.

20.09.92,

### தேடுதல் நடவடிக்கை

புத்தளம் மாவட்ட தமிழ்க் கிராமமான உடப்பில், அரச படைகள் திடீர் தேடுதல் வேட்டையை நடாத்தின.பல இளைஞர் யுவதிகள் விசாரிக்கப்பட்டு,சிலர் முகாமிற்கு கூட்டிச் செல்லப்பட்டுள்ளனர்.

புலிகள் உறுப்பினர்கள் சிலர் இப்பகுதிக்குள் ஊடுருவியிருப்பதாக வெளிவந்த செய்தியே இத் தேடுதலிற்கு காரணம் எனக் கூறப்பட்டுள்ளது. இதேவேளை கொழும்பு மாவட்டம் அதன் சுற்றுப் புறப்பகுதிகள், மற்றும் நீர்கொழும்பு பகுதியிலும் திடீர் தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்து வருகின்றன.

### சுரங்கப்பாதை

தென்னிலங்கை பெல்வத்தை தடுப்பு முகாமில் இருந்து,60 அடி நீளமான சுரங்கப் பாதையமைத்து ஜே.வி.பி. சந்தேக நபர்கள் பலர் தப்பியுள்ளனர்.இம் முகாமில் சுமார் 2000 ஜே.வி.பி. சந்தேக நபர்கள் இருந்துள்ளனர்.பாதுகாப்பு மிக்க இத் தடுப்பு முகாமில்,60 அடி நீள சுரங்கப் பாதையமைக்க தேவையான கருவிகள் அங்கு எப்படி வந்தன என்பது குறித்து விசாரணைகள் நடைபெறுகின்றன.

21.09.92,

### பொலிஸ் அதிகாரி பலி

புலிகள் இயக்க உறுப்பினர் என சந்தேகிக்கப்படும் ஒருவரின்

19ம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலக அரங்கில்
# இவ்வார அரசியல் கள கண்ணோட்டம்

- விமல் சொக்கநாதன் -

## பிரெஞ்சு மக்கள் தெரிவித்த 'ஆமாம்' வாக்கு!

ஐரோப்பிய ஒருமைப்பாடு பற்றி மாஸ்ரிக்கில் உருவாக்கப்பட்ட உடன்படிக்கையை உறுதிப் படுத்துவதா நிராகரிப்பதா என்று பிரெஞ்சு மக்கள் மத்தியில் நடாத்தப் பட்ட கருத்தறியும் வாக்கெடுப்பில் 50.6 சதவிகிதத்தினர் அதனை ஆதரிக்க, 49.3 சதவிகிதத்தினர் வேண்டாம் என்று நிராகரித்திருக் கிறார்கள்.

ஜூன் மாதத்தில் டென்மார்க் மக்கள் மத்தியில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் டேனிஷ் மக்கள் இதனை பெரும்பான்மையாக நிரா கரித்தமை குறிப்பிடத்தக்கது. இப் போது எல்லோர் கவனமும் திரும்பிருப்பது பிரிட்டனின் மீது என்பது கவனிக்கப்படவேண்டும். காரணம்; ஐரோப்பிய நாடுகள் சமூகத்தின் இவ்வாண்டு தலைவராக பிரிட்டன் பதவி வகிக்கிறது. அடுத்த காரணம்; மஸ்ரிக் கூட்டத்தை பிரிட்டன் உறுதிப்படுத்த நடவ டிக்கை எடுக்கப்படுமா என்று எழுந்திருக்கும் கேள்வி. ஐரோப்பிய சமூகத்தின் தலைவர் என்ற முறையில் பிரிட்டிஷ் பிரதமர் மேஜர் ஐரோப் பிய தலைவர்களின் கூட்டம் ஒன்றை ஒக்டோபரில் கூட்டப்போவதாக அறிவித்திருக்கிறார்.

எது எவ்வாறாயினும் மாஸ்ரிக்கில் கைச்சாத்திடப்பட்ட ஐரோப்பிய உடன்ப்டிக்கை சட்ட பூர்வமான ஒரு உடன்படிக்கை. பிரான்சில் நேற்று 'ஆம்' என்று 50.6 சதவிகிதத் தினர் வாக்களித்திருப்பதால் இதன் சட்ட வலிமை இன்னும் செல்லுபடி யாகும். காலாவதியாக மாட்டாது.

ஐரோப்பிய குடும்பத்தின் 12 நாடுகளில் பெல்ஜியம், நெதர் லாந்து, இத்தாலி, போத்துக்கல், ஸ்பெயின் ஆகியன ஐரோப்பிய நாணய ஐக்கியத்தை முழுமையான பொருளாதார ஐக்கியத்தை- ஏற்றுக் கொண்டுள்ளன. எனவே மாஸ்ரிக் உடன்படிக்கை இந்த நாடுகளின் நாடாளுமன்றங்களில் உடனடியாக அங்கீகாரம் பெறவிருக்கிறது.

ஜேர்மனியிலோ- ஜேர்மன் பொது மக்களுக்கு தமது ஜேர்மன் 'மார்க்' நாணயத்தை கைவிட்டு பலம்மிக்க தமது 'பண்டஸ்பாங்' மத்திய வங்கியைக் கைவிட்டு, ஏதோ ஒரு புதிய பெயரில் ஒரு ஐரோப்பிய நாணயத்தை ஏற்றுக்கொள்ளல், புதிய மத்திய வங்கியிடம் தமது கொள்கைகளை கையளித்தல் பிடிக் கவே பிடிக்கவில்லை என்றாலும்- மாஸ்ரிக் உடன்படிக்கைக்கு ஜேர் மனியின் நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் அமோக ஆதரவு திரண்டிருக்கிறது.

ஐரோப்பிய நாடுகள் சமூகத்தின் தலைமைப்பதவி அடுத்த வருடம் டென்மார்க்கிடம் போகும்போது மாஸ்ரிக் உடன்படிக்கையை ஒரு சில நிபந்தனைகளுடன் டென்மார்க் ஏற்றுக்கொள்ளும் என்றே நம்பப் படுகிறது.

பிரிட்டனின் முடிவும் தெரிவிக்கப் பட்டால் அடுத்த ஆண்டு நடுப்பகுதி யில் (அதாவது 6 மாதம் தாமதமாக) மாஸ்ரிக் உடன்படிக்கை நடைமுறைக்கு வந்துவிடும்.

### பந்தாடிய £ பவுண்ட் நாணயம்

கடந்த புதன்கிழமை செப்டெம்பர் மாதம் 16ம் தேதி பிரிட்டனில் நிதித்துறை சம்பந்தப்பட்டவர்கள் வியப்படைந்த நாள். சாமான்ய பொதுமக்கள் குழப்பமடைந்த நாள்!


10 சதவிகித்மாக இருந்த வங்கி வட்டி விகிதம் 12 சத விகிதமாக உயர்த்தப்படும் என்று BANK OF ENGLAND(இங்கிலாந்தின் மத்திய வங்கி) காலை 11 மணிக்கு அறிவித் தது. பொதுமக்கள் கலங்கிப் போய் உட்காரஅடுத்த 3 மணி நேரத்தில் வங்கி மீண்டும் ஒரு அறிவித்தலை விடுத்தது. மேலும் 3 சதவிகிதம் அதிகரிப்பதாகவும் புதிய வட்டி விகிதம் 15% என்றும் வங்கி அறி வித்தது.

லண்டனின் மாலைச் செய்தித் தாளான Evening Standard 12 அங்குல நீளத்தில் 15% என்று முதற்பக்கத்தில் அச்சிட்டு தன் சோகத்தை வெளிப்படுத்தியது.

தத்தம் வீடுகளில் போய் பொது மக்கள் ஓய்வெடுக்க ஆரம்பித்து Televisionஐத் திருப்பினால் நிதி அமைச்சர் தோன்றினார். வட்டிவிகிதம் 15% அல்ல 12% தான் என்று கூறினார். சற்று நேரத்தில் ஐரோப்பிய நாணய அமைப்பி லிருந்து பிரிட்டன் வெளியேறுவதாக அறிவிக்கப்பபட்டது.

அடுத்த நாள் காலை மத்திய வங்கி மீண்டும் விடுத்த அறிவித்தலில் 12% வட்டி விகிதமல்ல பழைய 10% இருக்கும் என்றும் அறிவித்து மக் களை ஆறுதலடையச்செய்தது! இப்போது 09 % ஆக்கப்பட்டி ருக்கிறது. இந்த BANK OF ENGLAND . பந்தாட்டத்தினால் பிரிட்டன் சுமார் £15 பில்லியன் கையிருப்பை இழக்க நேரிட்டது! இதனால் பிரிட்டிஷ் நிதி அமைச்சர் லமோன் பதவியை விட்டு ராஜிநாமாச் செய்ய வேண் டும் என்று பத்திரிகைகளும், ஆளும் கட்சிக்குள் இருந்த சிலரும் எதிர்க் கட்சிகளும் கூக்குரல் எழுப்பினர். பிரதமரின் தலையீட்டினால் அமைச் சரின் பதவி காப்பாற்றப்பட்டது. பந்தாடப்பட்டது எமது பாக்கெட்டி லிருந்த £ நாணயத்தின் பெறுமதி தான். இன்று அதன் பெறுமதி சுமார் 10 அல்லது 12% கீழே இறங்கிவிட்டது!

## ராவ் ராஜ்யம்




### 'ராவ் ராஜ்யம்!'

உலகப்புகழ் பெற்ற அமெரிக்க 'ரைம்' சஞ்சிகையின் முன் அட்டை யில் ஒருவரது பட்ம் வரவேண்டு மானால் அவர் ஒரு உலகப்புகழ் பெற்ற தலைவராக இருக்க வேண் டும் அல்லது உலகில் பயங்கர கேடியாக இருக்க வேண்டும் அல்லது பசியால் நோயினால் வாடும் அனாதைச் சிறுவனின் 'எலும்புக் கூடாக' இருக்க வேண்டும்.

கிழக்குலக நாடடுத்தலைவர் ஒருவரின் படம், அதுவும் ராணுவ ஆள் அம்பு அதிகாரமுள்ள ஒரு அதிகாரி இல்லாத ஒரு சாமான்யத் தலைவரின் படம் ரைம் சஞ்சிகை யின் ஆகஸ்ட் 31 இதழை அலங் கரித்தது. அந்தத் தலைவர் பி.வி. நரசிம்மராவ்! 867 மில்லியன் மக் களின் தலைவர்! இந்தியக் குடியரசின் பிரதமர்! அதுவும் தென்இந்தியர் என்பது குறிப்பிடத்தக்கது. 71 வய தான நரசிம்மராவ் அவர்கள் தென் இந்திய மாநிலமான ஆந்திராவைச் சேர்ந்தவர். வழக்கறிஞர், கவிஞரும் கூட. 71ம் ஆண்டில் ஆந்திரா முதல்வராகத் தெரியப்பட்டு பின் இரண்டு வருடங்களில் கவிழ்க்கப் பட்டு அஞ்ஞாதவாசம் ஆரம்பித்த இவரை புதுடில்லிக்கு கொண்டு வந்தவர் அன்னை இந்திரா அவர் கள். காங்கிரஸ் கட்சியின் செய லாளராக இவரை அமர்த்திய இந்திரா அவர்கள் 1977ல் இவரை நாடாளுமன்ற தேர்தலில் நிற்க வைத்து வெற்றி பெறச் செய்தார்.

பாரதத்தின் வெளியுறவு அமைச் சர், உட்துறை அமைச்சர், பாது காப்பு அமைச்சர் இப்படி பல பதவிகளில் அமர்ந்திருக்கிறார் இந்த முத்த அரசியல்வாதி.



கடந்த ஆண்டு ஜூன் மாதம் இந்தியாவின் வெளிநாட்டு நாணய கையிருப்பு வீழ்ச்சி அடைந்து நிதி நிலமை மோசமாகி நெருக்கடி உருவாகியது. ராவ் தீவிரவாத சீர்திருத்தங்களை அறிவிக்க முடிவெடுத்தார்.

* இந்தியநாணயப் பெறுமதி குறைப்பு
* வெளிநாட்டு மூலதனங்களை ஈர்க்க புதிய சட்டங்கள்

இந்தப் புதிய சட்டங்களை பிரதமர் அறிவித்ததும் வெளிநாட்டு செல்வந்த நிறுவனங்கள் அமெ ரிக்காவின் IBM, FORD, GENERAL ELECTRIC, ஐரோப்பா வின் BMW ஜப்பானின் FUJITSU உட்பட பல நிறுவனங்கள் தமது கிளைகளை இந்தியாவில் நிறுவ ஆரம்பித்தன. அதிகாரிகளின் கெடு பிடி துண்டிக்கப்பட்டது. வர்த்தக சட்டங்கள் தளர்த்தப்பட்டன. இந்தி யாவின் வெளிநாட்டு நாணயக் கையிருப்பும் வெளிநாட்டு மூல தனமும் அதிகரித்தது. முன்னைய வருடத்தைவிட அந்த வருடம் 15 மடங்கு அதிகமான வெளிநாட்டு நாணயம் நாட்டிற்குள் வந்து சேர்ந் தது!

பொருளாதாரத்துறையில் மட்டு மல்ல உள்ளூர் அரசியலிலும் ராவ் தமது அனுபவ முதிர்ச்சியைக் காட்டி வருகிறார்.

'அயோத்தியா' புனித நகரில் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் இடையில் உருவான பூசல் பூகம்பமாக உருவெடுக்கும் அபாயம் ஏற்பட்டது. வி.பி.சிங்கின் ஜனதாதள அரசு கவிழ்வதற்கு காரணமாக இருந்த இந்த அயோத்தியா விஷ யத்தில் பதற்ற நிலை உருவான போது ராவ் அயோத்தியாவின் இந்துமதத் தலைவர்களுக்கு விமா னம் அனுப்பி புதுடில்லிக்கு வர வழைத்துப் பேசினார். ராவ் அவர்களின் அமைதியான குரலில் கட்டுண்ட அந்த தலைவர்கள் தமது இந்துக் கோயிலை- ராமர் கோயிலை வேறு இடத்துக்கு- பிரச்னையற்ற இடத்துக்கு மாற்ற சம்மதித்தார்கள்.

இந்திய நீதிமன்றத்தின் தடை உத்தரவுகளை அவமதித்து தகர்த் தெறிந்த இந்துக்கள் பிரதமரின் ராஜ தந்திரத்துக்கு அடிபணிந் தார்கள். பயங்கர வெடிகுண்டாக கருதப்பட்ட அயோத்தியா விவ காரம் ராவ் அவர்களால் தீர்க்கப் பட்டமை எதிர்க்கட்சியான BJP கட்சிக்கு (இந்து முஸ்லிம் பிரச் னையை தனக்கு சாதகமாக்க விரும்பிய BJP கட்சிக்கு) பலத்த ஏமாற்றம்!

107 ஆண்டுகாலமாக காங்கிரஸ் கட்சிக்குள் நிலவும் கெடுபிடியான பல சட்டங்களை இலகுவாக்கி யிருக்கிறார். அமைச்சரவையிலும் எதிர்ப்புக்குரல், வாக்குவாதம் இருப் பதை அனுமதிக்கிறார்.

இவற்றையெல்லாம் ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் சோனியா பிரதமர் பதவியை மறுத்ததால் ஏதோ தற்செயலாக பதவிக்கு வந்த தற்காலிகப் பிரதமர் போல இவர் தோன்றவில்லை. சிறு பான்மை அரசின் தலைவர் ஒரு சில நாட்களில் போய்விடுவார் என்ற கருத்தும் மாறிவிட்டது.

1990ல் இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்டவர். உடல்நிலை விட்டுக்கொடுக்காது என்றும் பலர் எண்ணினார்கள். ஆனால் பிரதமர் நரசிம்மராவோ தமது உள்ளூர் வெளியூர் அரசியல் சாதனைகளில் உடல் சுகயினங்களை காற்றில் பறக்க விட்டுவிட்டார்.

அவரது தோளைச்சுற்றி சதா காணப்படும் அங்கவஸ்திரம்அன்று அவரை ஒரு நோயாளியாக காட் டியது! இன்றோ அதே அங்க வஸ்திரம் ஒரு அதிகார தோர ணையை அவருக்கு வழங்குகிறது!

## ஒரு காதல் கதை



### இது ஒரு காதல் கதை!

அமரர் ராஜீவ் காந்தி அவர்கள் இபபோது உயிருடன் இருந் திருந்தால் கடந்த ஆகஸ்ட் 20ம் தேதி 48வயது பூர்த்தியாகியிருக்கும். உயிருடன் இருந்திருந்தால் பிறந்த நாள் பரிசு வழங்கியிருக்க வேண்டிய அவரது மனைவி சோனியா, அந்த ஆகஸ்ட் 20ம் தேதி அவரது நினை வுச்சின்னமாக ஒரு நூலை எழுதி வெளியிட்டிருந்தார். நூலின் பெயர் 'ராஜீவ்'.

ஒரு அரசியற் தலைவரைப் பற்றிய வாழ்க்கைச் சரிதம் அல்ல இந்த நூல்! எழுத்தாற்றல் மிக்க நூல்! ஆனால் கைம்பெண் ஆக்கப் பட்ட ஒரு காரிகை தன் இனிய நாட்களை நினைவு கூர்ந்து பார்க்கும் சோகத்தை அங்கு காணமுடிகிறது.

14ம் பக்கம் பார்க்க




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மன்றத்தில் ஒலித்த பேருரைக் கீற்றுகள்

# கருத்து மறுக்கப்பட்டால் புரட்சி வெடிக்கிறது



அமிர்தலிங்கம்

**இலங்கைப் பாராளுமன்றத்தில் நிகழ்ந்த சில முக்கியமான உரைகளின் தொடரில் முதலாவதாக, புதிய குடியரசு அரசியலமைப்பு தொடர்பாக 1978 ஆகஸ்ட் 3ஆம் தேதி திரு அ.அமிர்தலிங்கம் ஆற்றிய உரையின் இரண்டாவது பகுதி இங்கு பிரசுரமாகிறது.**

## ஒரு பயமுறுத்தலாகவே கூறுகிறேன் -அமிர்தலிங்கம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கௌரவ சபாநாயகரவர்களே, அதன் பின் இந்த அரசாங்கம் அரசியலமைப்பைத் திருத்துவதற்காக தெரிகுழுவொன்றை நியமித்தது. அந்தத் தெரிகுழுவிலே நாங்க்ள் பங்குபற்றுவதா அல்லவா என்பதை நாங்கள் யோசிக்க வேண்டியவர்களாக இருந்தோம். தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்னைகள் எல்லோரினதும் சம்மதத்தின் அடிப்படையிலும் தீர்த்து வைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முடிவின்பின் தெரிகுழு நியமிக்கப்பட்டிருந்தால், எமக்கு ஏற்புடைத்தான ஒரு தீர்ப்பை அமுல் நடாத்துவதற்கான ஓர் அரசியல் அமைப்பைத் தயாரிப்பதற்கு அந்தத் தெரிகுழு நியமிக்கப்பட்டிருந்தால்

1970ஆம் ஆண்டு தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் அதன் கூட்டுக்கட்சிகளும் கேட்டதுபோல் இனி அடுத்து வரும் ஒரு தேர்தலில் ஓர் அரசியல் கட்சி 12ஆவது அத்தியாயத்துக்கு வெளியே போய் மக்களின் ஆணையைப் பெற்று ஓர் அரசியல் நிர்ணய சபை மூலம் ஒரு புது அரசியலமைப்பை யாப்பதற்கு உரிமை வேண்டும் என்று கேட்கும் உரிமைகூட மறுக்கப்பட்டிருக்கிறது.

நாங்கள் அதிற் பங்கு கொள்வது பற்றி யோசித்திருப்போம். ஆனால், தமிழ்த் தேசிய இனத்தைப் பற்றிய பிரச்னைகள் குறித்து எவ்வித முடிவும் எடுக்காத கட்டத்திலே எம்மை அந்தத் தெரிகுழுவிலே கலந்து கொள்ளும்படி அழைத்தபொழுது- கௌரவ பிரதமர் அவர்கள் அன்புடன் அழைத்தார்கள்- நாம் அதிற் கலந்து கொள்ள மறுத்தோம். எமது தமிழர் விடுதலைக் கூட்டணியினது நடவடிக்கைக் குழு நிறைவேற்றிய தீர்மானம் அந்தக் காரணங்களைத் தெளிவாகக் காட்டுகிறது:

## நடவடிக்கைக்குழு தீர்மானம்

“தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்த் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் ஈழ விடுதலையைக் காண்பதே இலட்சியமாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட காரணத்தினாலும்-

தேர்தலின் பின் இந்த நாட்டில் நடந்து முடிந்த வன்முறைச் சம்பவங்கள் தமிழ் ஈழ இலட்சியம் தவிர வேறெதுவும் இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களுக்கு பாதுகாப்பையும் நல்வாழ்வையும் தரமாட்டாது என்பதை உறுதிப்படுத்துவதாலும்-

இவ்வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனர் வாழ்வு அளிப்பதையொட்டி அரசும் அதன் நிருவாக இயந்திரமும் மாற்றான்தாய் மனப்பான்மையோடு நடந்து வருவதனாலும்-

தேர்தலில் தமிழ் மக்கள் அளித்த தீர்ப்பையும், அதன் பின்பு நாட்டில் நடந்த சம்பவங்களின் தாக்கத்தையும் கருத்துக்கு எடுத்து தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்னையைத் தீர்க்க வேண்டும் என்ற ஆர்வமும் அவசரமும் அரசுக்கு இருப்பதாகத் தோன்றாதபடியாலும்-

ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் தானும் அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கு முன்பு சர்வ கட்சித் சம்மதத்தைப் பெற்று தமிழ் பேசும் மக்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படாதபடியாலும்-

இச் சூழ்நிலையில் அமைக்கப்படும் பாராளுமன்றத் தெரிவுக் குழு இந்த நாட்டிலுள்ள இத்தேசிய இனங்களுக்கு இடையிலான பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கும் தகுதியோ சூழ்நிலையோ இருப்பதாகத் தோன்றாதபடியாலும்-

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியலமைப்பை மாற்றி அமைப்பதற்கான தெரிவுக் குழுவில் கலந்து கொள்வதில் எவ்வித பயனும்இல்லையென்று நடவடிக்கைக் குழு கருதி அக்குழுவில் கலந்து கொள்ள வேண்டாமென்று பாராளுமன்றக் குழுவைப் பணிக்கிறது”

எமக்கு எமது கட்சியினுடைய செயற்குழு இட்ட கட்டளைப்படி நாம் அந்தத் தெரிவுக்குழுவில் கலந்து கொள்ளாமல் விட்டோம்.



சேர் ஜோன்கொத்தலாவல

அந்தத் தெரிவுக்குழுவில் யாக்கப்பட்டதாக கூறப்படும் அரசியலமைப்புத்தான் இப்பொழுது இங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

## யாப்பில் இல்லாத பகுதிகள்

கௌரவ சபாநாயகர் அவர்களே, தெரிவு குழுவின் அறிக்கையோடு ஓர் அரசியலமைப்பு யாப்பு இந்த சபையிற் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், அந்த யாப்பிலே இல்லாத சில பகுதிகள் இப்பொழுது நாம் விவாதிக்கும் சட்ட மூலத்தில் இடம் பெற்றிருப்பதை நாம் காண்கிறோம். இன்று நாம் விவாதிக்கும் அரசிலமைப்புச் சட்டமூலத்தின் 20ஆம் 21ஆம் அத்தியாயங்கள் தெரிவுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட யாப்பில் இருந்தவையல்ல. ஆனால் இந்த இரண்டு அத்தியாயங்களும் மிக மிக பாரதூரமான மாற்றங்களையும் தாக்கத்தையும் ஏற்படுத்துவனவாக இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அப்படியானால் தெரிவுக் குழுவை அமைத்த நோக்கம் என்ன? அது வெறும் கண்துடைப்பா? தெரிவுக்குழுவொன்றை வைத்து அந்தத் தெரிவுக்குழு அரசியலமைப்பை மாற்றுவதாக கூறிவிட்டு, அதன்பின் தெரிவுக்குழுவுக்கு அப்பாற்சென்று வேறுபல திருத்தங்களைக் கொண்டதாக ஓர் அரசியலமைப்பை கொண்டு வருவதில் என்ன நோக்கம் இருக்கிறது என்பதை நாம் யோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.


20ஆம் அத்தியாயம் எமக்கு மிக முக்கியமானது. இந்த அரசியலமைப்பின் 157ஆம் விதி எல்லோரும் கவனிக்க வேண்டிய ஒன்று. இந்த விதி வருங்காலத்தில் எந்த ஓர் அரசாங்கமும், எந்த ஒரு கட்சியும் தாம் ஓர் அரசியல் நிர்ணய சபையை அமைத்து ஒரு புது அரசியல் திட்டத்தை யாப்பதற்கு அனுமதி கோரும் உரிமையை மறுக்கிறது. 157ஆம் விதியின் கீழ், 1970ஆம் ஆண்டு தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் அதன் கூட்டுக்கட்சிகளும் கேட்டதுபோல் இனி அடுத்து வரும் ஒரு தேர்தலில் ஓர் அரசியல் கட்சி 12ஆவது அத்தியாயத்துக்கு வெளியே போய் மக்களின் ஆணையைப் பெற்று ஓர் அரசியல் நிர்ணய சபை மூலம் ஒரு புது அரசியலமைப்பை யாப்பதற்கு உரிமை வேண்டும் என்று கேட்கும் உரிமைகூட மறுக்கப்பட்டிருக்கிறது.

## சனநாயக மறுப்பு

இது மக்களின் சனநாயக உரிமையைக் கட்டுப்படுத்தும் மிகப் பாரதூரமான ஒரு சட்டம். மக்களின் இறைமையை எந்த வகையிலும் கட்டுப்படுத்தக்கூடாது என்றால் மக்கள் தங்கள் வாக்கினால் அரசியலமைப்பை ஓர் அரசியல் நிர்ணய சபை மூலம் திருத்துவதற்கு உரிமை அளிக்க, அரசியற் கட்சிகள் அந்த உரிமையைக் கேட்க ஏன் அரசியற் கட்சிகளுக்குச் சட்டபூர்வமான தடையிருக்க வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது. ஆனபடியால், இதன் பலாபலன் மிகவும் பாரதூரமானதாக இருக்கும். இப்பொழுது கொண்டுவரப் போகும் தேர்தல் முறை, எந்த ஒரு கட்சியும் மூன்றில்

எங்கே கட்டுப்பலமாக இருக்கிறதோ- எங்கே சனநாயக ரீதியாகக் கருத்தைக் கூறுவதற்கு வாய்ப்பு மறுக்கப்பட்டிருக்கிறதோ -அங்கே வெடிப்பு ஏற்படுகிறது, உடைப்பு ஏற்படுகிறது; அங்கே பிரளயம் ஏற்படுகிறது; அங்கே புரட்சி ஏற்படுகிறது. அந்த விதமான ஒரு சூழ்நிலைக்கு உட்படுத்துகின்ற ஒரு விதியாக- தெரிவுக் குழுவினாற்கூட ஆராயப்படாத ஒருவியாதியாகஇது கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை நான் இச்சபையிலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறாமல் தடுத்து விடும் என்பது எங்களுக்குத் தெரியும். எந்த ஒரு கட்சியும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறாமல் தடுத்துவிட்டு, அப்படி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றாலும் எந்த ஒரு கட்சியும் இந்த அரசியலமைப்பை, 12ஆவது அத்தியாயத்தின்படி, திருத்த இடமில்லாமற் செய்துவிட்டு- 12ஆம் அத்தியாயத்திற்கு வெளியே போய் அரசியலமைப்பைத் திருத்த வேண்டுமென்று கேட்பதே, கேட்க வேண்டுமென்று கூறுவதே சட்ட விரோதம், அப்படிக் கூறுபவரை அது பத்து ஆண்டு சிறைவாசத்துக்கு உள்ளாக்கும், அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தால் அப்படிக் கூறுவது அவர் பதவியை இழக்கச் செய்யும் குற்றம்,



சொலமன் பண்டாரநாயக்க

ஓர் அரசியல் கட்சி கூறினால் அது அந்தக் கட்சியினுடைய வேட்பாளர் பட்டியலையே ரத்து செய்யக்கூடிய குற்றம் என்று விதித்து வைத்து- இந்த நாட்டிலே, வருங்காலத்திலே மிகவும் பாரதூரமான அரசியல் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு விதியாக அது ஆக்கிவைக்கப்பட்டுள்ளது என்பதை இங்கே நான் கூறிவைக்க விரும்புகிறேன். எங்கே கட்டுப்பலமாக இருக்கிறதோ-எங்கே சனநாயக ரீதியாகக் கருத்தைக் கூறுவதற்கு வாய்ப்பு மறுக்கப்பட்டிருக்கிறதோ- அங்கே வெடிப்பு ஏற்படுகிறது, உடைப்பு ஏற்படுகிறது; அங்கே பிரளயம் ஏற்படுகிறது; அங்கே புரட்சி ஏற்படுகிறது. அந்த விதமான ஒரு சூழ்நிலைக்கு உட்படுத்துகின்ற ஒரு விதியாக- தெரிவுக் குழுவினாற்கூட ஆராயப்படாத ஒரு வியாதியாக இது கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை நான் இச்சபையிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## உரிமைக்கு கிளர்ச்சி

எந்தக் காலத்திலாவது நாங்கள் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைக் கொண்டு இந்த அரசியலமைப்பை மாற்றி எங்களுடைய உரிமையைப் பெற முடியாது. ஏனென்றால் நாம் எமது உரிமையைப் பெறுவதற்கு இந்நாட்டிலே கிளர்ச்சி செய்யத்தான் வேண்டும். இந்த நாட்டிலே நாங்கள் அமைதியான முறையிலே மக்கள் மத்தியிலே பிரசாரம் செய்யத்தான் வேண்டும். இந்த அரசியலமைப்பை மாற்ற வேண்டும். எமது இறைமை நிலைநாட்டப்பட வேண்டும். எமது உரிமைகள் அங்கீகரிக்கப்படவேண்டும். இதற்காக நாம் கிளர்ச்சி செய்யத்தான் வேண்டும். சனநாயக ரீதியாக, சாத்வீக முறையிலேகூடக் கிளர்ச்சி செய்வதற்கு, அதை மாற்ற வேண்டுமென்று வாதாடுவதற்கு உரிமையை மறுக்கின்றது இது. இங்கேதான் இந்த விதியின் இரண்டாவது தாக்கம். அதுமாத்திரமன்றி, 1976ஆம் ஆண்டு நாம் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை எடுத்தபொழுது முந்திய அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்த சட்டவிதிகளை, இந்த அரசாங்கம் அரசியலமைப்பிலேயே கொண்டு வருகின்றது, 157ஆவது விதியின் கீழ். ஒருவேளை இது நடைமுறைக்கு வந்தபின்பு அரசாங்கம் விரும்பிய நேரத்திலே என்னையும் எனது சகாக்கள் அத்தனை பேரையும் அடைக்கலாம்; நீதிமன்றத்திலே நிறுத்தலாம்; 10 வருடங்கள் எங்களைச் சிறைக்கு அனுப்பலாம்; சொத்துக்களைப் பறிமுதல் செய்யலாம். ஆனால், இந்தச் சட்டமூலத்தையும் தெரிந்து கொண்டுதான் சென்றவாரம் இறுதியிலே ஞாயிற்றுக்கிழமை கூடிய எமது கட்சியினுடைய மகாநாட்டிலே நாம் முடிவு எடுத்திருக்கிறோம் என்ன பலன் கிடைத்தாலும், என்ன

மது இலட்சியத்தை-எமது இனத்தின் விடுதலைக்காகிய இலட்சியத்தை நோக்கிச் செல்வதற்கு, அதனால் வருகின்ற பலாபலன் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு செல்வதற்கு நாம் தீர்மானித்திருக்கிறோம்.

தண்டனை எமக்குக் கிடைத்தாலும் அவற்றால் நாம் அச்சுறுத்தப்பட மாட்டோம்; அவற்றுக்கு நாம் அடிபணியமாட்டோம் என்று. எமது இலட்சியத்தை- எமது இனத்தின் விடுதலைக்காகிய இலட்சியத்தை நோக்கிச் செல்வதற்கு, அதனால் வருகின்ற பலாபலன் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு செல்வதற்கு நாம் தீர்மானித்திருக்கிறோம் என்பதை நான் இவ்விடத்திலே கூறி வைக்க விரும்புகிறேன்.

நான் இதனை இச்சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்டுவதன் நோக்கம் என்னவென்றால் எமது பிரச்னையைத் தீர்ப்பதற்குச் சர்வகட்சிச் சம்மத அடிப்படையிலே எம்முடன் பேசி ஒரு பரிகாரத்தைக் காணவோ எந்தவிதமான ஒரு முடிவும் எடுக்கவோ தவறிய ஒரு சூழ்நிலையிலே- அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலே கூறப்பட்ட அடிப்படையிலேகூட இந்தப் பிரச்னை தீர்க்கப்படாத ஒரு சூழ்நிலையிலே- நாம் நமது இறைமையை நிலைநாட்டக் கிளர்ச்சி செய்கின்ற சூழ்நிலையிலே, தெரிகுழுவுக்கும் தெரியாமல் தெரிகுழுவுக்கு அப்பால் போய் இப்படி ஒரு விதியை- 20ஆம் அத்தியாயத்திலே கூறப்பட்டிருக்கின்ற 157ஆவது விதி

8ம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# தமிழோசை

லண்டன் செப்டம்பர் 25, 1992


## வாழ்க நீ எம்மான்!

நம்மிடையே வாழ்ந்து வருகின்ற ஒரு பெரும் மனிதர் அவர். அவருக்குரிய சிறப்புகள்; அவர் புரிந்த – புரிகின்ற பணிகள்; அவரின் தனித்துவங்கள் அநந்தம். யாழ்ப்பாணத்து கரம்பொன் என்ற ஊரிலே பிறந்த இம் 'முதுபெரும் எழுத்தாளர்' திரு சோ. சிவபாதசுந்தரம் அவர்களின் இலக்கிய ஈடுபாடு தமிழ் நாட்டிலே – தமிழ்நாட்டவர் போலவே அவரை உணரவைத்தது.

பத்திரிகைத்துறையிலே; ஒலிபரப்புத் துறையிலே; சிறுகதை, நாவல் எழுத்துத் துறையிலே அவர் ஒரு முன்னோடியாகவே திகழ்கிறார் .

தமிழகத்தில் புதுமைப்பித்தன் போன்ற இலக்கியவாதிகளுடன் – குறிப்பாக, மணிக்கொடிக் குழுவினருடன் – அவர்களின் இலக்கியக் கொள்கையுடன் அவர் கொண்டிருந்த மிகநெருக்கமான உறவு ஈழத்து எழுத்தாளர்களையும் இனம்காணச் செய்திற்று.

சுன்னாகம் ஈழகேசரியில் திரு சிவபாதசுந்தரம் அவர்கள் ஆசிரியராகப் பொறுப்பேற்றதும் ஈழத்து எழுத்தாளரிடையே படைப்பிலக்கியத்தில் ஒரு புதிய உத்வேகம் பரிணமித்தது. அப்போது தான் இலங்கையர்கோன், சி.வைத்தியலிங்கம், க.தி.சம்பந்தன், கனக. செந்திநாதன் போன்றவர்கள் புதிய வகைச் சிறுகதைகளை அங்கே எழுதினார்கள்.

இலங்கை வானொலியிலே பணியாற்றியவர் லண்டன் பி.பி.சியின் தமிழ்ச்சேவைக்கு 'தமிழோசை' என்று பெயரிட்டு அங்கே பணியாற்றினார். அந்த அனுபவங்களிலே ஒலிபரப்புக் கலை என்ற அருமை வாய்ந்த நூலை அவர் எழுதினார். ஆசியுரை வழங்கிய ராஜகோபாலாச்சாரியார் 'ரேடியோ வாத்தியார்' என்றே இந்நூலுக்கு பெயரிட்டிருக்கலாம் என்றார்.

ஒலிபரப்புக் கலையிலே அப்படி ஒரு நூலை எழுதியவர் பயணக் கட்டுரையிலும் புதுமை செய்தார்.

கௌதமபுத்தர் அடிச்சுவட்டில், சேக்கிழார் அடிச்சுவட்டில், மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில் என்ற இப்பயணக் கட்டுரை நூல்கள் நதிமூலம், ரிஷிமூலம் தேடல் போன்றவை.

"ஆங்கிலேயர் சொல்லும் பிரயாண நூல் என்று சொல்லலாமா? சொல்லலாம்; ஆனால், இதில் மணக்கும் உன்னதமான பக்தி உணர்ச்சி அதில் இராதே! சரித்திரம் என்று சொல்லலாமா? சொல்லலாம்; ஆனால் பல பழைய செய்திகளைப் புராணக்குப்பை என்று அது விலக்கிவிடுமே!. 'புராணம்' என்று சொல்லலாமா? அதில் புதுமை இருப்பதில்லையே. கலையாராய்ச்சி என்று சொல்லலாமா? ஆராய்ச்சியிலே அனுபவமும் ரசனையும் தேடித்தானே கண்டு பிடிக்கவேண்டும்? இத்தனையும் சேர்ந்த ஒன்று என்று சொல்லிவிடலாம். கோயிலைப் போலவே இருக்கிறது நூலும்" என்று மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில் நூலுக்கு சிறப்புரையில் கி.வா.ஜ குறிப்பிட்டார்.

அப்புறம், ஆராய்ச்சித் திறனின் வெளிப்பாடுகள் 'தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும்', 'தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும்' நூல்கள். யாருமே வெளிக்கொணராத புதிய தகவல்களை இவை தருகின்றன. தேடலில் சலிக்காதவர். அவரது நூல்களின் நேர்த்தி அதைச் சொல்லும்.

இந்த ஆராய்ச்சித்திறன் இந்திய பல்கலைக்கழகங்கள் அவரை கௌரவிக்க வைத்தன.

ஸ்தாபன பலமின்றி, முழுக்க முழுக்க தனிமனித சாதனையாக – ஆற்றலின் சாதனையாகத் தன்னை நிலை நாட்டினார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பாலமானவர் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாகினார்; தமிழுக்கும் ஆங்கிலத்துக்கும் பாலமாகினார். இசை நாடகத்தில் ஞானம் கொண்டிருக்கிறார்; சமஸ்கிருதம் தெரிந்திருக்கிறார்.

மிக அரிதானவராகவே விளங்கிய இவர் வாழ்விலும் மிக அரிதான 'சதாபிஷேகத்'தையும் இருவாரங்களின் முன் கண்டார்.

லண்டனிலே 'தமிழோசை' என்ற ஒலிபரப்பை ஆரம்பித்தவர், லண்டனிலேயிருந்து 'தமிழோசை' என்ற இப் பத்திரிகையை ஆரம்பித்த வேளையிலும் அளித்த அளவிடற்கரிய பங்களிப்பு பாக்கியமே.

அந்த பிதாமகர், அவரது துணைவியார், பிள்ளைகள், குடும்பத்தினருடன் இன்னும் பல்லாண்டு இனிதே வாழ வேண்டுவதோடு, அவரின் சுயசரிதையை – விசேடமாக அவரின் ஈழகேசரி காலத்து அனுபவங்களை – நமக்கு நூலாக தரவேண்டுமென்ற ஒன்றை அவரிடம் கேட்போம்.

அதற்கான எல்லா நலன்களும் அவருக்குக் கிட்டுவதாக.

# யாருக்காக உரிமைகள்?

சென்னையில் உள்ள ஒரு மிகப்பெரிய ஜவுளிக் கடை முதலாளியின் பேரனுக்குப் பெயர் சூட்டு விழா செப்டெம்பர் 14ஆம் தேதி ஒரு மிகப் பெரிய கலை யரங்கில் மாஜிக் ஷோ, விருந்து என்று தட புடலாக ஒரு சமுதாயக் கலை விழா போல நடந்து கொண்டிருந்தது. அரங்கினுள் அமர்ந்திருந்த பொழுது ஏனோ 'துலா பாரம்' படத்தில் பொன் வட்டிலில் நெய்ச்சோறு உண்ணும் குழந்தையும் கஞ்சியின்றிக் கலசங்கள் ஆடுவது பற்றியுமான பாடல் என் நினைவுக்கு வந்தது. என்னால் அந்த நினைவைத் துரத்தி அடித்துவிட்டு விழா நிகழ்ச்சிகளில் லயிக்க முடியவில்லை. சற்று முன்ன தாகவே வீட்டுக்கு வந்ததும் தொலைக்காட்சியில் தமிழ்ச்செய்தி: சிவகாசியில் ஒரு பட்டாசுக் கிடங்கு வெடித்ததில் 13 பேர் பலி; 30 பேர் காயம். நல்ல வேளையாக குழந்தை கள் எவரும் பலியாகவில்லை. ஆனாலும் சோகம் சோகம் தானே.

தீபாவளிக்கு என்று தயாரிக்கப் பட்டு வந்த ராக்கெட் வெடிகள் அளவுக்கு மீறி வெயிலில் காய்ந் தபடியால் அவசரப்பட்டு வெடித்து விட்டன என்பது பத்திரிகைகளில் முதல் தகவல். தீபாவளிப் பட் டாசுகள், தயாரிப்பவர்களின் வாழ்க்கையை எப்பொழுதுமே ஒளிமயமாக்கு வதில்லை என்பது சோகம் தோய்ந்த நிஜம், குறிப்பாக சிவகாசியைப் பொருத்தவரை. அங்கே வெடி விபத்துகள் புதிதல்ல. சென்ற வருடம் 39 பேர் பலி யானார்கள்; பெரும்பாலும் குழந்தைகள். இது வரை அங்கே நடந்த எந்த வெடிவிபத்துகளும் அரசாங்கத்தின் கண்களைத் திறந்த தில்லை என்பதே உண்மை. அப்படி


## பொன் வண்ண கிண்ணத்தில் பால் கஞ்சி

ஒரு குருடா அரசாங்கம் என்று கேட்டுப் பயனில்லை. குருடு அல்ல; காந்தாரியைப்போல் கண்களைத் திறந்து பார்க்க மறுக்கிறது அரசாங்கம். அதுவே உண்மை; கொடூரமான உண்மை.

சிவகாசியில் உள்ள நூற் றுக்கணக்கான மத்தாப்பு, பட்டாசு, தீப்பெட்டித் தொழிற்கூடங்களில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் வேலை பார்க்கின்றன. வயது ஐந்து முதல் 12 வரை உள்ளவர்களே அதிகம். தூக்கம் கலையாத நேரத் தில் இந்த அரும்பாத மொட்டுகளை புரோக்கர்கள் பஸ்களில் அடைத்து தொழிற்கூடங்களில் உதிர்த்து விடு கிறார்கள்; அங்கே கையொடிய, இடுப்பொடிய ஏறத்தாழ 12 மணி நேரம் வேலை. கூலி ரூ 15 அல் லது 20. இதைக் கூடத் தாம் சம் பாதிக்க முடியாத பெரியவர்கள் குழந்தைகளை அங்கே அனுப்பி வைக்கிறார்கள். தாய்ப்பறவைகள் கூட இரைதேடி, அதைத்தன் வாயில் அடக்கி, குஞ்சுக் குருவியின் பவள வாய் திறந்து அதனுள் போடு வதைப் பார்க்கிறோம். இங்கே எல்லாமே தலை கீழ். குஞ்சுகள் இரைதேடி தாய், தந்தைகளின் வாயினுள் போடுகின்றன.

இதை விட சென்னை நகரில் நெருக்கடியான சாலைப்பகுதிகளில் வெயிலில் காய்ந்தபடியே சிசுக் களைக் காட்டி சிலர் பிச்சை எடுப்பது என்பது சிவகாசிச் சிட்டுக்களின் ஆபத்தை விடக் குறைவானதே. வீடுகளில் வேலை செய்யும் சிறுவர் சிறுமியர்பாடு கூட பரவாயில்லை. ஆனால் சிவ காசி, சென்னை வீதிகளில் நடப்பதைவிடக் கொடுமையான மழலையர் கொத்தடிமை பற்றிய செய்திகளும் இப்போது தெரிய வந்துள்ளன.

வட ஆர்க்காடு மாவட்டம் வேலூர் அருகே உள்ள சில கிரா மங்களில் பீடித் தொழிற்சாலைகளில் பீடி சுருட்டும் வேலையைச் சிறு வர் சிறுமியர் செய்கிறார்கள்.



## இன்னொரு 'சிறை'யில் இலங்கை பத்திரிகையாளர்

பட்டாசு சுருட்டு வதை விட இது ஆபத்து குறைவு; ஆனாலும் சிவ காசிக் குழந்தைகளைப் போன்ற சம்பளம் இவர்களுக்கு இல்லை. இவர்களை இவர்களது பெற்றோர் ஐநூறுக்கும் ஆயிரத்துக்கும் "தொடர் அடகு" வைத்திருக்கிறார் கள். அடகுபோகும் நகைகளை மீட்கும் ஏழைகளின் அவசரம், மானஅவமானம், இந்தக் குழந்தைத் தொழிலாளர்களைஅடகு வைத் திருப்பவர்களுக்கு இல்லை.

சிவகாசியிலும் வேலூரிலும் தலைமுறை தலைமுறையாக இந்த மழலைத் தொழிலாளர் கொடுமை, கொத்தடிமை தொடர்கிறது. ஒரு தலைமுறையில் இந்தக் கொடு மைக்குக் குழந்தைகளாக இருந்து ஆட்பட்டவர்கள் அடுத்த தலை முறையை விடுவிக்கத் தயாராக இல்லை. பெரியவர்களானதும் தனியே பீடி, பட்டாசுத் தொழிற் சாலைகளைத் தொடங்கி குழந் தைகளையே வேலைக்கு அமர்த்து கிறார்கள்.

எம்எல்ஏ தன்மகனும் ஒரு எம்எல்ஏ அல்லது எம்.பி. ஆக வேண்டும் என்று நினைக்கிறார்; மந்திரி தன்மகனையும் மந்திரி ஆக்க நினைக்கிறார்; தன்னைப்போலவே பிறரையும் நினைக்கவேண்டும் என்ற காரணத்தினாலோ என்னவோ குழந்தைத் தொழிலாளர்கள் வளர்ந்து பெரியவர்கள் ஆனதும் அதே துறையில் குழந்தைகளும் பரம்பரையாகத் தொடரட்டுமே என்று மிகவும் பெரும் தன்மையாக நினைக்கிறார்கள்.

வேறு எதையும், நினைக் கவில்லையா? ஐயா, அதற்கெல்லாம் ஏது நேரம்? போடும் கையெழுத்துக் கெல்லாம் காசு உண்டு என்று புதிய நியதியைக் கடைப்பிடிக்கும் அதிகாரிகள் ஆட்சியாளர்கள், முடிந்தால் இடது கை, மற்றும் இரு கால்களாலும் கோப்புகளில் கையெழுத்துப் போட்டுக் காசு சம் பாதிக்கத் தயார். இவர்களிடம் 'மழலையர் தொழிலாளர்கள்' என்ற கொடுமையைப் போக்க வேண் டும் என்ற கோப்பு வந்தால் படிக்கப்படாமல் அது குப்பைக் கூடைக்குப் போகும். அந்த மழ லையர்களுடனே தொழில் தொடங்க முன் வருபவர்கள் ஏதாவது காணிக்கையைக் கோப்புடன் வைத்தால் அந்தக் கோப்பு கவனிக் கப்படும்; விதி முறைகள் மட்டுமே அப்பொழுது குப்பைக் கூடைக்குப் போகும். விதி முறைகள் மட்டுமா, விதி வசத்தால் இந்தக் குடும்பங் களில் பிறக்க நேரிட்ட சின்னஞ்சிறு குழந்தைகளின் தலைவிதியும் கூட குப்பைக் கூடைக்குள் போய்விடும்.

மலராத மொட்டுகளை இப்படி வேலைக்கு அனுப்புவது சமுதாயக் கொடுமை அல்லவா? இது மனித உரிமை மீறல் இல்லையா என்று கேட்டுப் பயனில்லை. இந்தியாவில் இனி உருவாகக்கூடும் வறுமை நிலையை நம்மால் முன் கூட்டியே ஊகித்துப் பார்க்க முடியுமானால் இந்த சிவகாசிச் சிட்டுகள் அதிர்ஷ்ட சாலிகளே என்று சொல்லப்படக் கூடிய அளவுக்கு, இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் பள்ளிப் படிப்பு முடித்தவர்களுக்கு கொள்ளை கொள்ளையாகப் பணம் கொட்டிக்

### அகராதி

கொடுத்தால் மட்டுமே படிப்பு சொல்லித் தரப்படுகிறதோ இல் லையோ பட்டம் தரப்படும் என்ற இழி நிலைமை. படித்தாலும் வேலை கிடையாது என்றால் படிக்காமல் பால பருவத்தில் சிவகாசிப் பிள் ளைகளைப் போல வேலைக்குப் போவோம்; முடிந்தவரை சம்பாதிப் போம்; விதிவசத்தால் வரும் அபா யம் இருந்தாலும் பரவாயில்லை; பட்டினியில் வாடுவதை விட பட்டாசினால் சாவது மேல் என்று வளரும் தலைமுறை நினைக்கக்கூடும்; அந்த அளவுக்குக் கல்வி வேலை வாய்ப்புகள் குறைந்து விட்டன;




ஊழல், லஞ்சம், கொலை, கொள்ளை எல்லாமே அதிகமாகி விட்டன.

இந்தக் கூத்தில் யார் மனித உரிமை பற்றிப் பேச முடியும்? மனித உயிருக்கு உத்தரவாதம் இருந்தால்தான் உரிமை பற்றிப் பேச முடியும், உரிமையை அனுப விக்க முடியும்! ஆக மனித உரிமை கள் பற்றிய பேச்சுக்கள் சிவகா சியிலோ, வேலூரிலோ அன்றி வேறு இடங்களிலோ எழுவதில்லை. மற்றவர்கள் உரிமைபற்றி எழுதி நாம் ஏன் கஷ்டப்படவேண்டும் என்று தமிழ் நாட்டில் பத்திரிகை உலகம் கூட நினைத்து விட்டது. எழுதுவதுடன் பத்திரிகை உலகத்தின்

16ம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மன்றத்தில் ஒலித்த பேருரைக் கீற்றுகள்

5ம் பக்க தொடர்ச்சி

போன்ற ஒரு விதியை கொண்டு வருகின்ற இந்த அரசியலமைப்பின் விவாதத்திலே, இந்த அரசியலமைப்புக்கு ஆதரவாக நாம் எப்படிக் கலந்து கொள்ள முடியும் என்ற பகுத்தறிவு படைத்தவர்களை நான் இச்சந்தர்ப்பத்திலே கேட்க விரும்புகிறேன்.

## புரட்சியின் வித்து

கௌரவ சபாநாயகரவர்களே, புரட்சியின் வித்து இந்த விதியிலே விதைக்கப்பட்டிருக்கிறது. இதனை நான் ஒரு பயமுறுத்தலாகக் கூற விரும்புகிறேன். மற்ற நாடுகளின் அரசியல் வரலாற்றை அறிந்தவன் என்ற முறையிலே இப்படி சனநாயக ரீதியான உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வழி வகைகளை அடைத்து, இறுக்கமாகக் கொண்டு வரப்பட்ட அரசியல் அமைப்புகள் தான் பல நாடுகளிலே புரட்சிகளுக்கு வழி வகுத்தன என்று நான் இச்சந்தர்ப்பத்திலே மிகப் பொறுப்

ஒரு நாடு முதலீடு செய்திருக்கும் தனது பிரசைகளைப் பாதுகாக்க தனக்கு ஒரு படை வைத்திருக்க உரிமை வேண்டுமென்றும் ஓர் ஒப்பந்தம் எழுதலாம். அதற்குத் தடை இல்லை. அப்படி ஓர் ஒப்பந்தம் எழுதினாற்கூட அதை மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் இச்சபை ஏற்றுக் கொண்டால் வருங்காலத்து மக்கள் அதற்கு விரோதமாக நின்றாலும் கூட மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாத இடத்து அதை நீக்க முடியாது.

புணர்ச்சியோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். அது மாத்திரமல்ல. தெரிவுக்குழுவுக்கு வெளியால் ஏனைய எல்லா விதிகளையும் விளக்கிப்பேசினார்கள் கௌரவ பிரதம அமைச்சரவர்கள் நேற்று இச்சபையிலே. ஆனால், 20ஆம் அத்தியாயத்திலே 157ஆம், 158ஆம் விதிகளைப் பற்றி விளக்காமலும் அதனைப் பாராமலும் ஒதுங்கி நின்று தமது விளக்கங்களை அளித்ததிலிருந்து அவற்றிலே சிக்கல்கள் இருக்கின்றனவென்பதை பிரதம அமைச்சரவர்களே நன்கு அறிந்துள்ளார்கள் என்பது தெளிவாகின்றது.

இந்த 158ஆவது விதி உரிமைச் சாசனம் யாருக்கு? வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கும் வெளிநாட்டு மூலதனம் இடுவோருக்கும்தான். இலங்கையில் வெளிநாட்டவருக்கு இந்நாட்டவர்களுக்கு இல்லாத உரிமைகள் எல்லாம் அளிக்கின்ற உரிமைச் சாசனம்தான் இந்த 20ஆவது அத்தியாயத்தில் 158ஆவது விதி.

நான் நினைக்கவில்லை கௌரவ சபாநாயகர் அவர்களே சிங்கப்பூரில் கூட இப்படி ஒரு விதி வைத்திருக்கிறார்கள் என்று. இந்த விதியின் கீழ் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அங்கீகாரத்தோடு ஒரு வெளிநாட்டிற்கு உரிமை கொடுத்து ஓர் ஒப்பந்தம் எழுதலாம். இப்படி ஒரு ஒப்பந்தம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் இந்தச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அது அரசியல் அமைப்பின் ஓர் அங்கமாக வரும்.

## வெளிநாட்டவருக்கு உரிமை

கிட்டத்தட்ட அரசியல் அமைப்பின் ஓர் அங்கம்போல் அது கருதப்படும். அதற்கு விரோதமாக எந்தச் சட்டமும் நிறைவேற்றப்பட முடியாது. வருங்காலத்தில் ஓர் அரசாங்கம், நான் ஆரம்பத்தில் சொன்னதுபோல மூன்று இரண்டு பெரும்பான்மையுடன் வர முடியாது.



டொன் சேனநாயக்க

புதிய தேர்தல் முறையால் எந்த ஒரு கட்சியும் இனிமேல் மூன்றில் இரண்டு பெரும்பான்மைபெற முடியாது. அப்படியானால் எந்த ஒரு கட்சியும் இந்த விதியை திருத்த முடியாது. அப்படியானால் மக்கள் கட்டளை இட்டாற்கூட வருங்காலத்தில் பதவிக்கு வருகின்ற எந்தக் கட்சியும் வெளிநாட்டுடன் செய்துகொண்ட இத்தகைய ஓர் ஒப்பந்தத்தை இரத்து செய்ய முடியாது. அத்தகைய ஒப்பந்தத்துக்கு விரோதமாக முடியாது. அத்தகைய ஒப்பந்தம் எத்தன்மையானதாயும் இருக்கலாம். இதில் கூறப்படுகின்றது வெளிநாட்டினுடைய பிரசைகளை, அதாவது இந்த நாட்டில் வசிப்பவர்களை பாதுகாப்பதற்கான ஒப்பந்தமாகவும் அது இருக்கலாம் என்று. அப்படியானால் ஒரு நாடு முதலீடு செய்திருக்கும் தனது பிரசைகளைப் பாதுகாக்க தனக்கு ஒரு படை வைத்திருக்க உரிமை வேண்டுமென்றும் ஓர் ஒப்பந்தம் எழுதலாம். அதற்குத் தடை இல்லை. அப்படி ஓர் ஒப்பந்தம் எழுதினாற்கூட அதை மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் இச்சபை ஏற்றுக் கொண்டால் வருங்காலத்து மக்கள் அதற்கு விரோதமாக நின்றாலும்கூட மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாத இடத்து அதை நீக்க முடியாது. அதை இரத்துச் செய்யவும் முடியாது. இது உண்மையில் ஒரு மோசமான சூழ்நிலை.

ஒருவர் ராஜினாமா செய்துவிட்டால் அவருடைய இடத்துக்கு அந்தக் கட்சி வேறொருவரை நியமிக்கும். அவர் எங்கிருந்து வந்தவராகவும் இருக்கலாம். ஒரு வேளை அவர் கட்சித் தலைவருடைய சமையலறையில் வேலை செய்பவராகவும் இருக்கலாம். யாரையும் நியமிக்கலாம். கட்சி ஏற்றுக் கொண்டாற் சரி. அந்தத் தொகுதி மக்களுக்கு எந்த உரிமையும் கிடையாது.

வெளிநாட்டு மூலதனத்தை முடக்குவோருக்கு வெளிநாட்டுத் தலையீட்டிற்கு மிகப் பாரதூரமான வகையில் வழிவகுக்கும் ஒரு விதி இந்த விதி என்பதை இந்தச் சபை அங்கத்தினர்களுள் எத்தனைபேர் உணர்ந்து இருக்கிறார்களோ எனக்குத் தெரியாது. விசேடமாக, இளம் அங்கத்தவர்கள், பின் வரிசை அங்கத்தவர்கள் இந்த விதியைப் படிக்க வேண்டும். வருங்காலத்தையே அடகு வைக்கும் ஒரு விதி இது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இது தமிழ் மக்களின் பிரச்னைக்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும் நாமும் இதனால் பாதிக்கப்படுகின்ற மக்கள் என்ற வகையில் இதைச் சுட்டிக் காட்ட வேண்டிய கடமை எனக்குள்ளது. இந்த நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையிலும் இந்தப் பாரதூரமான தாக்கத்தை சுட்டிக்காட்ட வேண்டியது எனது கடமை.

## மக்கள் கருத்துக்கு மறுப்பு

இந்த தெரிகுழு என்ற குழுவை வைத்து விட்டு, அதற்குத் தெரியாமல் கொண்டு வரப்பட்ட இருபதாவது அத்தியாயமும், இருபத்தோராவது அத்தியாயமும் மிக விசித்திரமான, வேடிக்கையான அத்தியாயங்களாகும். உண்மையாக ஒருவேளை இந்தச் சபையிலே இருக்கிற எங்களுக்கு கட்சிகளாகத் தெரிவு செய்யப்பட்டு வந்திருக்கிற எங்களுக்கு, அதனால் தொல்லை இல்லாமல் இருக்கலாம். ஆனால், ஓர் இடைத் தேர்தலிற் தமது கருத்தை எடுத்துக்கூறுவதற்கான வாய்ப்பை மறுக்கின்ற விதிகள் இருபத்தோராம் அத்தியாயத்தில் அடங்கியிருக்கின்றன. மக்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் ஓர் இடைத்தேர்தலிலே தமது கருத்தை மக்கள் கூறமுடியாது. ஏனெனில் இடைத்தேர்தலே நடக்காது. இப்பொழுது நடந்து கொண்டிருக்கிற தேர்தல் வழக்குகளிலே யாராவது அங்கத்தவர் தமது பதவியை இழந்து அதனால் இடைத் தேர்தல் வந்தாலொழிய எந்த அங்கத்தவராவது இறந்தாலோ, எந்த அங்கத்தவராவது முன்பு எங்கள் இன்றைய சனாதிபதி அவர்கள் 1975ஆம் ஆண்டு செய்ததுபோலத் தம்முடைய பதவியை ராஜினாமாச் செய்து, “நான் ஒரு கொள்கையிலே மக்களின் தீர்ப்பைக் கேட்கப் போகிறேன்” என்று முடிபு செய்தாலோ ஓர் இடைத்தேர்தலை ஏற்படுத்த முடியாது.

கடந்த பாராளுமன்ற ஆயுட் காலத்திலே எந்த உரிமையை நிலைநாட்டினார்களோ அந்த உரிமை இன்று இந்தப் பாராளுமன்றத்திலே இருக்கின்ற அங்கத்தினர்களுக்கு மறுக்கப்படுகிறது. எந்த அங்கத்தவரும் அரசாங்கத்தில் அரசாங்கக்கட்சி அங்கத்தினராக இருக்கலாம். அவர் அரசாங்கம் செய்வது தவறு என்று நினைக்கலாம். மனச்சாட்சி உள்ளவர்கள் இருக்கிறார்கள். கட்சி யந்திரத்துக்குக் கட்டுப்பட மறுப்பவர்கள் இருக்கிறார்கள். தவறு என்று நினைக்கிற ஒன்றை வைத்து, “சரி நான் மக்களின் தீர்ப்பைக் கோரப் போகிறேன்” எனக் கூறுகிறவர்கள் இருக்கிறார்கள். வெளியே போய் பதவியை ராஜினாமா செய்து ஓர் இடைத்தேர்தலை ஏற்படுத்த அவர்களால் முடியாது. 1972ஆம் ஆண்டு எமது எதிர்க்கட்சித் தலைவர் திரு செல்வநாயகம் அவர்கள் ஒரு இடைதேர்தலை ஏற்படுத்தியதுபோல ஏற்படுத்த முடியாது. அப்படி ஒருவர் ராஜினாமா செய்துவிட்டால் அவருடைய இடத்துக்கு அந்தக் கட்சி வேறொருவரை நியமிக்கும். அவர் எங்கிருந்து வந்தவராகவும் இருக்கலாம். ஒருவேளை அவர் கட்சித் தலைவருடைய சமையலறையில் வேலை செய்பவராகவும் இருக்கலாம். யாரையும் நியமிக்கலாம். கட்சி ஏற்றுக் கொண்டாற் சரி. அந்தத் தொகுதி மக்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. அது எவ்வளவு பாரதூரமானது என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## உறுப்பினர்களின் கைவிலங்கு

சாதாரண அங்கத்தவர்கள் கட்சி நிர்வாகத்தின் கட்டளைக்கிணங்க யந்திரங்களாக மாற்றப்படுகிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சிக்கு இடம் கிடையாது. அவர்கள் தங்களுடைய மனச்சாட்சிப்படி கட்சியின் தலைமையை மீறிப்போக உரிமை கிடையாது. கட்சித் தலைமையை மீறிப் போனால் பதவி இழப்பாரென்றும் வைப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், பதவியை விட்டுப் போய் மக்களின் தீர்ப்பைப் பெறுகிற உரிமைகூட மறுக்கப்படுவதாக இருந்தால் நிச்சயமாக அது சனநாயகம் அல்ல என்பதைக் கூறிவைக்க வேண்டியது என்னுடைய கடமையாக இருக்கிறது. ஆளும் கட்சியினுடைய பின்வரிசை அங்கத்தவர்கள் இதை நிச்சயம் சிந்திக்கத்தான் வேண்டும்; அவர்களுக்குக் கைவிலங்கு போடப்படுகிறது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதனைக் கூறிவைக்கிறேன். நான் சொல்வதால் அவர்கள் எல்லாவற்றையும் தப்பாக நினைத்துக் கொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறேன். நான் ஒரு பொறுப்பான பதவியில் இருப்பவன் என்ற வகையில்தான் நான் இதனைப் பின்வரிசை அங்கத்தவர்களுக்குக் கூறிவைக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

சிங்களத்துக்கும் தமிழுக்கும் சமத்துவம் என்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சி 1956ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் தேதி களனியில் அதன் மகாநாட்டில் சிங்களம் மாத்திரம் என்னும் கொள்கையிடம் சரணாகதி அடைந்தது.

இப்பொழுது தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்னைகளைப் பொறுத்த வரையிலே இந்த அரசியலமைப்பில் மொழி விஷயத்தில் முன்பு இருந்ததிலும் பார்க்க முன்னேற்றம் இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

இந்த முன்னேற்றத்துக்கு கௌரவ பிரதமர் அவர்கள் கூறியது போல ஆளும் கட்சி மாத்திரமல்ல, எதிர்க் கட்சியில் இருக்கிற முந்திய



சிறிமா பண்டாரநாயக்க

பிரதமரும் அவருடைய கட்சியும் கூட ஆதரவு அளித்தனர். அதனால் தான் அது நிறைவேற்றப்படக் கூடியதாக இருந்தது என்பதை எடுத்துக் கூறினார்.

## மொழிச்சட்டங்களின் வரலாறு

கொரவ சபாநாயகர் அவர்களே, இந்த நாட்டின் மொழிச் சட்டங்களின் வரலாற்றை நாம் சற்று சிந்திப்பது பொருத்தமாக இருக்கும். நாம் ஒவ்வொரு நாளும் அரசியலமைப்பை விவாதிக்கப் போவதில்லை. ஆனபடியால் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த விவாதத்திலே பல கடந்த கால நிகழ்ச்சிகளை, இந்த சட்டங்களின் வரலாற்றை, இந்த இரண்டு தேசிய இனங்களுக்குமிடையிலான பிரச்னையின் பின்னணியை நான் எடுத்துக் காட்டுவது எந்த வகையிலும் தவறாகாது.

இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் 1944ஆம் ஆண்டில் இன்றைய சனாதிபதி கௌரவ ஜே.ஆர்.ஜயவர்த்தனா அவர்கள் அரசாங்க சபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள். அவர்கள் கொண்டுவந்த தீர்மானம், சிங்களம் இந்த நாட்டின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்பதாகும். அதற்கு அப்போது திருகோணமலை- மட்டக்களப்புப் பிரதிநிதியாக இருந்த திரு நல்லையா ஒரு திருத்தம் கொண்டு வந்தார். சிங்களமும், தமிழும் இந்நாட்டின் ஆட்சிமொழிகளாக இருக்கவேண்டுமென்பதே அந்த திருத்தம். 1944ஆம் ஆண்டு அந்த திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்த தீர்மானத்தின் அடிப்படையில்தான் அன்று தொடக்கம் ஆங்கிலத்திலிருந்து இந்நாட்டின் மொழிகளுக்கு மொழி மாற்று வேலை படிப்படியாக நடைபெற்று கொண்டு வந்தது.

இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற பொழுது அந்த அடிப்படையில்தான் சுதந்திரம் வழங்கப்பட்டது. அதாவது சிங்களமும் தமிழும் இந்நாட்டின் சமத்துவமான ஆட்சி மொழிகள் என்ற அடிப்படையில்தான் சுதந்திரம் வழங்கப்பட்டது. அந்நேரத்தில் காலஞ்சென்ற முதற் பிரதிநிதி டீ.எஸ்.சேனாநாயக்கா அவர்களோடு ஒத்துழைத்து நாடு சுதந்திரமடைந்ததற்கு அவருக்குப் பக்க பலமாக இருந்த முன்னாள் வவுனியாப் பிரதிநிதி திருவாளர் சுந்தரலிங்கம் அதைத் தெட்டத் தெளிவாக, 1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் இந்தச் சபையிலே விவாதிக்கப்பட்டபோது எடுத்து கூறினார். அந்த அடிப்படையில் பெறப்பட்டதே சுதந்திரம். 1956ஆம் ஆண்டிலே இந்த அடிப்படை தகர்க்கப்பட்டது. இந்த மொழி பற்றிய தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னாள் பிரதம நீதியரசரான திரு எஸ்.விஜயவர்த்தன அவர்களின் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. (இடையீடு) பிரதமர் அவர்கள் ஈ.ஏ.எல்.ஜயவர்த்தனா என்று கூறுகிறார். அவர் சேர் பட்டம் பெற்ற பின்பு சேர் ஆதர் விஜயவர்த்தனா என்று அறியப்பட்டார். அப்படிக் கூறினால் தெளிவாக இருக்குமென நினைக்கிறேன். அவருடைய தலைமையில் நியமிக்கப்பட்ட குழு 1955ஆம் ஆண்டு ஒரு பெரும் குண்டைத் தூக்கிப்போட்டது.

## தெரிவுக்குழுவின் ‘குண்டு’

இரண்டு மொழிகளையும் ஆட்சி மொழிகள் ஆக்குவதற்கு வழிவகைகளைக் காண நியமிக்கப்பட்ட அந்தக் குழுவில்- தமிழ் உறுப்பினர்கள் தவிர- பெரும்பான்மையினர் இரண்டு மொழிகளையும் ஆட்சிமொழியாகக் கொண்டுவர முடியாது, அதிலே சிக்கல்கள் உண்டு, ஆனபடியால் ஒரு மொழியைத்தான்ஆட்சிமொழியாகக் கொண்டுவர வேண்டும் என்று அக் குழுவினர் ஓர் அறிக்கை விடுத்தனர். ஒரு தருணத்தை எதிர்பார்த்திருந்த காலஞ்சென்ற பண்டாரநாயக்க அவர்களுக்கு அது ஒரு தருணமாக வந்து சேர்ந்தது. அவரும் சில மொழி வெறிச் சக்திகளும் சிங்களம் மட்டும்தான் இந்நாட்டின் ஆட்சி மொழியாக வேண்டுமென்று ஒரு வெறி ஆட்டத்தைக் கிளப்பினர். அது வரைக்கும் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சமத்துவம் என்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சி 1956ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் தேதி களனியில் அதன் மகாநாட்டில் சிங்களம் மாத்திரம் என்னும் கொள்கையிடம் சரணாகதி அடைந்தது.

அப்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்த தமிழ் அங்கத்தவர்கள் அத்தனைபேரும்- முன்னைநாள் அமைச்சர் திரு சு. நடேசபிள்ளை, திரு வீ.குமாரசாமி இப்படியானவர்கள்- ஏன் எங்கள் தலைவராகப் பின்பு வந்த திரு இராசமாணிக்கம் போன்றோர் கூட- ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வெளியேறினார்கள்.

(அடுத்த இதழில் தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'தமிழோசை' சங்கரண்ணா

# மாதம் ஒரு மந்திரம்

4

தமிழர்களுக்குப் 'பொற்காலம்' என்று கூடச் சொல்லலாம்! எங்கும் 'பொன்' செய்யும் காலம்! மேலை நாடுகள் பலவற்றிலும் தமிழர்கள் காலூன்றி வருகிறார்கள்! ஒரு காலத்தில் இங்கே லண்டனில் 'ஸவுத்தோல்', 'ஆல்பர்ட்டன்' வட்டாரத்திற்குப் போனால் வட இந்தியர்கள் நடமாட்டமே காணப் பட்டது. இப்போது, இந்தி, குஜராத்தி ஒலிகளுக்கு இடையில் தமிழ்க்குரல்களும் கேட்கின்றன! பஸ், பாதாள ரயில்களிலும் அப்படியே! ஏதோ அக்கரைச் சீமையில் வந்து அகப்பட்டுக் கொண்டோமே என்று ஆதங்கப்படத் தேவையில்லை! தமிழர்கள் முகங்களைக் காணும் போது ஒரு தைரியமே ஏற்படுகிறது.

என்றாலும், "தமிழர்க்குள்ள தனிக் குணம்" இன்னும் மாறவில்லையே! மேனாடு வந்தும் சாதி- சமயப் பூசல்கள், உயர்ந்தவன்- தாழ்ந்தவன் என்ற பேதவுணர்வுகள், அவன் அங்நாட்டுத் தமிழன், இவன் இந்நாட்டு தமிழன்!, என்ற 'பிட்டுப் பிட்டுப்' பேசும் "நாவு அலர்" தன்மைகள் இருந்து வருவதாகக் கூறவும்படுகிறது!

இது 'தமிழ்ச் சமுதாயத்திற்கு' மட்டுமே உள்ள குறைபாடு என்றும் சொல்லமுடியாது. மலையாளத்தார்களைத் தவிர, வங்காளி, குஜராத்தி, ஆந்திரர் மற்றும் மேற்கு இந்தியத்தீவுகளிலிருந்து வந்த சமுதாயத்தினர் மத்தியிலும் இந்த "ராஜஸ, தாமஸ" குணங்கள் மேவிய பேதவுணர்வுகள் இருப்பதாக நண்பர் ஒருவர் கூறினார்; உண்மையாக இருக்கலாம்!

"தமிழர்கள் தென்னாங்குலை இல்லை; நெல்லிக்காய் மூட்டைகள்! அவிழ்த்து உதறினால் ஆளுக்கொரு பக்கம் சிதறக் கூடியவர்கள்; ஒற்றுமை என்பதே கிடையாது!" என்ற 'சுய விமர்சனக்' குரல்களை நாமும் பல்லாண்டுகளாகச் செவி மடுத்தே வருகிறோம்!

இதன் உண்மை நிலை எப்படியோ? என்றாலும் புதிய நூற்றாண்டுக்குள் ஒன்பது ஆண்டுகளில் புக இருக்கும் நிலையில் தமிழ்ச் சமுதாயத்தினராகிய நாம் அனைவரும் நம்மை நாமே பரிசோதித்துக் கொண்டு- ஒற்றுமையையும் உயர்ந்த பண்பாடுகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பது காலத்தின் அவசியம் ஆகும் என்பதில் இரு கருத்துக்கள் இருக்க முடியாது! நிற்க,

# பப்பட மகான்மியம்

பல்லாண்டுகட்கு முன்னம், பாரிஸ் மாநகரில் மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு நடந்தபோது, பி.பி.சி தமிழோசை ஒலிபரப்பில் மாநாட்டு நிகழ்ச்சிகளை நேரடியாக 'அஞ்சல்' செய்யும் பணியை முன்னிட்டு நான் பாரிஸ் நகரம் சென்றிருந்தேன்! மாநாடு ஸொர்போன் பல்கலைக்கழக அரங்கில் ஒருவாரம் மிகச்சிறப்பாக நடந்தது. தமிழ்கூறு நல்லுலகத்திலிருந்து தமிழறிஞர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் பலரும் வந்திருந்தார்கள். ஆடம்பர- வாண வேடிக்கைகள் ஏதும் இன்றி அடக்கமான முறையில், மாநாட்டின் மூல நோக்கங்களுக்கு ஏற்பச் சிறப்பான முறையில் நடந்த மாநாடுகளில் அது ஒன்று! உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் தோற்றத் தந்தையான தனிநாயகம் அடிகளாரைச் சந்தித்து அளவளாவும் பெருவாய்ப்பு அப்போது தான் எனக்குக் கிடைத்தது. சிலம்புச் செல்வர் ம.பொ.சி, 'கலைமகள்' அருள்மிகு வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன் அவர்கள், டாக்டர். மு.வரதராசனார், கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்த்த காரைக்குடி சா.கணேசனார், தமிழ், ஆங்கிலம், ப்ரெஞ்ச் மும்மொழிகளிலும் அளப்பரும் தேர்ச்சியும் ரஸனையும் பெற்ற நீதிபதி மகாராசன் அவர்கள், பேரறிஞர், தாமரைத்திரு.நெ.சு.சுந்தரவடிவேலனார் இப்படிப் பல அறிஞர் பெருமக்கள் வந்திருந்தார்கள். அத்தோடு தமிழ் நாட்டிலிருந்தும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் வட்டாரத்திலிருந்தும் இளம் தமிழ் ஆர்வலர்கள் பலரையும் சந்திக்கும் வாய்ப்பும் கிட்டியது. 'அலுவல்- அஞ்சல்'- ஒலிபரப்புப் பணி அன்றன்றைக்கு முடிந்த பிறகும், ஊர்சுற்றிப் பார்க்கும் உல்லாச நேரங்களுக்கு இடையிலும், இரவில் ஹோட்டலிலும் தனியானதோர் 'தமிழ்க் கருத்தரங்கமே' நடந்ததை இன்று நினைத்துப் பார்த்தாலும் மெய் சிலிர்கிறது.... ஆமாம்... உண்மையில் 'மெய்' சிலிர்க்கத்தான் செய்கிறது! நீதிபதி மகாராசன் அவர்கள் தலைமையில் சூடுபறக்கும் கலந்துரையாடல்! கம்பன் அடிப்பொடி சா.கணேசன் ஒருபுறம், கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜ- ஒருபுறம், இலங்கை அன்பர்கள் ஒருபுறம், சிங்கப்பூர் அறிஞர்கள் ஒரு புறம்- தமிழின் நிலை, தனித் தமிழ்க் கோட்பாடு, இன்றைய 'ஆராய்ச்சிகள்' போகும் போக்கு- இப்படிப்பல விஷயங்கள் பற்றி நேரம் போவது தெரியாமல் விவாதித்தது மனத்தில் இன்னும்பசுமையாக நிற்கிறது!

"'எங்கட' தமிழ், உங்களுடைய தமிழ்" என்ற பேதாபேதம் இன்றி 'நம்முடைய' தமிழ் என்ற முறையில்- ஆனால் 'நையாண்டியும் நகைச் சுவையும்' குறையாமல் நடந்த ஆக்கபூர்வமான 'கார-சார' விவாதங்கள் அவை. மாநாட்டு நிகழ்ச்சிகள் ஒரு புறம் இருக்க, பி.பி.சி தமிழ் ஒலிபரப்புக்கு என்று, அறிஞர்கள் கூடியுள்ள அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு மூன்று செவ்விகளை ஹோட்டல் அறையில் வைத்தே ஒலிப்பதிவு செய்தேன்! கி.வா.ஜ அவர்களிடம் அவருடைய குருநாதர்- தமிழ்த் தாத்தா- டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் பற்றிக் கேட்டேன். தம்முடைய சொந்த அனுபவங்களை அற்புதமாகச் சொன்னார்கள். அதேபோல் மகாராசன் அவர்கள் ரஸிகமணி டி.கே.சி அவர்களைப் பற்றிக் குற்றால அருவியாகப் பொழிந்தார்கள்; பாரதியாரைப்பற்றி- அவரது செட்டிநாட்டு விஜயம்- அனுபவங்கள் பற்றி கம்பன் அடிப்பொடி தூள் பரத்தினார்! இளைஞர் டாக்டர் இரா.சனார்த்தனம் அவர்கள் விடுவாரா, பேரறிஞர் அண்ணா அவர்களின் தமிழிலக்கியத் தொண்டு பற்றி- அடுக்குமொழி அலங்காரச் சொற்சிலம்பமே ஆடிவிட்டார்!

இந்தப் 'பாரிஸ்' பழைய நினைவுகளில் அறிஞர் ஒருவர் 'தமிழாராய்ச்சி'யின் தற்கால நிலை பற்றி வேடிக்கையாக ஒரு 'கதை' சொன்னார்! ரஸிகமணி டி.கே.சி.யவர்களின் 'விமர்சனக்' கண்ணோட்டத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது வேடிக்கையாக வந்து விழுந்த கதை அது! தமிழில், தமிழ்ப் பண்பாட்டில், இலக்கியங்களில், ஒப்புரவில், நட்பில், நடுவுநிலையில், மானுட நேயத்தில், பக்குவத்தில், பெருந்தன்மையில் எவ்வளவோ 'நாம்' இன்னும் முன்னேற வேண்டியிருக்கிறது என்பதை அந்த நையாண்டிக் கதை நாசூக்காகச் சுட்டிக்காட்டியது என்றால் மிகையில்லை!



என்ன 'கதை' அது!...

அந்தக் காலத்தில்......

அரண்மனையில் 'தமிழறிஞர்களையும் லண்டன் வாழ் பிரமுகப் பெருமக்களையும்' கௌரவிக்க வேந்தர் பெருமான் ஒரு விருந்து வைப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்!... அரண்மனை விருந்தாயிற்றே!... "காமா- சோமாக்"களையெல்லாம் 'பட்டியலில்' சேர்க்காமல் 'அந்தஸ்து' பார்த்து- எப்படியோ 'எசவிக் குசவி' ஆட்களை தெரிவு செய்து- அரண்மனைக்கு 'லிஸ்ட்' அனுப்பப்படுகிறது! தமிழ்ப் பிரமுகர் கொடுத்த பட்டியலை அரண்மனை அதிகாரி ஒப்புக் கொண்டு- அழைப்பிதழ் அனுப்பப்படுகிறது!

தமிழ் அறிஞர்கள் கலந்து கொள்ளும் 'விருந்து' என்பதால்- முதல் 'கோர்ஸில்' சூப்போடு, இடமங்கையால் எடுத்துக்கடிக்க ஓர் ஆயிரம் அப்பளத்துக்கு- அதாகப் பட்டது 'பப்படத்துக்கு' தமிழ் நாட்டுக்கு 'ஆர்டர்' போகிறது! அந்த அப்பளக் கம்பெனிக்காரர் மேலை நாடுகளுக்குச் சரக்கு அனுப்புவதில் பரிச்சயம் உடையவராதலால் கச்சிதமாக ஒவ்வொரு அப்பளத்துக்கும் இடையில் சரக்கு நமத்துப் போகாமல் இருக்க அதே அளவுக்கு வட்ட வட்டமான ஆயில் பேப்பரை அரவணைப்பாக வைத்து-பொதிந்து- "பொரிக்கும் விதிமுறைகளையும்" குறித்து அனுப்பி வைக்கிறார்! ஆனால் பாவம், அரண்மனை தலைமைச் சமையற்காரர், பளபளப்பான ஆயில் பேப்பர்- வட்ட வட்டமான தாள்களை 'பப்படம்' என்று கருதி விடுகிறார். உண்மையான 'அப்பளங்கள்' பொதிவுதாட்களாகக் கருதப்பட்டு, குப்பைக் கூடைக்குள்போய் விடுகின்றன!

விருந்துக்கு அனைவரும் வந்து அமர்கிறார்கள்!...

முதல் 'கோர்ஸ்' சூப்போடு 'பப்படம்' வருகிறது!...

'பந்தா' மரபுப்படி- வேந்தர் பெருமான் 'பப்படத்தை' எடுத்து சுவை பார்த்ததும் எல்லோரும், பப்படத்தை 'ருசி' பார்க்கிறார்கள்!

மன்னர் பெருமானுக்கு 'பப்படம்' முதல் அனுபவம்!...

தமிழ் அறிஞர் பெருமக்களுக்கு 'பப்படம்' என்று சொல்லி 'என்னத்தையோ' எண்ணெய்யில் பொரித்து வைத்து விட்டார்கள் என்பது தெரியும்! என்றாலும் "பெயக் கண்டும் நயத்தக்க நாகரிகத்தை' விட்டு விடலாமோ என்று இடமங்கையால் எடுத்து 'பொரித்த ஆயில் பேப்பரை' புளகாங்கிதத்தோடு- சாப்பிட ஆரம்பித்து விட்டார்கள்! அது மட்டுமன்று "பப்படம் என்றால் இதுவன்றோ பப்படம்!..... நம்மூரிலும் பொரிக்கிறார்களே!" என்று உள்ளொன்று வைத்துப் புறமொன்று பொரியத் துவங்கிவிட்டார்கள்! மன்னர் பிரானுக்கு 'ஆதன்டிக் அப்பளம்' பரிமாறியதில் பரம திருப்தி உண்டாயிற்று!...

இதுதான் அந்தக் கதை!

கற்பனையே என்றாலும்- இந்த 'நையாண்டிக்குள்' ஒரு சில உண்மைகளும் பொதிந்திருக்கின்றன அல்லவா? தெரிந்தும் 'சக்கையைச்' சுவைக்கும் சப்பைக்கட்டுத்தனத்தை 'பப்படக் கதை' பலமாகத்தான் சாடியிருக்கிறது!

அந்தஸ்து மோஹம், 'மேற்கோள்' பூச்சு, தமிழின் 'சுத்த-பத்த' இறுமாப்பு இவையெல்லாம் 'அப்பளமாக' நொறுங்கினாலன்றி தமிழுக்கு விடிவுகாலம் வருமா என்ற ஏக்கம் எழுகிறது!

'தமிழ்' என்பது ஒன்றே ஒன்று தான்! அதைப்போலத் தமிழ் மக்கள் சமுதாயமும்! மொழிப்பற்றோடும்- இன நல்லுறவோடும் பேதங்களையெல்லாம் விடுத்து ஒரே குடும்பமாக மலரும் காலம் வந்தாக வேண்டும்! நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதிலும், 'உயர்வு நவிற்சியிலும்' உருப்படியான பலன் ஏற்படாது!

திருமூலர் பெருமான் "தன்னைத்" தமிழ் செய்யுமாறு இறைவன் தன்னைப் படைத்ததாக பாயிரத்தில் கூறுகிறார் அல்லவா? அந்தச் சித்தர் பெருமான் தமிழ் சமுதாயத்தையும் மீண்டும் "தமிழ்ப்படுத்துமாறு" உள்ளத்துள் வேண்டுவோமாக! நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறைமொழி மந்திரம் நம்மை மாந்தர்கள் ஆக்கப் பிரார்த்திப்போமாக!

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவம் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே.

-திருமூலர்

LONDON TAMIL INSTITUTE
Formerly West London Tamil School (Wembley)
proudly presents
a
Vocal Concert
by
Kutralam Sri. V. Nagarajan
at the
WINSTON CHURCHILL HALL
Pinn Way,
Ruislip,
Middx.
on
Sunday 4th October 1992.
at 5.30pm (Doors Open 5.00pm)
Accompaniments:
Violin: Smt. Kalaivani Indrakumar.
Miruthangam: Sri Karaikudy Krishnamoorthy.
Gadam: Sri Baskaran Sriharam.
Tabla: Sri Peter Lockett
Admission:
Adult : £5-00 Child: £3-00
For reservations please contact:
081-907 6638 081-904 3937 081-909 3113
081-903 5273 09232-23987 081-868 5696



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'தமிழோசை' சங்கரண்ணா

# மாதம் ஒரு மந்திரம்

## 4

தமிழர்களுக்குப் 'பொற்காலம்' என்று கூடச் சொல்லலாம்! எங்கும் 'பொன்' செய்யும் காலம்! மேலை நாடுகள் பலவற்றிலும் தமிழர்கள் காலூன்றி வருகிறார்கள்! ஒரு காலத்தில் இங்கே லண்டனில் 'ஸவுத்தோல்', 'ஆல்பர்ட்டன்' வட்டாரத்திற்குப் போனால் வட இந்தியர்கள் நடமாட்டமே காணப் பட்டது. இப்போது, இந்தி, குஜராத்தி ஒலிகளுக்கு இடையில் தமிழ்க்குரல்களும் கேட்கின்றன! பஸ், பாதாள ரயில்களிலும் அப்படியே! ஏதோ அக்கரைச் சீமையில் வந்து அகப்பட்டுக் கொண்டோமே என்று ஆதங்கப்படத் தேவையில்லை! தமிழர்கள் முகங்களைக் காணும் போது ஒரு தைரியமே ஏற்படுகிறது.

என்றாலும், "தமிழர்க்குள்ள தனிக் குணம்" இன்னும் மாறவில்லையே! மேனாடு வந்தும் சாதி- சமயப் பூசல்கள், உயர்ந்தவன்- தாழ்ந்தவன் என்ற பேதவுணர்வுகள், அவன் அந்நாட்டுத் தமிழன், இவன் இந்நாட்டு தமிழன்!, என்ற 'பிட்டுப் பிட்டுப்' பேசும் "நாவு அலர்" தன்மைகள் இருந்து வருவதாகக் கூறவும்படுகிறது!

இது 'தமிழ்ச் சமுதாயத்திற்கு' மட்டுமே உள்ள குறைபாடு என்றும் சொல்லமுடியாது. மலையாளத்தார்களைத் தவிர, வங்காளி, குஜராத்தி, ஆந்திரர் மற்றும் மேற்கு இந்தியத்தீவுகளிலிருந்து வந்த சமுதாயத்தினர் மத்தியிலும் இந்த "ராஜஸ, தாமஸ" குணங்கள் மேவிய பேதவுணர்வுகள் இருப்பதாக நண்பர் ஒருவர் கூறினார்; உண்மையாக இருக்கலாம்!

"தமிழர்கள் தென்னாங்குலை இல்லை; நெல்லிக்காய் மூட்டைகள்! அவிழ்த்து உதறினால் ஆளுக்கொரு பக்கம் சிதறக் கூடியவர்கள்; ஒற்றுமை என்பதே கிடையாது!" என்ற 'சுய விமர்சனக்' குரல்களை நாமும் பல்லாண்டுகளாகச் செவிமடுத்தே வருகிறோம்!

இதன் உண்மை நிலை எப்படியோ? என்றாலும் புதிய நூற்றாண்டுக்குள் ஒன்பது ஆண்டுகளில் புக இருக்கும் நிலையில் தமிழ்ச் சமுதாயத்தினராகிய நாம் அனை

# பப்பட மகான்மியம்

வரும் நம்மை நாமே பரிசோதித்துக் கொண்டு- ஒற்றுமையையும் உயர்ந்த பண்பாடுகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பது காலத்தின் அவசியம் ஆகும் என்பதில் இரு கருத்துக்கள் இருக்க முடியாது! நிற்க,

பல்லாண்டுகட்கு முன்னம், பாரிஸ் மாநகரில் மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு நடந்தபோது, பி.பி.சி தமிழோசை ஒலிபரப்பில் மாநாட்டு நிகழ்ச்சிகளை நேரடியாக 'அஞ்சல்' செய்யும் பணியை முன்னிட்டு நான் பாரிஸ் நகரம் சென்றிருந்தேன்! மாநாடு ஸொர்போன் பல்கலைக்கழக அரங்கில் ஒருவாரம் மிகச்சிறப்பாக நடந்தது. தமிழ்கூறு நல்லுலகத்திலிருந்து தமிழறிஞர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் பலரும் வந்திருந்தார்கள். ஆடம்பர- வாண வேடிக்கைகள் ஏதும் இன்றி அடக்கமான முறையில், மாநாட்டின் மூல நோக்கங்களுக்கு ஏற்பச் சிறப்பான முறையில் நடந்த மாநாடுகளில் அது ஒன்று! உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் தோற்றத் தந்தையான தனிநாயகம் அடிகளாரைச் சந்தித்து அளவளாவும் பெருவாய்ப்பு அப்போது தான் எனக்குக் கிடைத்தது. சிலம்புச் செல்வர் ம.பொ.சி, 'கலைமகள்' அருள்மிகு வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன் அவர்கள், டாக்டர். மு.வரதராசனார், கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்த்த காரைக்குடி சா.கணேசனார், தமிழ், ஆங்கிலம், ப்ரெஞ்ச் மும்மொழிகளிலும் அளப்பரும் தேர்ச்சியும் ரஸனையும் பெற்ற நீதிபதி மகாராசன் அவர்கள், பேரறிஞர், தாமரைத்திரு.நெ.சு.சுந்தரவடிவேலனார் இப்படிப் பல அறிஞர் பெருமக்கள் வந்திருந்தார்கள். அத்தோடு தமிழ் நாட்டிலிருந்தும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் வட்டாரத்திலிருந்தும் இளம் தமிழ் ஆர்வலர்கள் பலரையும் சந்திக்கும் வாய்ப்பும் கிட்டியது. 'அலுவல்- அஞ்சல்'- ஒலிபரப்புப் பணி அன்றன்றைக்கு முடிந்த பிறகும், ஊர்சுற்றிப் பார்க்கும் உல்லாச நேரங்களுக்கு இடையிலும், இரவில் ஹோட்டலிலும் தனியானதோர் 'தமிழ்க் கருத்தரங்கமே' நடந்ததை இன்று நினைத்துப் பார்த்தாலும் மெய் சிலிர்கிறது.... ஆமாம்... உண்மையில் 'மெய்' சிலிர்க்கத்தான் செய்கிறது! நீதிபதி மகாராசன் அவர்கள் தலைமையில் சூடுபறக்கும் கலந்துரையாடல்! கம்பன் அடிப்பொடி சா.கணேசன் ஒருபுறம், கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜ- ஒருபுறம், இலங்கை அன்பர்கள் ஒருபுறம், சிங்கப்பூர் அறிஞர்கள் ஒரு புறம்- தமிழின் நிலை, தனித் தமிழ்க் கோட்பாடு, இன்றைய 'ஆராய்ச்சிகள்' போகும் போக்கு- இப்படிப்பல விஷயங்கள் பற்றி நேரம் போவது தெரியாமல் விவாதித்தது மனத்தில் இன்னும்பசுமையாக நிற்கிறது!



"'எங்கட' தமிழ், உங்களுடைய தமிழ்" என்ற பேதாபேதம் இன்றி 'நம்முடைய' தமிழ் என்ற முறையில்- ஆனால் 'நையாண்டியும் நகைச் சுவையும்' குறையாமல் நடந்த ஆக்கபூர்வமான 'கார-சார' விவாதங்கள் அவை. மாநாட்டு நிகழ்ச்சிகள் ஒரு புறம் இருக்க, பி.பி.சி தமிழ் ஒலிபரப்புக்கு என்று, அறிஞர்கள் கூடியுள்ள அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு மூன்று செவ்விகளை ஹோட்டல் அறையில் வைத்தே ஒலிப்பதிவு செய்தேன்! கி.வா.ஜ அவர்களிடம் அவருடைய குருநாதர்- தமிழ்த் தாத்தா- டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் பற்றிக் கேட்டேன். தம்முடைய சொந்த அனுபவங்களை அற்புதமாகச் சொன்னார்கள். அதேபோல் மகாராசன் அவர்கள் ரஸிகமணி டி.கே.சி அவர்களைப் பற்றிக் குற்றால அருவியாகப் பொழிந்தார்கள்; பாரதியாரைப்பற்றி- அவரது செட்டிநாட்டு விஜயம்- அனுபவங்கள் பற்றி கம்பன் அடிப்பொடி தூள் பரத்தினார்! இளைஞர் டாக்டர் இரா.சனார்த்தனம் அவர்கள் விடுவாரா, பேரறிஞர் அண்ணா அவர்களின் தமிழிலக்கியத் தொண்டு பற்றி- அடுக்குமொழி அலங்காரச் சொற்சிலம்பமே ஆடிவிட்டார்!

இந்தப் 'பாரிஸ்' பழைய நினைவுகளில் அறிஞர் ஒருவர் 'தமிழாராய்ச்சி'யின் தற்கால நிலை பற்றி வேடிக்கையாக ஒரு 'கதை' சொன்னார்! ரஸிகமணி டி.கே.சி.யவர்களின் 'விமர்சனக்' கண்ணோட்டத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது வேடிக்கையாக வந்து விழுந்த கதை அது! தமிழில், தமிழ்ப் பண்பாட்டில், இலக்கியங்களில், ஒப்புரவில், நட்பில், நடுவுநிலையில், மானுட நேயத்தில், பக்குவத்தில், பெருந்தன்மையில் எவ்வளவோ 'நாம்' இன்னும் முன்னேற வேண்டியிருக்கிறது என்பதை அந்த நையாண்டிக் கதை நாசூக்காகச் சுட்டிக்காட்டியது என்றால் மிகையில்லை!

என்ன 'கதை' அது!...

அந்தக் காலத்தில்......

அரண்மனையில் 'தமிழறிஞர்களையும் லண்டன் வாழ் பிரமுகப் பெருமக்களையும்' கௌரவிக்க வேந்தர் பெருமான் ஒரு விருந்து வைப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்!... அரண்மனை விருந்தாயிற்றே!... "காமா- சோமாக்"களையெல்லாம் 'பட்டியலில்' சேர்க்காமல் 'அந்தஸ்து' பார்த்து- எப்படியோ 'எசவிக் குசவி' ஆட்களை தெரிவு செய்து- அரண்மனைக்கு 'லிஸ்ட்' அனுப்பப்படுகிறது! தமிழ்ப் பிரமுகர் கொடுத்த பட்டியலை அரண்மனை அதிகாரி ஒப்புக் கொண்டு- அழைப்பிதழ் அனுப்பப்படுகிறது!

தமிழ் அறிஞர்கள் கலந்து கொள்ளும் 'விருந்து' என்பதால்- முதல் 'கோர்ஸில்' சூப்போடு, இடமங்கையால் எடுத்துக்கடிக்க ஓர் ஆயிரம் அப்பளத்துக்கு- அதாகப் பட்டது 'பப்படத்துக்கு' தமிழ் நாட்டுக்கு 'ஆர்டர்' போகிறது! அந்த அப்பளக் கம்பெனிக்காரர் மேலை நாடுகளுக்குச் சரக்கு அனுப்புவதில் பரிச்சயம் உடையவராதலால் கச்சிதமாக ஒவ்வொரு அப்பளத்துக்கும் இடையில் சரக்கு நமத்துப் போகாமல் இருக்க அதே அளவுக்கு வட்ட வட்டமான ஆயில் பேப்பரை அரவணைப்பாக வைத்து-பொதிந்து- "பொரிக்கும் விதிமுறைகளையும்" குறித்து அனுப்பி வைக்கிறார்! ஆனால் பாவம், அரண்மனை தலைமைச் சமையற்காரர், பளபளப்பான ஆயில் பேப்பர்- வட்ட வட்டமான தாள்களை 'பப்படம்' என்று கருதி விடுகிறார். உண்மையான 'அப்பளங்கள்' பொதிவுதாட்களாகக் கருதப்பட்டு, குப்பைக் கூடைக்குள்போய் விடுகின்றன!

விருந்துக்கு அனைவரும் வந்து அமர்கிறார்கள்!...

முதல் 'கோர்ஸ்' சூப்போடு 'பப்படம்' வருகிறது!...

'பந்தா' மரபுப்படி- வேந்தர் பெருமான் 'பப்படத்தை' எடுத்து சுவை பார்த்ததும் எல்லோரும், பப்படத்தை 'ருசி' பார்க்கிறார்கள்!

மன்னர் பெருமானுக்கு 'பப்படம்' முதல் அனுபவம்!...

தமிழ் அறிஞர் பெருமக்களுக்கு 'பப்படம்' என்று சொல்லி 'என்னத்தையோ' எண்ணெய்யில் பொரித்து வைத்து விட்டார்கள் என்பது தெரியும்! என்றாலும் "பெயக் கண்டும் நயத்தக்க நாகரிகத்தை' விட்டுவிடலாமோ என்று இடமங்கையால் எடுத்து 'பொரித்த ஆயில் பேப்பரை' புளகாங்கிதத்தோடு- சாப்பிட ஆரம்பித்து விட்டார்கள்! அது மட்டுமன்று "பப்படம் என்றால் இதுவன்றோ பப்படம்!..... நம்மூரிலும் பொரிக்கிறார்களே!" என்று உள்ளொன்று வைத்துப் புறமொன்று பொரியத் துவங்கிவிட்டார்கள்! மன்னர் பிரானுக்கு 'ஆதன்டிக் அப்பளம்' பரிமாறியதில் பரம திருப்தி உண்டாயிற்று!...

இதுதான் அந்தக் கதை!

கற்பனையே என்றாலும்- இந்த 'நையாண்டிக்குள்' ஒரு சில உண்மைகளும் பொதிந்திருக்கின்றன அல்லவா? தெரிந்தும் 'சக்கையைச்' சுவைக்கும் சப்பைக்கட்டுத்தனத்தை 'பப்படக் கதை' பலமாகத்தான் சாடியிருக்கிறது!

அந்தஸ்து மோஹம், 'மேற்கோள்' பூச்சு, தமிழின் 'சுத்த-பத்த' இறுமாப்பு இவையெல்லாம் 'அப்பளமாக' நொறுங்கினாலன்றி தமிழுக்கு விடிவுகாலம் வருமா என்ற ஏக்கம் எழுகிறது!

'தமிழ்' என்பது ஒன்றே ஒன்றுதான்! அதைப்போலத் தமிழ் மக்கள் சமுதாயமும்! மொழிப்பற்றோடும்- இன நல்லுறவோடும் பேதங்களையெல்லாம் விடுத்து ஓரே குடும்பமாக மலரும் காலம் வந்தாக வேண்டும்! நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதிலும், 'உயர்வு நவிற்சியிலும்' உருப்படியான பலன் ஏற்படாது!

திருமூலர் பெருமான் "தன்னைத்" தமிழ் செய்யுமாறு இறைவன் தன்னைப் படைத்ததாக பாயிரத்தில் கூறுகிறார் அல்லவா? அந்தச் சித்தர் பெருமான் தமிழ் சமுதாயத்தையும் மீண்டும் "தமிழ்ப்படுத்துமாறு" உள்ளத்துள் வேண்டுவோமாக! நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறைமொழி மந்திரம் நம்மை மாந்தர்கள் ஆக்கப் பிரார்த்திப்போமாக!

*பின்னைநின் றென்னே பிறவி பெறுவது*
*முன்னைநன் றாக முயல்தவம் செய்கிலர்*
*என்னைநன் றாக இறைவன் படைத்தனன்*
*தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே.*

–திருமூலர்


LONDON TAMIL INSTITUTE

Formerly West London Tamil School (Wembley)

proudly presents

a

**Vocal Concert**

by

Kutralam Sri. V. Nagarajan

at the

WINSTON CHURCHILL HALL

Pinn Way,
Ruislip,
Middx.

on

**Sunday 4th October 1992.**

at 5.30pm (Doors Open 5.00pm)

*Accompaniments:*

Violin: Smt. Kalaivani Indrakumar.
Miruthangam: Sri Karaikudy Krishnamoorthy.
Gadam: Sri Baskaran Sriharam.
Tabla: Sri Peter Lockett

Admission:
Adult : £5-00 Child: £3-00


For reservations please contact:
081-907 6638 081-904 3937 081-909 3113
081-903 5273 09232-23987 081-868 5696




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சதாபிஷேகம் கண்ட தமிழறிஞர்

தமிழ்ப்பெரியார் சோ.சிவ பாத சுந்தரம் அவர்கள் 80 வயதை அடைந்திருக்கி றார்கள். இம் மாதம் 11ஆம் தேதி சிவபாத சுந்தரம் தம் பதியரின் சதாபிஷேக வைபவம் லண்டன் உயர் வாயிற் குன்று ஸ்ரீ முருகன் ஆலயத்தில் சிறப்புற்றது.



லண்டன் ஸ்ரீ முருகன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள் தலைமையில் உயர்வாயிற்குன்று பிரதமகுரு சிவஸ்ரீ சச்சிதானந்தக் குருக்கள், பிரம்மஸ்ரீ அபிராம குருக்கள் ஆகியோரும், கனகதுர்க்கை அம்மன் கோவில் குருக்கள் பிரம்மஸ்ரீ கண்ணன் குருக்களும் சதாபிஷேக வைபவத்தை இனிதேநடாத்தினார்கள். நிறைவாக, சென்னை ஸ்ரீ காளி காம்பாள் கோவில் சிவஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாசாரியார் தம்பதிகளுக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்தினார்.

"தேமதுரத் தமிழோசை உலக மெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்று பாரதி கண்ட கனவை மெய்ப்பிக்கும் முயற்சி ஒன்றை பி.பி.சி. நிறுவனம் 45 ஆண்டுகளுக்கு முன் மேற்கொண் டது. தமிழில் நிகழ்ச்சிகள் அமைத்து ஒலி பரப்புவதற்காக துவங்கப்பட்ட பிரிவுக்குப் பணியாற்ற இலங்கை வானொலி ஊழியர் சோ.சிவபாத சுந்தரம் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தமிழ் நிகழ்ச்சிப் பிரிவுக்குத் 'தமிழோசை' என்ற பெயர் கொடுத் துத் துவக்கி 7 ஆண்டுகளுக்கு மேலாக ஒலிபரப்பி வந்தார். அன்று லண்டனில் தமிழுக்கு சேவை செய்து வந்த இளைஞர் இன்று தமது 80ஆவது வயது நிறைவை லண்டனிலேயே கொண்டாடும் வாய்ப்புப் பெற்றிருப்பது ஒரு மகிழ்ச்சிகரமான விஷயமாகும்.

1912 ஆகஸ்ட் 27ம் தேதி இலங் கையில் பிறந்த சிவபாத சுந்தரம் பட்டப்படிப்பும், சட்டப்படிப்பும் முடித்த பிறகு பத்திரிகைத் தொழிலை மேற்கொண்டார். அடிப்படையில் மிகவும் நுட்பமான இலக்கிய உணர்வை அடைந்திருந்த சுந்தரம் "ஈழகேசரி" என்ற இலக்கியப் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பேற்று, அதை அந்தக் காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்டிருந்த மறுமலர்சியின் குரலான 'மணிக் கொடியின்' எதிரொலி போலவே நடத்தி வந்தார். அடிக்கடி தமிழ கம் வந்து அன்றைய இலக்கிய ஜாம்பவான்களை சந்தித்து, அளவளாவி, இலக்கிய உணர்வை விஸ்தரித்துக் கொண்டார். 'மணிக் கொடி' பத்திரிகையில் எழுதிக் கொண்டிருந்த பின்னர் மறுமலர்ச் சியின் பிரதிநிதிகள் என்று அறியப் பட்ட எழுத்தாளர்களை முதன் முதலில் ஒரு இலக்கிய குழுவாக இனங்கண்ட பெருமை இவருடை யது. 1943ம் ஆண்டு நான் திருச்சி ரேடியோ இதழின் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, என்னைப் பற்றி இலங்கை ரேடி யோவில் யாரோ பேசினதாகக் கேள்விப்பட்டு சிறிது அதிர்ச்சி யடைந்தேன். அப்பொழுது திருச் சியில் 'மணிக்கொடி'யின் வாரிசாகத் தோன்றிய 'கலா மோகினி' என்ற மாத இதழை வி.ரா.ராஜகோபாலன் (கவிஞர் காளவாகனன்) என்ற கல் லூரி மாணவர் இலக்கிய ஆர்வத் துடன் நடத்தி வந்தார். அந்தப் பத்திரிகையில் 'மணிக்கொடியில்' எழுதிவந்த படைப்பாளிகள் பலரும் எழுதி இருந்தார்கள். அந்த இதழ் ஒன்றை விமர்சிக்கும் போது இலங்கை ரேடியோவில் நிகழ்ச்சி அமைப்பாளராக இருந்த சிவபாத

## சிட்டி சுந்தரராஜன்

சுந்தரம் பொதுவாக மணிக்கொடி யைப் பற்றியும், அது தோற்றுவித்த இலக்கிய எழுச்சி பற்றியும் இடையில் என்னுடைய கதை ஒன்றைப் பற்றியும் விரிவாகப் பேசியதுதான் அந்த நிகழ்ச்சி.

இதைத் தொடர்ந்து எங்கள் இருவருக்கும் இடையே நடந்த கடி தப் போக்குவரத்து பிறகு நெருக் கமான நட்பாக வளர்ந்து இலக்கிய உலகில் எங்களை 'இரட்டையர்' என்று இனங்காணும் அளவிற்குக் காரணமாக அமைந்தது. அப்பொ ழுது அவர் ஒலிபரப்புத் தொழி லோடு இலக்கியப் பணியையும் விடாமல் கைக்கொண்டிருந்தார். 1943ல் எனக்கு எழுதிய கடிதம் ஒன்றில் அவர் தாம், 'மாணிக்க வாசகர் அடிச்சுவட்டில்' என்ற ஒரு பயண நூலை எழுதி இருப்பதாகவும், அதை வெளியிடுவதற்காகத் தமிழகம் வரப் போவதாகவும் குறிப்பிட்டி ருந்தார். அதற்கு முன் தமிழகம் வந்த போதும் அவர் எழுத்தாளர் களை சந்தித்து அளவளாவுவதையே முக்கிய பொழுது போக்காகக் கொண்டிருந்தார். மாணிக்க வாசக ரைப் பற்றி எழுதிய பாணியிலேயே பின்னர் 'கௌதம புத்தர் அடிச் சுவட்டில்' என்ற நூலையும் 20

'இலக்கிய இரட்டையர்கள்' என்று இலக்கிய உலகில் அறியப்பட்ட திரு சுந்தர ராஜனும், திரு சிவ பாத சுந்தரமும் இலக்கிய நண் பர்களால் 'சிட்டி சிவபாத சுந்தரம்' என்றும் அழைக்கப் படுவார்கள்.

நேரிலே பாத்திராத நேரத் தில், 1943இல் 'கலாமோ கினி'யில் வெளியான சுந்தரராஜனின் 'அந்தி மந் தாரை' சிறுகதை பற்றி அப் போது இலங்கை வானொலி யில் பணிபுரிந்து கொடிருந்த திரு சிவபாத சுந்தரம் ஒரு விமர்சனம் செய்தார். அதன் பின்னர் தொடர்ந்த நட்பு அவர்களை இரட்டையர் களாக வளர்த்து விட்டது

## எழுத்தாளர்களை இனம் கண்டவர்

ஆண்டுகளுக்கு முன் 'சேக்கிழார் அடிச்சுவட்டில்' என்ற நூலையும் எழுதி பயண நூல்களில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தினார். நூலின் நாயகர்கள் வாழ்ந்த காலத்தில் அவர்கள் சென்று சிறப் பித்த இடங்கள், அன்று எப்படி இருந்தன, இன்று எப்படி இருக் கின்றன என்பதை ஆராய்ந்து விளக்குவதற்காக அவர் பல பிரயா ணங்களை மேற்கொண்டு தம்மு டைய முயற்சியில் வெற்றி கண்டார். பெரிய புராணத்து 63 நாயன்மார் கள் பல ஷேத்திரங்களுக்கும் சென்று பாடி பெருமை சேர்த்த நிகழ்ச்சிகள் தொடர்பான சம்பவங்கள் பற்றி ஆராய்வதற்காக இவர் மேற் கொண்ட பயணத்தில், இவருடன் முன்னர் இலங்கை வானொலியில் பணியாற்றிய சுந்தரலிங்கம், பா.ராஜலிங்கம் மற்றும் நான், என்னுடைய மகன் வேணுகோ பாலன் எல்லோரும் கலந்து கொண் டது ஒரு மறக்க முடியாத பயனுள்ள அனுபவம். ஏறக்குறைய 100 தலங் களுக்குச் சென்று அவைகளின் சமய, வரலாற்றுப் பின்னணியை ஆராய்ந்தபோது சிவபாத சுந்தரம் அயராது உழைத்துமிகுந்த சுறு சுறுப்புடன் நடந்து கொண்டது எங்களுக்கு வியப்பாகவும், மகிழ்ச்சி யாகவும் இருந்தது. இவர் இவ்வாறு பயணநூல்கள் எழுதி புகழடைவார்

19ம் பக்கம் பார்க்க



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



## பிரியங்கா

திருகோணமலை மல்லிகைத்தீவைச் சேர்ந்த **திரு. திருமதி குமாரகுலசிங்கம் புஸ்பலதா** தம்பதிகளின் செல்வப் புதல்வி **பிரியங்கா** தனது முதலாவது பிறந்த தினத்தை **6.10.92** அன்று மிகவும் சிறப்பாக லண்டனில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார், உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் **நீடுழி வாழ்க** என **வாழ்த்துகிறார்கள்!**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திருவருளும் குருவருளும் திரண்டுவரும் தென்னாங்கூர்

## புலரும் ஒரு புனித தலம்

**விமல் சொக்கநாதன்**

அதிகாலை நேரம் 4 மணி. நம்மில் பலர் போர்வையை இன்னும் இழுத்துப் போர்த்திக் கொண்டு மீண்டும் குடங்கிப் படுத்தபடி, நாம் கண்டு கொண்டிருந்த சொப்பனத்தின் இறுதிப் பகுதியைச் சுவைக்க ஆரம்பிக்கும் நேரம்.


ஆதவன் கூட இன்னும் எழுந்திருக்கவில்லை. இருள் போர்வையை விலக்கி கிழக்கு திசையில் அவன் தலைதூக்க இன்னும் சுமார் இரண்டு மணிநேரமிருக்கிறது.

ஆனால் இதோ- இந்தக் கிராமத்தில் மட்டும் பக்த கோடிகளின் பஜனை தெவிட்டாத தேனாக செவியில் வந்து விழுகிறது. பரமனின் திவ்விய நாமத்தை பஜனையாக இசைத்தபடி ஊரை வலம் வரும் இந்த பக்தர்கள் யார்? இது எந்த ஊர்? இது தென்னாங்கூர்! காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசிக்கு செல்லும் பிரதான பாதையில், சுமார் 30 கிலோமீட்டர் தொலைவில் அமைந்திருக்கிறது தென்னாங்கூர் என்ற இந்த தெய்வீக திருத்தலம்.

### குருபக்தி

ஒரு குருவிற்கு ஒரு சிஷ்யன் செய்யும் திருப்பணிக்கு உதாரணமாக- குருபக்தி என்றால் என்ன என்று உலகுக்கே பறை சாற்றுவது போல- தென்னாங்கூரில் எழுந்து கொண்டிருக்கின்றன மாபெரும் மணிமண்டபம், சத்குரு ஞானானந்தர் ஆலயம், வேதபாடசாலை ஆகியன. இவற்றுக்கெல்லாம் முன்னோடியாக - திருப்பணி வேலைகளை மேற்பார்வை செய்வது போல- ஏற்கனவே வந்து அமர்ந்து விட்டான் - பரமேஸ்வரன். மீனாட்சி சுந்தரரேசனாக- சொக்கநாதனாக அங்கு வீற்றிருக்கும் பரம்பொருளுக்கு கும்பாபிஷேக வைபவம் 5 வருடங்களுக்கு முன்னரே நடத்தப்பட்டது. சிவ விஷ்ணு என்ற சர்ச்சைக்கு இடமில்லாமல் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆலயத்தில் விநாயகர், முருகன், லக்ஷ்மி நாராயணர் ஆகியோர் வீற்றிருந்து அருள் பாலிக்கிறார்கள்.

அற்புதமான இந்த ஆலயம் எழுந்தமைக்கும், அதற்கு பெயரிட்டமைக்கும் குருபெருமான் திருவருள்தான் காரணம் என்கிறார் சத்குரு ஞானானந்த சுவாமிகளின் பிரதம சிஷ்யர்- 'குருஜி' எனப்படும் சுவாமி ஹரிதாஸ்கிரி அவர்கள்.


சுவாமி ஹரிதாஸ் கிரி

### கங்கையில் அற்புதம்

கோயில் கட்டப்பட்டு வரும் வேளையில் குருஜி அவர்கள் காசி ஷேத்திரம் சென்று புனித கங்கையில் நீராடிக் கொண்டிருந்த வேளையில் சர்வேஸ்வரன் லிங்கவடிவில் வந்து குருஜியின் திருக்கரத்தைப் பற்றினானாம். நீரில் மூழ்கி எழுந்த குருஜி, தன் கைகளில் ஏதோ தட்டுப்பட எழுந்து பார்க்கிறார். நெற்றியில் மூன்று கோடுகளுடன் திருநீலகண்டன். அந்த வீபூதிக் கோடுகளுக்கு மேல் பிறைச் சந்திரனைப் போன்ற ஒரு குறி!

தன் குருநாதரின் கருணையை எண்ணி உருகிய குருஜி சென்னை திரும்பினார். காஞ்சிப் பெரியவரிடமிருந்து வந்த சிலர் குருஜியை சந்தித்தார்கள். "உங்கள் தென்னாங்கூர் ஆலயம் பற்றி பெரியவரிடம் சொன்னோம். இப்போதைய தென்னாங்கூர் முன்னாளில் "உத்தர ஹாலஸ்யபுரி" (வடமதுரை ) என்று வழங்கப்பட்டது. அதனால் எம்பெருமானுக்கு மீனாட்சி சுந்தரேஸ்வரர் என்றே திருநாமம் சூட்டலாம்!" என்று சொன்னார்கள். காஞ்சிப் பெரியவர் விபரித்தபடி இந்த தென்னாங்கூர் பதியின் பின்னணியிலும் ஒரு தலபுராணம் மறைந்திருந்தது. குருநாதர் அருளால் குருஜியின் முயற்சியினால் அதுவும் வெளிக்கொணரப்பட்டது.

### தலமகிமை

பாண்டிய மாமன்னன் இந்த ஊரில் தான் மீனாட்சி அம்பிகையை குழந்தையாகக் கண்டு அணைத்து எடுத்துச் சென்றான். பின்னர் பாண்டிய நாட்டின் அரசியாக்கினான். எனவே தான் இந்த தென்னாங்கூர் கிராமம் முன்னாளில் 'தக்ஷிண ஹாலஸ்யம்' என்று அழைக்கப்பட்டது. இன்னாளில் புனித தலங்களின் புதிய கட்டடங்களை எழுப்பும் இடமாகத் தெரிவு செய்யப்பட்டது.

தானாகத் தேடிவந்து குருஜியின் கரம் பற்றிய எம் பெருமானின் கருணையை எண்ணி மகிழ்ந்த குருஜி தென்னாங்கூர் ஆலயத்திற்கு 'மீனாட்சி சுந்தரேசர்' ஆலயம் என்று பெயர் சூட்டி கும்பாபிஷேகத்தினையும் 5 ஆண்டுகளுக்கு முன் நடத்தி முடித்தார்.

மீனாட்சி சுந்தரரேசர் ஆலயத்தைச் சுற்றி இன்று பல புதிய கட்டடங்கள் எழுந்து கொண்டிருக்கின்றன. இவற்றுள் தலையாயது சத்குரு சுவாமி ஞானானந்தர் ஆலயம். வெளிப்புற கோபுரம் வட இந்திய சிற்ப வேலைப்பாடுகளுடன்- பூரி ஜெகந்நாதர் ஆலயத்தை ஒத்து இருக்கப் போகிறது. பல கோடி ருபா செலவில் எழுப்பப்பட்டு வரும் இந்த ஆலய வளாகத்தில் உள்ள தனியான மற்றோர் கட்டடம் "நாம சங்கீர்த் தனை மண்டபம்." ஆயிரக் கணக்கான பக்தர்கள் கூடி நாம சங்கீர்த்தனம் செய்ய பிரமாண்டமான மண்டப வசதி மற்றும் நவீன வசதிகள் கொண்ட மேடை தென் இந்திய சிற்பிகளின் கலை வண்ணத்தில் மகான்கள், நாயன்மார்களின் உருவச் சிலைகள், புராணங்களிலிருந்து முக்கிய காட்சிகள் என்பன அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு அருகே வேதபாடசாலை பண்டை குருகுல முறைப்படி- 100 மாணவர்கள் தங்கியிருக்க அறைகளும், நடு முற்றத்தில் அமர்ந்து படிக்க வசதியும் கொண்ட அழகிய கட்டடமும்எழுந்து கொண்டிருக்கிறது.

### யாத்திரீகர் வசதி

வேதப் பாடசாலைக்கு அண்மையில் நூல் நிலையம். இந்திய மதத் தத்துவங்கள், கலை கலாச்சாரம் சம்பந்தமான 50,000 நூல்கள் இங்கு வைக்கப்பட்டிருப்பதோடு மாணவர்களுக்காகவும் யாத்திரீகர்களுக்காகவும் வாசிகசாலை ஒன்றும் உருவாகி வருகிறது.

இதற்கருகில் அன்னதான மண்டபம். 700 பேர் ஒரே சமயத்தில் உட்கார்ந்து உணவருந்தும் வசதிகள் கொண்ட இரண்டு மாடிக் கட்டடம் ஏற்கனவே பூர்த்தியாகி விட்டது. இவற்றையெல்லாம் படிக்கும் போது ஏதோ புத்தம் புதிய புனித தலம், பிரமாண்டமான திருத்தலம் ஒன்று உருவாகிவிட்டதாக உங்களுக்கு படலாம். நேரில் சென்று பார்வையிடும் விருப்பமும் ஏற்படலாம்.


தொலை தூரங்களில் இருந்து வரும் யாத்திரீகர்களின் வசதிக்காக தங்குமிட வசதிகள் ஏராளமாக உருவாக்கப்பட்டு பூர்த்தி யடைந்து வருகின்றன. மேற்குலக நாடுகளின் படுக்கை, குளியலறை வசதிகளுக்கு பழக்கப்பட்டு விட்டவர்களுக்காக தென்னாங்கூர் கிராமத்திலும் 'கொட்டேஜ்' எனப்படும் தனி வீடுகளை- சென்னை, புதுடில்லி ஹோட்டல்களிலும் காணப்படாத மேற்குலக வசதிகளுடன் கட்டி முடித்திருக்கிறார் குருஜி அவர்கள்! இந்த கொட்டேஜ் வீடுகளில் கிடையவே கிடையாத ஒன்று சமையலறை மட்டும் தான்! காரணம்- மூன்று வேளை உணவு, மற்றும் இடையில் பல தடவை டிபன் உட்பட அனைத்தும் யாத்திரீகர்களுக்கு இலவசமாகவே வழங்கப்படுகின்றன குருஜியின் தென்னாங்கூர் ஆசிரமத்தில்!

நாம சங்கீர்த்தனமும் அன்னதானமும் சத்குரு சுவாமி ஞானானந்தர் வலியுறுத்தும் இரண்டு இலட்சியக் கொள்கைகள்! அவரது கொள்கைகளை இன்று தமது வாழ்வின் மூச்சாகக் கொண்டு செயற்படுத்தி வருகிறார் அவரது பிரதம சிஷ்யர் சுவாமி ஹரிதாஸ் கிரி அவர்கள்.

### ஞானக்குழந்தை

சத்குரு சுவாமி ஞானானந்தரின் வாழ்க்கை வரலாற்றை அறிய முற்பட்டோர் பலர். ஆனால் பரமனின் அடியும் முடியும் தேடிய கதையாக அது முடிந்தது. சத்குரு சுவாமி ஞானானந்தர் எங்கே பிறந்தார்? ஆட்டையாம்பட்டி, சித்தலிங்கமடம் தபோவனம் போன்ற இடங்களில் வந்து அமர முன் எங்கேயெல்லாம் வாழ்ந்தார்? போன்ற தெளிவான விபரங்கள் மிகக்குறைவு.

சனாதன தர்மத்தின் ஆணிவேராக விளங்கிய ஆதிசங்கரர் தக்ஷணாமூர்த்தியின் ஒரு அம்சமாக விளங்கிய ஆதி சங்கரப் பெருமான்- உருவாக்கிய மடங்களில் ஒன்று ஜோதிர் மடம். அதன் பீடாதிபதியாக விளங்கியவர் ஸ்ரீ சிவரத்தினகிரி சுவாமிகள். இந்த சுவாமிகளைத் தேடி ஒரு நாள் வந்தது ஒரு ஞானக்குழந்தை! இது தான் தனது சீடன் என்று குருவுக்கு தெரியாது. இவர்தான் என்குரு என்று அந்தக்குழந்தைக்கு தெரியாது. இந்தக் குழந்தை தான் சத்குரு ஞானானந்தர்.


சத்குரு ஸ்ரீ ஞானானந்த சுவாமிகள்

கர்நாடக மாநிலத்தின் மங்களபுரி என்ற புண்ணிய தலத்தில் பல நூறு வருடங்களுக்கு முன் பிறந்தது இந்த ஞானக்குழந்தை. இளம் வயதிலேயே குருவைத் தேடி வந்த இக்குழந்தையை தனதாக்கிக் கொண்ட ஸ்ரீ சிவரத்தினகிரி சுவாமிகள் சனாதன தர்மத்தின் எல்லா சாத்திரங்களையும் கற்றறிவித்து தனக்குப்பின் ஜோதிர்மடத்தின் பீடாதிபதியாக நியமித்தார். ஆனால் தமது குரு இல்லாத இடத்தில் இருக்க சத்குரு ஞானானந்தரின் மனம் இடம் தரவில்லை. எனவே பீடாதிபதி பதவியை கைவிட்டு, நீண்ட நெடும் பயணம் புறப்பட்டார்.

### ஞான ஆனந்தம்

இமயத்தின் பனிக்குகைகளிலும், இலங்கை, மலேஷியா போன்ற நாடுகளிலும் நீண்ட காலம் தங்கி இருந்து பல இடங்களுக்கும் நடந்தே பாத யாத்திரையாக போய், ஆட்டையாம் பட்டி, சித்தலிங்க மடம் ஆகிய இடங்களில் சில காலம் தங்கி இருந்து, தென் பெண்ணை நதிக்கரை ஓரத்தில் 'தபோவனம்' என்ற ஆச்சிரமத்தை நிறுவி, அங்கு தங்க ஆரம்பித்தார் சுவாமி ஞானானந்தர். கருணைக்கடலான சத்குரு சுவாமிகள் தபோவனத்தில் தன்னைத் தேடி வந்த அனைவருக்கும் ஞான ஆனந்தம் தந்தார். துயர்களை அகற்றினார். கண்ணீரைத் துடைத்தார்.


விமர்சகர் சுப்புடுவுடன் கட்டுரையாளர்

கடவுளின் கருணையைப் பெற சுலபமான வழி நாம சங்கீர்த்தனம் செய்வது; அவன் புகழ் பாடுவது என்று போதித்தார். உருவாய் உளதாய் அருவாய் இலதாய் விளங்கும் அந்தப் பரம்பொருள்- ஸ்ரீ தட்ச ணாமூர்த்தியாக வந்தான். ஆதிசங்கரராக பூமியில் அவதரித்தான். அவனே மீண்டும் சத்குரு ஸ்ரீஞானானந்த மூர்த்தியாக அவதரித்து நம்மிடையே உலவினான்; மகிமைகள் பலவற்றை நடத்தினான் என்பதற்கு சான்றுகள் பல. அப்படியான ஞானச்சுடர் தனக்கென ஒரு வாரிசையும் உருவாக்கியது. எத்தனையோ சீடர்கள் மத்தியில் பலத்த சோதனைகள் பலவற்றை நடத்தி, திருவிளையாடல்கள் பல புரிந்து, நீண்ட காலத்துக்கு பின் அந்த ஞானப்பழம் தெரிவு செய்தது- அண்ணாமலை ஜோதியோடு பிறந்து, அரச பரம்பரை போன்ற செல்வந்த வாழ்க்கை வாழ்ந்து அனைத்தையும் உதறித் தள்ளி, தன்னை அண்டி நின்ற சுவாமி ஹரிதாஸ் குருஜி அவர்களை.

சத்குரு சுவாமி ஞானானந்தர் என்ற ஞானக் கதிரவனால் நெஞ்சக் கஞ்சம் அலரப் பெற்று, பின்பு அது காயாகிப் பக்தியினால் கனிந்து சாந்தரசத்தைப் பில்கவிடும் நிலையைப் பெற்றவர் ஸ்ரீ சுவாமி ஹரி தாஸர். இரும்பு பொன்னானாற் போல அவரிடையே உண்டான மாற்றம் அற்புதமானது. அமைதியும், அறிவும், பேச்சாற்றலும், இசைத் திறமையும், பிறரைக் கவரும் சொல்லாழமும் அவரிடம் மலர்ந்து இன்று லட்சக் கணக்கான மக்களின் உள்ளத்தைக் கனிவிக்கின்றன; அடிமையாக்

(15 ம் பக்கம் பார்க்க)

> சத்குரு ஞானானந்தரின் திருவுளப்படி அவரது சந்நிதியில் அகில உலக பாகவதப் பெருமக்கள் முன்னிலையில் சுவாமி ஹரிதாஸ் கிரி குருஜி அவர்களினால் 'குருபக்த சிரோன்மணி' என்ற பட்டமளிக்கப்பட்டு, பொன்னாடை போர்த்தப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட நால்வரில் இக்கட்டுரை ஆசிரியர் திரு விமல் சொக்கநாதனும் ஒருவர்.
>
> ஆ-ர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சிறுகதை

ஒரு குறிப்பு:
கடந்த இதழில் வெளியான ஸ்ரீதரனின் சிறுகதையின் தலைப்பு **காவற்காரர்கள்.** காவல்காரன் என்று இது தவறுதலாக பிரசுரமாகியிருக்கிறது. ஆ-ர்

# அந்தி மந்தாரை



**பெ.கோ.சுந்தரராஜன் (சிட்டி)**

தமிழில் புதுவகைச் சிறுகதைகள் படைத்துக் கொடுத்த 'மணிக்கொடி குழு'வின் ஆதிபகவன்களில் ஒருவர் 'சிட்டி' சுந்தரராஜன். மணிக்கொடி தோன்றுவதற்கு முன்னரே 'கலைமகளி'ல் அவரின் சிறுகதைகள் சில வெளிவந்தன. ஆங்கிலத்திலேயே எழுத ஆரம்பித்து ஆங்கில சஞ்சிகைகளோடும் மேலை நாட்டுச் சிறுகதைகளோடும் பரிச்சயம் கொண்டிருந்த இவர், 'அந்தி மந்தாரை'என்ற இந்தக் கதையை எழுதியபோதுதான் வடிவத்தில் அவருக்கு வெற்றிபெற முடிந்தது. 1936இல் 'மணிக்கொடி'யில் வெளியான இக்கதை, 1938இல் 'கலைமகளி'லும் 1943இல் 'கலாமோகினி'யிலும் பிரசுரமானது.

'பட்டாபி'

பதில் இல்லை, ஒரு விநாடி மீண்டும் ஒரு முறை அழைத்தான் சேஷாத்திரி, பட்டாபி உள்ளே இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் ஜன்னல் கதவு திறந்திருந்தது. அதுதான் பட்டாபி ஆபீஸிலிருந்து வந்து விட்டானென்பதற்கு அடையாளம். இருந்தால் பதில் சொல்லாமலிருப்பானா? ஒரு வேளை உள்ளே காபி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறானோ... என்று நினைத்துக் கொண்டே சேஷாத்திரி சிறிது தயங்கிய வண்ணம் படிகளிலேறி ஓரமாய் மூடியிருந்த கதவைத் திறந்தான். சட்டென பின்வாங்கினான்.

நேர் எதிரே முற்றத்தில் பாத்திரங்களைத் தேய்த்துக் கொண்டிருந்த காமாக்ஷி அவசரமாய் எழுந்து நின்று, முழங்கையால் புடவையின் மேல் பாகத்தைச் சரியாய் தள்ளியமைத்துக்கொண்டாள்.

'பட்டாபி வரவில்லையா இன்னும்?' என்றான் சேஷாத்திரி ஒரு விநாடி தயங்கியபின்.

காமாக்ஷி கையிலிருந்த பாத்திரத்தைப் பார்த்தாள்.

அவ்வளுடைய உதடுகள் அசைந்ததுபோல தெரிந்தன. ஆனால் பதில் இல்லை.

மறு நிமிஷம் சேஷாத்திரி கீழே இறங்கிப் போய்விட்டான். கொஞ்ச தூரம் சென்றதும் அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. எப்பொழுது வருவான் என்று கேட்காமல் போனோமே.. வந்தால் 'ஆற்றங்கரையில் பார்க்கச் சொல்லியிருக்கலாமே' என்று நினைத்தான். ஆயினும் பதில் சொல்வதற்கு சங்கோஜப்பட்ட காமாக்ஷியை இன்னும் கஷ்டப்படுத்த அவன் மனம் இணங்கவில்லை. தான் அவளைக் கேட்டதுகூடத் தப்பு என்று நினைத்தான். பட்டாபிராமனின் மனைவியை முதல் முதலில் அப்பொழுதுதான் பார்க்க நேரிட்டதால் புது மனிதனாகிய அவனிடம் அவள் பதில் சொல்லத் தயங்கியது இயற்கைதான் என்று அவனுக்கு புலப்பட்டது.

சேஷாத்திரி போன கால்மணி நேரத்தில் பட்டாபி ராமன் கடையிலிருந்து நெய்யும் சில சாமான்களும் வாங்கிக் கொண்டு வந்தான்.

அவற்றை உள்ளே எடுத்து வைக்கும்போது காமாக்ஷி 'கடுகு மறந்து போய்விட்டேளா?' என்றாள்.

'கடுகு சொன்னாயா,' என்றான் பட்டாபிராமன் சில்லரையைக் கணக்குப் பார்த்துக்கொண்டே.

'நான்தான் மூணுதரம் சொன்னேனே. கடுகு இல்லாமே என்ன பண்றது?'

'பொய்யெல்லாம் சொல்லாதே. நான் போனப்புறம் கடுகு ஞாபகம் வந்திருக்கும்.'

'ஆமா பொய் சொல்றா உங்ககிட்டே வந்து. எங்கேயோ நினைச்சிண்டிருந்தா சொல்றது காதிலே விழுமா?'

'அடயப்பா. கோபம் வந்திட்டாப்போலே இருக்கே. உன்னையேதான் நினைஞ்சுண்டிருந்தேன். தப்புத்தான். மன்னிக்கணும்.' என்றான் பட்டாபி பரிகாசமாக.

'போரும், மறந்து போயிட்டா கேலியென்ன வந்தது' என்று பாதி வெட்கத்துடனும் பாதி சந்தோஷத்துடனும் சொல்லிக் கொண்டே காமாக்ஷி சர்க்கரையை போட்டுக்கொண்டே இருந்தாள்.

'சரியம்மா, நாளைக்கு வாங்கிண்டு வந்துடறேன் இப்போகாபி உண்டா இல்லையா?'

'இதோ வந்திட்டேன்' என்று சொல்லிக் கொண்டு காமாக்ஷி சர்க்கரைப் புட்டியை எடுத்துக் கொண்டு சமையலறைக்குப் போனாள்.

சேஷாத்திரி ஆற்றங்கரை மணலில் மெதுவாக நடந்து கொண்டிருந்தான். ஆங்காங்கே பையன்கள் விளையாடிக்கொண்டும் ஓடிக் கொண்டுமிருந்தனர். பெண்கள் ஓடுகால்களிலிருந்து தண்ணீர் எடுத்துச் சென்று கொண்டிருந்தனர். பாலத்தில் ஒரு கூட்ஸ் வண்டி முடிவே கிடையாதோ என்று தோன்றும்படி மெதுவாக சென்று கொண்டிருந்தது.

சேஷாத்திரிக்கு பட்டாபியை சந்திக்க முடியவில்லையே என்று கொஞ்சம் வருத்தந்தான். அவன் தல்லாகுளத்தில் மதுரை ஜில்லா போர்டு ஆபிஸில் வேலை பார்த்து வந்தான். பட்டாபி சேதுபதி ஹைஸ்கூலில் ஒரு உபாத்தியாயராக இருந்தான். இருவரும் சந்தித்து ஆறு மாதம்தான் ஆகிறது என்றாலும் நேசம் முற்றி விட்டது. தினந்தோறும் ஆற்று மணலில் சந்திப்பது அவர்கள் வழக்கம்- இரவு ஏழு மணி வரையில் பேசிக் கொண்டிருப்பார்கள், சேஷாத்திரி தல்லாகுளத்திலேயே ரூம் வைத்துக் கொண்டு ஹோட்டலில்தான் சாப்பிட்டு வந்தான். பட்டாபியின் மனைவி வரப் போகிறாளென்று குடித்தனம் வைப்பதற்காக சேஷாத்திரியும் அவனும் சேர்ந்துதான் வீடு பார்த்தார்கள். தன் மனைவி வந்து ஒரு வாரமாக பட்டாபிக்கு சேஷாத்திரியை சந்திக்க முடியவில்லை. சேஷாத்திரிக்கும் ஆபீசில் வேலை அதிகமாயிருந்ததால் வர சரிப்படவில்லை. இன்று தான் ஒருவிதமாக காகிதங்களையெல்லாம் மூட்டை கட்டிப்போட்டுவிட்டுப் புறப்பட்டான். மூன்று நாளைக்கு முன்பே சேஷாத்திரியை வீட்டுக்கு வரும்படி பட்டாபி சொல்லியனுப்பியிருந்தான். இன்று தவறினால் அடுத்த ஞாயிற்றுக்கிழமை வரையில் பட்டாபியை சந்திக்க சேஷாத்திரிக்கு சௌகரியப்படாது.

சேஷாத்திரி பிரம்மச்சாரிதான். பட்டாபியைப் பற்றி நினைக்கும்போது அவனுடைய குடும்ப வாழ்க்கையைப்பற்றி இயற்கையாய் எண்ணங்கள் எழுந்தன. காமாக்ஷி அவ்வளவு கர்நாடகமான பெண், பதில்கூட சொல்லமாட்டாள் என்று சேஷாத்திரி நினைக்கவேயில்லை. ஒரு வேளை வேண்டுமென்றே பேசாமலிருந்திருப்பாளோ என்றுகூட சேஷாத்திரி நினைத்தான். பட்டாபியை சந்திக்க தனக்கிருந்த ஆவலில் அவனுக்கு அம்மாதிரி பட்டது. ஆனால் உடனே தன்னுடைய நியாயமற்ற மனப்பான்மையும் அவனுக்குத் தெரிந்தது.

புதிதாக குடித்தனம் வைத்திருக்கும்போது ஒரு இளம் பெண், தன் கணவன் நண்பர்களோடு காலங்கழிப்பதைவிட தன்னருகில் இருக்க வேண்டுமென்றுநினைப்பது இயற்கைதானே. ஆகவே காமாக்ஷி வேண்டுமென்றே பேசாமலிருந்தாலும் அதில் தப்பு ஒன்றும் இல்லை என்று மனதை சமாதானப்படுத்திக் கொண்டான். உண்மையில், தன்னோடு அப்பெண் பேசாதது தன்னுடைய சுயமதிப்பைப் பாதித்துவிட்டதென்பது மாத்திரம் சேஷாத்திரிக்குத் தோன்றவில்லை.

பட்டாபி பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் மனைவி மூலம் தன் வரவைப்பற்றிக் கேள்விப்படுவான்; வழக்கம்போல தன்னை சந்திக்க ஆற்றங்கரைக்கே வருவான் என்று சமாதானப்படுத்திக் கொண்டு சேஷாத்திரி மணலில் உட்கார்ந்தான்.

பட்டாபிக்கு காபியை ஆற்றிக் கொடுத்து விட்டு காமாக்ஷி கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஐந்தரைக்கு மேலாகியிருந்தது. புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு கொஞ்சலாகப் பேசத் தொடங்கினாள்.

'வெளியிலே போகப் போறேளா'

'ஏன்'

'இல்லெ, கேட்டேன்.'

'கடுகு வாங்கிண்டு வரணுமோ?

'ஆம். கத்தரிக்காய் வேணும். கேட்டா....'

'ஒரு வேளை நீயும் வரலாம்னு எண்ணமோ?' என்று குறும்பாகக் கேட்டான் பட்டாபி.

காமாக்ஷிக்கு முதலில் சந்தோஷம், பிறகு கேட்டது பரிகாசம் என்று தெரிந்ததும் ஏமாற்றம்,.

'ஆம். போறபோதெல்லாம் ரொம்ப அழைச்சிண்டு போறேளோ இல்லையோ'....

'வந்து ஒரு வாரமாகல்லே. அதுக்குள்ளேயா சண்டை ஆரம்பிச்சுட்டே. நீ கேட்டுத்தான் அழைச்சிண்டு போகாமே இருந்துட்டேனா?'

'உங்களுக்கு இஷ்டமில்லாதபோது நான் கேக்கணுமாக்கும். உங்களுக்குத்தான் ஏதாவது வேலை இருந்துண்டே இருக்கே. சாயங்கால வேளையிலே..... எப்பொ பாத்தாலும் சினேகிதாள்.... என்று பாசாங்குக் கோபத்துடன் சொல்லிக் கொண்டே காமாக்ஷி காபி டம்ளரை எடுத்துக்கொண்டு உள்ளே போனாள்.

'ஏதேது ரெம்ப கோபம் வராப் போலேயிருக்கே. அதுவும் பாவம் என் சினேகிதா மேலே. யாராவது சினேகிதன் வந்தாக்கூட விரட்டி விடுவே போலிருக்கே. பார்க்கப் போனா என் சினேகிதா என்ன சொல்றா தெரியுமா? நீ வந்துட்டா நான் அவாளை மறந்துடுவேன்னு முந்தியே பரிகாசம் பண்ணிண்டிருந்தா....' என்று சொல்லிக் கொண்டே நாற்காலியிலிருந்து எழுந்தான் பட்டாபி.

'ஆம்' இப்பொ என்னோடுதானே சினிமாவுக்கும் டிராமாவுக்கும் போறேள்' சொல்லமாட்டேளா என்று முணுமுணுத்தாள் காமாக்ஷி.

பாட்டாபி சிரித்து விட்டான். 'ஓகோ, சினிமாவுக்குப் போகணும்னா இவ்வளவு தூரம் பேசினே என்று சொல்லிக்கொண்டே உள்ளே போனான். உட்கார்ந்த வண்ணம் அடுப்பருகில் ஏதோ வேலை செய்துகொண்டிருந்த காமாக்ஷி எழுந்து நின்றாள். மனத்திற்குள் மீண்டும் சந்தோஷம். 'நான் சினிமாவுக்குப் போகணும்னு சொன்னேனா' என்று தன்அழகிய நெற்றி சுருங்கக் கொஞ்சினாள்.

'அதுக்காகத்தானே இத்தனை கேள்வி போட்டே, நேற்று முழுவதும் சினிமாவைப்பற்றித்தானே எதிர்த்தாத்துஅம்மாமியோட பேசிண்டிருந்தே.'

'ஒண்ணுமில்லை. அந்த மாமி போயிருந்தாளாம். கதையைச் சொல்லிண்டு இருந்தா.'

'கதை பூராவும் தெரியுமோல்லியோ, பின்னே சினிமாவுக்குப் போகவேண்டியதில்லையே.'

காமாக்ஷிக்கு திரும்பவும் ஏமாற்றம் 'என்னை அழைச்சிண்டு போக இஷ்டமில்லாட்டா இப்படியெல்லாம் தர்க்கம் பண்ணணுமாக்கும், நான் கேட்டேனா இப்போ?'

'பின்னே நீ வரவில்லையா? ஏழு மணி ஆட்டத்துக்கு போகலாம்னு இருக்கேன்.'

தன்பக்கம் வெற்றி என்பது காமாக்ஷிக்கு இப்பொழுது நிச்சயமாய்விட்டது. சந்தோஷமும் பரிகாசமும் கலந்து தோன்ற, 'நான் எதுக்காக? யாராவது சினேகிதா வருவா. நான் வந்ததினாலே அவாளோடே போக முடியல்லேன்னு சொல்றதுக்கா. நான் சினிமாவே பாத்ததில்லையா- அதிசயம்!' என்று சொல்லிவிட்டு வேலையில் ஈடுபடுபவளைப் போல் இரும்படுப்பை மூட்டப்போனாள்.

மணி ஆறேமுக்கால் இருக்கும். சேஷாத்திரி ஆற்று மணலை விட்டுப் புறப்பட்டான். அன்று கொஞ்சம் தமாஷாகக் காலம் கழிக்கலாமென்று வந்தும் நண்பனை சந்திக்க முடியாததால் ஏமாற்றமும் மந்தமும் அதிகரித்தது. மெல்ல தல்லாகுளத்தை நோக்கி நடந்தான். திடீரென்று மனதில் ஏதோ யோசனை தோன்ற ஊர்ப்பக்கம் திரும்பி வேகமாகச் சென்றான்.

சினிமா முடிந்து கூட்டம் கலைந்து கொண்டிருந்தது. பட்டாபி ஓரத்தில் காமாக்ஷியுடன் ஒதுங்கி நின்று கூட்டம் முழுவதும் போகும்வரை காத்திருந்தான். காமாக்ஷியின் முகத்தில் பிரகாசம். கணவனோடு சந்தோஷமாக சினிமா சென்ற வெற்றியுடன் அவளுடைய சந்தோஷம் அதிகரித்தது. கூட்டம் மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. பட்டாபி குறிப்பற்ற பார்வையுடன் கூட்டத்தினரைப் பார்த்துக் கொண்டிருந்தான். சட்டென்று இரண்டடி முன்சென்று தலை நிமிர்ந்து பார்த்தான்.

'கூட்டமெல்லாம் போகட்டுமே' என்றாள் காமாக்ஷி.

'இல்லை. யாரோ போறாப் போலே இருந்தது. அது தான் பார்த்தேன்' என்று கூட்டத்தை மீண்டும் பார்வையால் அலசிப் பார்த்தான். அவன் எதிர்பார்த்தபடி

மறுநாள் காலையும் பட்டாபி பேசவில்லை. அரை மனதாக சாப்பிட்டுவிட்டு ஆபிஸுக்குப் புறப் பட்டான்.

கதவுவரையில் போய்விட்டுத் திரும்பி, 'நான் ராத்திரி சாப்பிட வரமாட்டேன்' என்று பொதுவாகச் சொன்னான்.

காமாக்ஷி சுவரோரத்தில் தலை குனிந்தவாறு நின்று கொண்டிருந்தாள். கால் கட்டைவிரலில் இரண்டு துளி கண்ணீர் சொட்டின.

13ம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அந்திமந்தாரை

( 12 ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரும் கூட்டத்தில் இருந்ததாகத் தெரியவில்லை.

கூட்டம் கலைந்தபின் இருவரும் ஒரு ஜட்கா அமர்த்திக் கொண்டு புறப்பட்டார்கள். வண்டி சிறிது தூரம் சென்று ஒரு தெருவில் திரும்பும் சமயத்தில் பட்டாபி திடீரென்று தூரத்தில் பார்த்துக் கைதட்டினான். வண்டியை நிறுத்தச் சொன்னான். வண்டிக்காரன் அவனுடைய சொற்படி நிறுத்துவதற்குள் வண்டி கொஞ்ச தூரம் சென்று விட்டது. பட்டாபி இறங்கப் போனான். அதற்குள் தான் கைதட்டி அழைத்த பேர்வழி தெருக்கோடியில் திரும்பி மறைந்து விட்டதைப் பார்த்து மீண்டும் வண்டியிலேறிக் கொண்டான்.

'யார் அது?' என்றாள் காமாக்ஷி.

'சினிமாவுக்குப் போக வந்தவன் வீட்டுக்கு வராமல் போயிருக்கிறான்....' என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு பட்டாபி, காமாக்ஷியின் கேள்விக்கு பதிலாக 'ஊம்... ஒரு சிநேகிதன்' என்றான்.

'அவரையா சினிமாவிலே தேடினேள்'.

'ஊம்.. வீட்டுக்கு வருவான்னு இருந்தேன். ரொம்ப நாளா வரவில்லையே இவன்.' என்று மெதுவாகச் சொல்லிக்கொண்டான்.

'உங்களோடே போட்டோவிலே நிற்கிறாரே அவரா? தல்லாகுளத்திலே இருக்கிறதாச் சொன்னேளே?'

'என்னைப் பார்க்கவில்லையா என்ன? வெளியிலே போறவரைக்கும் இவன் சினிமாவிலே இருப்பதை நான் பார்க்கவில்லையே. கூட்டம் கலைகிறபோதே நான் கூப்பிட்டிருக்கணும்... ஆமா, சேஷாத்திரி தான்' என்றான் கடைசியில் அவளுடைய கேள்விக்குப் பதிலாக. 'ஐயையோ, மறந்தே போயிட்டேன், நீங்க கடைக்குப் போயிட்டு வரதுக்கு கொஞ்ச நாழிக்கு முன்னேதான் அவர் வந்திட்டுப் போனார்.'

'வீட்டுக்கு வந்திருந்தானா? நான் வந்திடுவேன்னு சொன்னாயோ?'

'நான் எப்படி சொல்றது ரெண்டு தரம் கூப்பிட்டார். இருக்கச் சொல்லலாம்னு பார்த்தேன். பேசறதுக்கு வெட்கமாயிருந்தது. அதுக்குள்ளே போயிட்டார்.'

பட்டாபிராமனுக்குக் கோபம் வந்துவிட்டது. 'சினிமாவுக்குப் போரதுக்கு வெட்கமில்லையோ? அவன் எப்போ வருவான்னு நான் ஒரு வாரமா காத்துண்டிருக்கேன்....'

'நீங்க வந்தவுடனே சொல்லணும்னு இருந்தேன்... மறந்து....'

'ஆம். அதுக்குள்ளே சினிமா முக்கியமாய்ப் போய் விட்டது. இப்பொவே ஆரம்பிச்சுட்டையோ இல்லையோ வீட்டுக்கு வரவாளே விரட்டரதுக்கு...

'நீங்களும் ஒண்ணும் சொல்லிட்டுப் போகல்லே...'

'சொல்லணுமோ? மறந்து போயிடுத்தாம் மனசிலே ஏதாவது நல்லெண்ணம் இருந்தால் தானே' என்று கடுமையாகச் சொல்லிவிட்டு பட்டாபி மௌனம் சாதித்தான். காமாக்ஷிக்கு அழுகை வந்துவிட்டது. வண்டி வீடுபோய்ச்சேரும் வரை இருவரும் பேசவில்லை. இருவரும் வண்டியை விட்டிறங்கியதும் பட்டாபி வண்டிக்காரனுக்குக் கூலி கொடுக்கும்போதுதான் அவனுடைய கோபத்தின் வேகம் தெரிந்தது.

ஜட்கா வண்டிக்காரர்கள் வழக்கம் தவறாமல், வண்டிக்காரன் கூலி வாங்கிக்கொண்டு கையை இன்னும் நீட்டிக்கொண்டு பல்லை இளித்தான்.

'என்னடா இன்னும்?'

'என்னமோ சாமி, ஒரு அரையணா....'

'போடா உதைக்கப் போறேன்! இரண்டணா போறாதோ லக்ஷணத்துக்கு, சீ, போ' என்று எரிந்து விழுந்தான் பட்டாபி. இந்த எதிர் பாராத கோபத்தைக் கண்டு பயந்து கொண்டே காமாக்ஷி உள்ளே சென்றாள்.

மணி பத்து இருக்கும். சேஷாத்திரி ஒரு ஹோட்டலில் காப்பியை மாத்திரம் சாப்பிட்டுவிட்டு ரூம் போய்ச் சேர்ந்தான். எப்படியாவது பொழுதைப்போக்க வேண்டுமென்று சினிமாவுக்குப் போனவன், பட்டாபியையும் காமாக்ஷியையும் கவனிக்கவேயில்லை. தான் வீட்டுக்கு வந்தது பட்டாபிக்கு தெரியாமலிருக்காதே. அவன் ஏன் ஆற்றங்கரைக்கு வரவில்லை என்ற ஏமாற்றம் கலந்த வியப்பு அவன் மனதை கஷ்டப்படுத்திற்று. புதிதாக குடித்தனம் வைத்திருக்கும் பட்டாபி நண்பர்களுடன் காலம் கழிக்க வரவேண்டும் என்று எதிர் பார்ப்பது நியாயமல்ல என்று தன் மனதைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டான். ஆயினும் மாலையில் தோன்றிய மந்தம் இரவில் மலர்ந்துவிடவில்லை, இனி அடிக்கடி பட்டாபி வீட்டுக்குப் போய் அவனைத் தொந்தரவு செய்வதுகூடச் சரியல்ல என்ற முடிவுக்கு வந்துவிட்டான் சேஷாத்திரி.

அன்றிரவு பட்டாபியும் சாப்பிடவில்லை. காமாக்ஷியும் சாப்பிடவில்லை. சாப்பிடுவதற்காக காமாக்ஷி இரண்டு மூன்று தரம் அழைத்த பிறகு பட்டாபி தனக்கு பசிக்கவில்லை என்று சீறி விழுந்தான். ஏதோ சிறிய சந்தோஷத்திற்கு செய்த முயற்சி இந்த விபரீதத்தில் முடிந்ததேயென்று வருந்தி காமாக்ஷி தன்னைத்தானே நொந்து கொண்டாள். கணவன் சாப்பிடாததால் தானும் சாப்பிட அவளுக்கு மனம் வரவில்லை.

மறுநாள் காலையும் பட்டாபி பேசவில்லை. அரைமனதாக சாப்பிட்டுவிட்டு ஆபிஸுக்குப் புறப்பட்டான்.

கதவுவரையில் போய்விட்டுத் திரும்பி, 'நான் ராத்திரி சாப்பிட வரமாட்டேன்' என்று பொதுவாகச் சொன்னான்.

காமாக்ஷி சுவரோரத்தில் தலை குனிந்தவாறு நின்று கொண்டிருந்தாள். கால் கட்டைவிரலில் இரண்டு துளி கண்ணீர் சொட்டின.

பட்டாபி அப் பெண்ணை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான். அவள்மீது திடீரென இரக்கம் தோன்றிற்று. ஆயினும் தன்னுடைய பொய் கௌரவத்தை கைவிட மனமில்லை.

'அழுகையென்ன வந்தது? நீலித்தனம் வேறேயோ?, என்ற சொல்லி விட்டுப் போய்விட்டான்.

இந்த மூளை முன்னாலேயே தோன்றியிருந்தால் இவ்வளவு விபரீதம் நேர்ந்திருக்காதே என்று நினைத்து வருந்தினாள். இருந்தாலும் புதிதாகப் பார்க்கும் ஒருவரிடம் தான் எப்படிப் பேசியிருக்கக்கூடும் என்ற ஆக்ஷேபணையும் அவளுக்குத் தோன்றியது. எப்படி இருந்தாலும் பட்டாபி வந்ததும் சேஷாத்திரியின் வரவைப் பற்றித் தெரிவிக்க மறந்து போன துரதிருஷ்டத்தைப் பற்றிய நினைவே அவளை அதிகமாக வாட்டிற்று தன் கணவனுக்கும், நண்பர்களுக்கும் நடுவில் தான் நிற்பதாக பட்டாபி பாவித்து விட்டானே என்பது தான் அவளுக்கு சகிக்கவில்லை.

அன்று சேஷாத்திரிக்கும் மன நிம்மதியில்லை. தான் திடீரென்று வந்து விட்டது தவறு என்று நினைத்தான். ஆற்றங்கரைக்கு வந்த பிறகு சிறிது நேரம் கழித்து மீண்டும் ஒருமுறை பட்டாபி வீட்டுக்குப் போயிருக்க வேண்டுமென்று அவனுக்கு இப்பொழுது தோன்றிற்று. பட்டாபிக்கும் அவனுக்கும் இருந்த நெருங்கிய சிநேகத்தில் சம்பிரதாய மரியாதைகளுக்கு இடம் கிடையாது. பட்டாபி அழைத்த பிறகுதான் சேஷாத்திரி அவன் வீட்டுக்குப் போவதென்று இருந்து விட்டால் பட்டாபி வருத்தப்படுவான். முந்தியநாள் சேஷாத்திரி போனதில் பலன் ஒன்றுமில்லை. காமாக்ஷி பதில் சொல்ல வெட்கப்பட்டு பேசாமல் இருந்துவிட்டாள் என்றாலும் பட்டாபி வந்தபிறகு சொல்லாமலிருந்திருப்பாளா? ஆனால் பட்டாபி ஏன் ஆற்றங்கரைக்கு வரவில்லை; குடித்தனம் என்று ஏற்பட்டுவிட்டால் பட்டாபிக்கு சேஷாத்திரி அவ்வளவு முக்கியமாகத் தோன்றவில்லையோ. அப்படியிருக்கும் பக்ஷத்தில் சேஷாத்திரி பட்டாபி வீட்டுக்கு இனி போவது உசிதமில்லையென்ற முடிவுக்கே மீண்டும் வந்தான். ஆனால் தான் கோபித்துக் கொண்டதாக பட்டாபி, நினைத்து விட்டால்? கடைசியில் அன்று மாலை மீண்டும் பட்டாபி வீட்டுக்குப் போவதென்றே சேஷாத்திரி தீர்மானித்தான்.

தனது வேலை முடிந்ததும் பட்டாபி தல்லாகுளத்திற்குப் புறப்பட்டான். சேஷாத்திரியைப் பார்த்து, தான் சந்திக்க முடியாமற் போனதை விளக்க வேண்டுமென்று அவனுடைய விருப்பம். சேஷாத்திரியை வீட்டுக்கழைத்து சாப்பிடச் சொல்லவேண்டும் என்ற அவன் நினைத்துக் கொண்டிருந்ததெல்லாம் காமாக்ஷி பாழாக்கிவிட்டாளென்று நினைத்தான். சேஷாத்திரி சினிமாவுக்கு வந்தும் தன்னைப்பார்க்காமலிருப்பானா என்ற சந்தேகமும் அவனுக்குத் தோன்றிற்று. இந்த சந்தேகத்தின் பலனாக சேஷாத்திரி ஒரு வேளை ஏமாற்றத்தினால் கோபமடைந்திருப்பான் என்ற முடிவும் பட்டாபிக்குத் தோன்றிற்று. ஆகவே அன்று சேஷாத்திரியை நேரில் பார்த்துவிட்டுத் தன் வீட்டுக்கு ஒரு நாள் சாப்பாட்டுக்கு அழைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் சென்றான். அதோடு அன்று சேஷாத்திரியுடன் இருந்து விட்டு வீட்டில் சாப்பிடாமல்



காமாக்ஷியை தண்டிப்பதென்றும் தீர்மானித்தான்.

பட்டாபி சேஷாத்திரி ஆபீஸை அடைந்ததும் ஏமாற்றமடைந்தான். சேஷாத்திரி பட்டாபி வீட்டிற்குச் செல்வதாகச் சொல்லிவிட்டுப் போனதாக அருகிலிருந்த குமாஸ்தா மூலம் கேள்விப்பட்டான்.

ஏறக்குறைய அதே சமயத்தில் 'பட்டாபி' என்று சேஷாத்திரி கூப்பிடுவதையறிந்த வியப்படைந்த காமாக்ஷி, தன் வாடிய முகத்தைத் துடைத்தவண்ணம் ரேழிக்கு விரைந்து வந்தாள். சென்ற நாள் மாலை நினைவு வந்தது. ஏதோ பேச வாயெடுத்தாள். வார்த்தை வரவில்லை. அதற்குள் சேஷாத்திரி, 'இன்னும் வரவில்லையா?' என்று கேட்டுக்கொண்டே நகர ஆரம்பித்தான்.

காமாக்ஷியின் நெஞ்சம் பதறிற்று. தைரியமாக வாயைத் திறந்து கதவு மறைவிலிருந்தபடியே 'இப்போ வந்துவிடுவார். வந்தா இருக்கச் சொன்னார், என்று பெரிய பொய் ஒன்று சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள். ஏமாற்றத்தையே எதிர் பார்த்திருந்த சேஷாத்திரி வியந்துநின்றான். மணி ஐந்துக்கு மேலாகிவிட்டது, பட்டாபிவரும் சமயம் தான். இருந்தாலும் அவன் வரும்வரை அங்கேயே இருக்க அவனுக்குப் பிடிக்கவில்லை. பட்டாபி சொல்லிவிட்டுப் போயிருக்கும்போது இருக்காமல் என்ன செய்வது?.. இதற்குள் காமாக்ஷி ரேழியில் ஒரு நாற்காலியைக் கொண்டு வந்து போட்டு சமையலறைக்குள் சென்று விட்டாள். சேஷாத்திரி இந்த சுருக்கமான வழியை உபயோகித்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

பட்டாபி விரைந்து வீடுநோக்கி வந்துகொண்டிருந்தான். ஒருபக்கம் அவனுக்கு சந்தோஷம். மறுபுறம் தான் காமாக்ஷியை தண்டிக்க நினைத்தது கெட்டுப் போய்விடுமோ என்று பயம், முந்திய நாள் போலவே சேஷாத்திரி வந்து பார்த்துவிட்டுப் போயிருப்பான் என்றே நினைத்துக் கொண்டு வந்தான். எப்படியும் சேஷாத்திரியை ஆற்றங்கரையில் சந்திக்கலாம். அவனையும் அழைத்துக் கொண்டு ஹோட்டலில் போய் சாப்பிட்டு விடலாம் என்று தீர்மானித்தான். காலையில் கூறியபடி வீட்டில் சாப்பிடுவதில்லை என்ற தீர்மானத்தை மட்டும் கைவிடக்கூடாதென்பது பட்டாபியின் வைராக்கியம்.

பட்டாபியின் வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்த சேஷாத்திரி சிறிது தூரம் வெளியில் போய்விட்டு வரலாமென்று தீர்மானித்து எழுந்தான். திரும்பி வருவதாக காமாக்ஷியிடம் சொல்லி விட்டுப் போவதா வேண்டாமாவென்று தயங்கினான்.

அதேசமயத்தில் பட்டாபியும் வேகமாக வந்து சேர்ந்தான்.

'ரொம்பநாழியா காத்துக் கொண்டிருக்கையா? நேத்து கூட வந்திருந்தையாமே' என்று முகத்தில் அசடு தட்ட பட்டாபி குசலம் விசாரித்தான். 'இல்லை, வந்து 15 நிமிஷம் இருக்கும்' என்றான் சேஷாத்திரி.

பட்டாபி வேகமாக உள்ளே சென்று சட்டையைக் கழற்றிவிட்ட வந்து கீழே உட்கார்ந்தான். முதலில் சிறிது நேரம் இருவரும் ஒன்றும் போசாமல் மேலும் கீழுமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிறகு பட்டாபி சேஷாத்திரியை சினிமாவில் பார்த்ததையும் சந்திக்க முடியாததையும் பற்றித் தெரிவித்தான். அதிலிருந்து பேச்சு வளர்ந்து விட்டது.

சுமார் ஒரு மணி நேரம் இருவரும் பேசிக் கொண்டே இருந்தார்கள். பட்டாபியின் மனதில் மாத்திரம் வேதனையாக இருந்தது. சேஷாத்திரியை சாப்பிடச் சொல்ல முடியாதே ஏதாவது சாக்குச் சொல்லி ஹோட்டலுக்கு அழைத்துக் கொண்டு போகவேண்டுமே என்ற யோசனை மாத்திரம் அவனுடைய மனதில் பகைபுலத்தில் நடந்து கொண்டிருந்தது.

தனக்கு காமாக்ஷிமேல் ஏற்பட்ட கோபம் வெளியில் தெரியக்கூடாது. காமாக்ஷியிடம் சாப்பாடு தயாரிக்கச் சொல்லவும் மனமில்லை. மணி ஏழரை ஆகிவிட்டது. இந்த சமயத்தில் சேஷாத்திரி தனக்கு நேரமாகி விட்டது என்று எழுந்தான். சேஷாத்திரியே தன்னுடைய சங்கடமான நிலையிலிருந்து தப்ப வழி காண்பித்ததைக் கண்டு பட்டாபிக்கு மனதில் கொஞ்சம் சந்தோஷந்தான்.

'என்ன அவசரமா?' என்று பொதுவாகக் கேட்டான்.

'கொஞ்சம் வேலையிருக்கு. நாளை காலையிலேயே ஆபீஸுக்குப் போகணும்' என்றான் சேஷாத்திரி.

'இங்கேயிருந்தே போனால் போகிறது' என்று பட்டாபி மரியாதையாகக் கூறினான்.

தான் இரவு அங்குதான் சாப்பிடவேண்டும் என்று சேஷாத்திரிக்குத் தோன்றிற்று. இருந்தாலும் மரியாதைக்காக, 'அதுக்கென்ன இன்னொருநாள் வரேன்' என்று சொல்லிக்கொண்டே எழுந்தான்.

சேஷாத்திரி இருக்க சம்மதித்துவிட்டால் தன் வைராக்கியம் போவதோடு தன் நிலைமையும் அசம்பாவிதமாய்விடுமே என்ற திகிலுடனிருந்த பட்டாபிக்கு இந்த பதில் மனநிம்மதியைக் கொடுத்தது.

'சரி, சனிக்கிழமை ராத்திரியாவது கட்டாயம் வந்திடு... இரு நானும் வரேன். கடைக்குப் போகணும்' என்று சொல்லிக்கொண்டு தன் மேல்வேஷ்டியை எடுக்க உள்ளே சென்றான்.

வாசற்படியில் நின்றுகொண்டிருந்த சேஷாத்திரிக்கு பட்டாபி அடைந்த வியப்பு கொஞ்சம்கூடத் தெரிந்திருக்க முடியாது. பட்டாபி உள்ளே நுழைந்ததும் காமாக்ஷி ஏதோ ஆவலோடு அவனிடம் சொல்ல வந்தாள். தன் வைராக்கியத்தை மறக்காத பட்டாபி முகத்தைத் திருப்பிக்கொண்டு வேகமாக அறைக்குள் நுழைந்து மேல்வேஷ்டியை எடுத்துப் போட்டுக் கொண்டான். சட்டைப் பையிலிருந்து கொஞ்சம் பணமும் எடுத்துக் கொண்டு கூடத்திற்கு வந்ததும் அப்படியே பிரமித்து நின்று விட்டான்.

காமாக்ஷி ஒரு கூஜாவிலிருந்து இரண்டு வெள்ளி டம்ளர்களில் வெந்நீர் வார்த்துக் கொண்டிருந்தாள். இரண்டு இலைகள் போடப்பட்டு அருகில் பலகைகளும் போடப்பட்டிருந்தன. பட்டாபி நிற்பதைக் கண்டு தலை நிமிர்த்திய காமாக்ஷி தன் வெற்றிப் புன்னகையை மறைத்துக் கொண்டு, சாப்பிட்டு விட்டுப் போகச் சொல்லுங்கள்' என்றாள்.

பட்டாபிக்கு ஏற்பட்ட எதிர் பாராத வியப்பில் ஒன்றும் தோன்றவில்லை. அவனுடைய வைராக்கியம் அவன் மனதில் வெகு ஆழத்திலிருந்து ஈனஸ்வரத்துடன் கத்தியது அவனுக்குக் கேட்கவில்லை. இருந்தாலும் தன் பெருமையை விட்டுக் கொடுக்காமல், 'முன்னாலேயே சொல்றதுக்கென்ன, அவன் போகணுமாம்' என்று சொல்லிக் கொண்டே நகர்ந்தான்.

'நான்தான் அவரை இருக்கச் சொன்னேன். நீங்க சொன்னதா சொன்னேன், சாப்பிடாது அனுப்பினால் ஏதாவது நினைக்கப் போகிறார்' என்றாள் காமாக்ஷி. காமாக்ஷியே சேஷாத்திரியை இருக்கச் சொன்னாள் என்பதைக் கேட்ட பட்டாபிக்கு வியப்பு அதிகரித்தது. கடைசியில் காமாக்ஷி வெற்றி பெற்று விட்டாளே என்னும் உணர்ச்சி அவளுடைய வார்த்தைகளில் அவனுக்கு உண்மையாகவே பட்டது.

முகத்தில் முன்னைவிட அதிக அசடு வழிய வாசலுக்குப் போனான்.

'டே, சாப்பிட்டுட்டே போகலாம் வா, சமையல் ஆயிடுத்தாம்' என்றான்.

பட்டாபி முதலில் தான் போவதற்கு சம்மதித்ததைப் பற்றி வியந்துகொண்டிருந்த சேஷாத்திரி பட்டாபி ஏதோ சங்கடமான நிலையில் அகப்பட்டுக் கொண்டு விட்டான் என்ற உணர்ச்சியுடன் உள்ளே சென்றான்.

சாப்பிடும்போது சேஷாத்திரி சமையலைப்பற்றி தன் பாராட்டு தலை பட்டாபியிடம் ஆங்கிலத்தில் தெரிவித்தான். ஹோட்டலிலேயே சாப்பிட்டுக் கொண்டிருந்து விட்டு அன்று வீட்டுச் சாப்பாடு சாப்பிடுவதினால் ஏற்பட்ட மாறுதலைக் குறிப்பிட்டான்.

அதுவரை பேசாமல், மனோ வேதனையுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்த பட்டாபி தன் தோல்வி முழுவதையும் ஒப்புக்கொள்ளத் தீர்மானித்தான். பரிமாறிக் கொண்டிருந்த காமாக்ஷியைத் தலைநிமிர்ந்து பார்த்தான். அவளுடைய முகம் சந்தோஷத்தால் மலர்ந்திருந்தது. அவளுடைய மகிழ்ச்சி அவனையும் பாதித்தது.

'அவளா சமைச்சதினாலே நன்னாருக்கு போலிருக்கு. நான் சொன்னா கேட்டுடுவான்னு நினைக்கிறாயா?

உனக்கு சாப்பாடு போடணும்னு அவளா இஷ்டப்பட்டிருக்கா'.

'உனக்கு இஷ்டமில்லையா என்ன?' என்றான் சேஷாத்திரி சிரித்துக் கொண்டே.

'உனக்கு சமாசாரம் தெரியாது. ரெண்டு நாளா எங்களுக்குள்ளே சண்டை அப்பா. இன்னைக்கு சாப்பாடு கிடைக்கும்னு நான் நினைக்கவே இல்லை. நீ வந்ததினாலேயே ஒருவாறாய் சண்டை நின்றுவிட்டது. இனிமேல் சண்டை வந்தால் சொல்லியனுப்புகிறேன். சாப்பிட வந்துடப்பா' என்று பரிகாசத்தில் உண்மையை மறைத்து விளக்கினான் பட்டாபி.

அப்படியானா நீங்க சந்தோஷமா இருக்கிறபோது வந்தா சாப்பாடு கிடையாது போலிருக்கு' என்றான் சேஷாத்திரி.

'அதென்னமோ அவளுடைய இஷ்டமப்பா' என்று கேலி செய்து கொண்டே பட்டாபி, கதவோரத்தில் நின்று கொண்டிருந்த காமாக்ஷியைப் பார்த்தான்.

காமாக்ஷி வெற்றியின் பலனான அலட்சியத்துடன் இந்த சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்தாள். பட்டாபி தன்னை பார்ப்பது கண்டு, பாசாங்குக் கோபமும் உண்மைப் புன்னகையும் சேர்ந்து பிரகாசிக்கும் தன் முகத்தை சட்டென்த் திருப்பிக் கொண்டாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நவராத்திரியும் திருவிளக்குப் பூசையும்

அனைத்துலகங்களையும் உருவாக்கி அதனுள்ளே அனைத்தையும் உருவாக்கி, காத்து மீண்டும் தன்னிடத்திலேயே, சேர்த்துக் கொண்டு விளங்கக்கூடிய ஏதோ ஒரு பொருள் இருக்கிறதே, அதற்குத்தான் 'பரம் பொருள்' என்று பெயர். இதைத்தான் வேதங்கள் அனைத்தும் 'பிரம்மம்' என்று குறிக்கின்றன.

ஒன்றாகிய பிரம்மம் செயல்படும்போது தன்னை இரண்டாக அமைத்துக் கொள்ளுகிறது. அதாவது ஒருசெயலை எண்ணும்போது ஒன்றாகவும், அதைச் செயல்படுத்தும் போது இரண்டாவதாகவும், தன்னைத்தானே அமைத்துக் கொள்ளுகிறது. எண்ணுவது சிவனாகவும், அந்த எண்ணத்தைச் சக்தியாகவும் பிரம்மம் பிரித்துக் கொள்கிறது.

சிவம் எண்ணுகிறது, சக்தி, செயல்படுகிறது! சக்தியும் சிவமும் இணைந்திருக்கும் பொழுதுதான் எண்ணமும் தோன்றி செயலும் பூர்த்தி அடைகிறது.

எண்ணாமல் ஒரு காரியத்தைச் செயல்படுத்த முடியாது. செயல்களை எண்ணாமல் நிறைவேற்ற இயலாது. இதைத்தான் 'சக்தியில்லையேல் சிவமில்லை; சிவமில்லையேல் சக்தி யில்லை'

முறையாக விரதமிருந்து அன்னையை வழிபட்டுவிட்டால் நம்மிடத்தே உள்ள துர்குணங்களை அழித்து, ஆணவத்தை அகற்றி ஞானத்தை அள்ளிவீசி மீண்டும் பிறவாதபேரின்பத்தை அளிக்கின்றாள்

எனப் பெரியோர் கூறுவர்.

புராணகாலம் முதல் சிவனையும் சக்தியையும் நாம் தொடர்ந்து வழி

## சுவாமி ஹரிதாஸ் கிரி

பட்டுக் கொண்டிருக்கிறோம்.

எண்ணுவது ஒரு முறைதான். ஆயின் அதைச் செயல்படுத்த முனையும்போது ஒன்பது முறையாவது யோசிக்க வேண்டும்.

இதை எண்ணித்தானோ என்னவோ, எண்ணுகின்ற சிவனுக்கு ஒரு ராத்திரி. இதைத்தான் 'சிவ ராத்திரி' எனக் கூறுகிறோம். செயல் படுத்துகின்ற அந்த சக்திக்கோ ஒன்பது ராத்திரிகள். இதை 'நவராத்திரி" என்று வழங்குகின்றோம்.

எதையும் யோசித்து வெற்றியை மட்டுமே கொடுக்கக்கூடிய நிலையில் சக்தியானவள் செயல்படுகிறாள். அந்த ஆதிபராசக்தியைத்தான் அன்னையாக வழிபடுகிறோம். தாயின் கருணைக்கு முன்னே வேறு எதுவும் நிற்க முடியாது.

### தாயும் தந்தையும்

'தாயினும் சிறந்ததொரு கோயிலுமில்லை;தந்தை சொல் மிக்கதோர் மந்திரமில்லை!' இதை நாம் அனைவருமே கேள்விப்பட்டிருக்கிறோம். இதை, 'ஏதோ நம்மைப் பெற்ற தாய் தந்தையரைக் குறிக்கிறது' எனக்கருதுவோமானால் அது தவறு. தாய் என்பது சக்தியையும், தந்தை என்பது சிவனையுமே குறிக்கிறது. அனைத்துலகிற்கும் தாய் தந்தையாக விளங்கக்கூடிய சிவனையும் சக்தியையும் நினைத்தே இந்த வேதவாக்கு பிறந்திருக்க வேண்டும்.

தந்தையைவிட தாய்க்குத்தான் தன் மக்களிடத்தில் கூடுதலான பரிவும் பாவமும் உண்டு என்பதை உலக அனுபவங்களினால் நாம் அறிகிறோம்.

இத்தனை சிறப்புகளும் ஒருங்கே

## சிவமாக எண்ணி சக்தியாக வெளிப்பட்டது

கொண்ட உலக நாயகியாம் நம் அன்னையினை கொலுவிலே வீற்றிருக்கச் செய்து, ஒன்பது நாட்கள் நவராத்திரி வைபவத்தைச் செய்கிறோம். இதைச் செய்யும் போது 'அன்னை நம்மை பூரணமாக ஆசீர்வதித்து நம் அனைத்துக் கஷ்டங்களையும் போக்கி, எல்லா குறைகளையும் நீக்கி, நம்மையும் நல்லதோர் ஞானியாக ஆக்கி, ஆட்கொண்டு அருள் பாலிப்பது திண்ணம், என்று சாஷாத் ஸ்ரீ நாராயணனுடைய அவ தாரமான ஹயக்ரீவப் பெருமான் குறுமுனியாம் ஸ்ரீ அகத்திய மாமுனிவருக்கு உபதேசம் செய்வதாக பிரமாண்ட புராணம் கூறுகிறது.

காக்கும் கடவுளான ஸ்ரீமத் நாராயணனே ஆதி பராசக்தியின் பெருமைகளை எடுத்துரைக்கத் தன்னாலேயே ஆகாதென்று கூறுகிறாரெனில் அன்னையின் பெருமைதான் என்னே?

புராண காலத்தில் எருமைமுகம் கொண்ட அரக்கன் ஒருவன் இருந்தான். இவனை மகிஷாசுரன் என அழைத்தனர். அனைத்துலகங்களுக்கும் இவன் செய்த கொடுமைகள் அளவிடமுடியாதவை. தீயோர் இவனை ஆதரித்தனர். அவர்களுக்குத் தலைவனாக நின்று நல்லோரை அழிக்கத் தொடங்கினான்.

அநேக வரங்கள் பெற்று, பெரும்பலமடைந்த இவன் ஆணவத்தால் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சார்யம் போன்ற துர்குணங்களை அடைந்து பெரும் துஷ்டனாக விளங்கினான். அவனுடைய ஆட்சியின் அதர்மம் தலை தூக்கி நின்றது. தர்மத்திற்கு இடமில்லாமல் போனது.

உலகநலனை கருதி மூவர்களும், தேவர்களும், முப்பத்தி முக்கோடி தேவதைகளும், முனிவர்களும், நல்லோர் அனைவரும் ஒருங்கிணைந்து பரம்பொருளை பிரார்த்தித்தனர். அப்பரம்பொருள் சிவமாக எண்ணி சக்தியாக வெளிப்பட்டது.

அசுரனை அழிக்க அன்னை பராசக்தி முதல் நாள் குழந்தையாக உருக்கொண்டு அரக்கனுடன் போரிட்டாள். இரண்டாம் நாள் 'பாலை'யாகத் தோன்றி போர் செய்தாள். மூன்றாம் நாள் கொஞ்சம் வளர்ந்து சிறு பெண்ணாக நின்று அவனுடன் போரிட்டாள். நான்காம் நாள் இன்னும் கொஞ்சம் வளர்ந்தவளாக போர் புரிந்தாள். ஐந்தாம் நாள் ஒரு யுவதியாக நின்று போர் புரிந்தாள். இப்படி எட்டு நாட்கள் அன்னை பராசக்தி மகிஷாசுரனுடன் போரிட்ட அழகே அழகு.

ஒன்பதாம் நாள்....

மும்மூர்த்திகளும், முப்பத்து முக்கோடி தேவதைகளும், ஆதி பராசக்தியின் திருவடிகளில் விழுந்து வணங்கி வேண்டினர்.

அன்னை அனைவரையும் தன்னுள்ளே ஈர்த்துக் கொண்டாள். அகிமா, லகிமா, மகிமா, ஈசித்வம், வகித்வம், பிராகாம்யம், புத்தி, சித்தி என்ற எட்டு சக்திகளையும் எட்டு கரங்களாக்கி தன் இரண்டு நேத்திரங்களிலே சூரியனையும், சந்திரனையும் அமைத்துக் கொண்டு வாளிலே சிவனையும், சூலத்தில் விஷ்ணுவையும், திருவடி களிலே பிரம்மாவையும் தன் உடலிலே மற்ற அங்கங்களிலும், ஆபரணங்களிலும் தேவதைகளை அமைத்து அஞ்ஞானத்தை அழிக்கும் ஞானத்தை சிம்மவாகன மாக மாற்றி அதன் மீது அமர்ந்து அக்ஞானமாகிய மகிஷாசுரனை இருக்குமிடம் தெரியாமல் அழித்து அவனுக்கும் அருள்செய்து அனைத்துலகங்களையும் அதர்மத்திலிருந்து காப்பாற்றி தர்மக் கொடியினை பறக்க விட்டு தாயாக அருள் பாலித்தாள்.

இவளை சாதாரணமாக வழிபட்டாலே தடுத்தாட்கொண்டு கருணை செய்யும் அருளுடையவள். முறையாக விரதமிருந்து அன்னையை வழிபட்டுவிட்டால் நம்மிடத்தே உள்ள துர்குணங்களை அழித்து, ஆணவத்தை அகற்றி ஞானத்தை அள்ளி வீசிமீண்டும் பிறவாதபேரின்பத்தை அளிக்கின்றாள் என்பது முழுவதும் உண்மை என்று புராணங்கள் கூறுகின்றன.

மகிஷனை வெற்றிக்கொண்ட காரணத்தால் பத்தாம் நாள்தசமி அன்று அம்பாள் ஜெயங்கொண்டு

### விஜயதசமி

விட்டாள் என்று போற்றி மும்மூர்த்திகள் உட்பட அந்நாளினை விஜயதசமியாக கொண்டாடினர்.

திருவிளக்கில் ஐந்து முகங்களையும் ஏற்றி பூஜை முடித்து அந்த ஐந்து முகங்களையும் ஒரு முகமாக ஆக்கி வழிபடும்போது ஜோதிகளும், ஒரே ஜோதியாக காட்சியளிக்கிறது. அதாவது ஐம்புலன்களையும் நன்றாக கட்டுப்படுத்திவிட்டால் அங்கே அழியாத ஜோதி அதாவது ஞானம் ஒளிவிட்டு பிரகாசிக்கிறது என்பதை அறியலாம்.

அக்ஞானம் அழிந்து விட்டது. இனி மெய்ஞானம் தான் நிற்கும். அதைப் போதிக்க, என்று அவள் தன் கோர உருவத்தை மாற்றிக் கொண்டு சாந்தமாக அனைவரையும் மகிழச்செய்யும் வீணையின் நாதத்தோடு அறிவை புகட்டும் சரஸ்வதியாக அருள் பாலிக் கிறாள்.

அதனால்தான் அன்றைய தினம் குழந்தைகளுக்கு வித்யாரம்பம் செய்வது பண்டைய காலந் தொட்டே வழக்கத்தில் இருந்து வருகிறது.

ஞானத்தை அடைந்துவிட்டால் ஐம்புலன்களும் தானாக அடங்கிவிடுகின்றன.

ப்ரம்மம் இந்த உலகை சிருஷ்டிக்கும்போது ஐம்பெரும்பூதங்களை ஆதாரமாக கொண்டு படைத்தது.

மண்(ப்ருத்வி), நீர்(அப்பு), நெருப்பு(தேயு), காற்று(வாயு), வெட்டவெளி(ஆகாசம்) ஆகிய பஞ்சபூதங்களும் பிரம்மத்தின் படைப்பிலே தோன்றி உலகங்கள் தோன்றக் காரணமாக அமைந்தன.

இந்த வழியிலேயே கண், மூக்கு, செவி, வாய், மனம் என ஐம்புலன்கள் அதிலிருந்து தோற்றுவிக்கப்பட்டு இந்த மானிடப்பிறவியானது தோற்றுவிக்கப்பட்டது.

### திருவிளக்கு பூஜை

மனிதன் இந்த ஐம்புலன்களினாலேயே ஆட்சி செய்யப்பட்டவனாக கண்ணால் காண்பதையும், வாயால் பேசுவதையும், மனத்தால் நினைப்பதையும், மட்டுமே எண்ணி அஞ்ஞானியாக அவதியுறுகிறான். இந்த ஐம்புலன்களையும் மனிதன் என்று அடக்க முயற்சிக்கிறானோ, அன்றிலிருந்து அவன் பேரறிவு பாதையாம் ஞானமார்க்கத்தை நோக்கி அடியெடுத்து வைக்கிறான். இந்த ஞானத்தை அடைவதற்காகத்தான் பண்டைய காலந்தொட்டு திருவிளக்கு பூஜை செய்வது வழக்கத்திலிருக்கிறது. நம்முடைய சமயத்தே தோன்றும் இந்த நற்பழக்கங்களனைத்தையும் ஆராய்ந்து பார்க்குங்கால் இவைகளுக்கு பின்னே ஏதோ ஓர் தத்துவம் அடங்கியிருப்பதை உணரலாம்.

திருவிளக்கில் ஐந்து முகங்களையும் ஏற்றி பூஜை முடித்து அந்த ஐந்து முகங்களையும் ஒரு முகமாக ஆக்கி வழிபடும்போது ஜோதிகளும், ஒரே ஜோதியாக காட்சியளிக்கிறது. அதாவது ஐம்புலன்களையும் நன்றாக கட்டுப்படுத்திவிட்டால் அங்கே அழியாத ஜோதி அதாவது ஞானம் ஒளிவிட்டு பிரகாசிக்கிறது என்பதை அறியலாம்.

நவராத்திரி பூஜை முடித்து திருவிளக்கு பூஜை செய்வது பெரும் விசேஷம். இதன்பலனை ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனாலும் கூற இயலாது என்று புராணங்கள் பறை சாற்றுகின்றன.

ஆதிபராசக்தியின் முன் நாம் அனைவருமே அவளுடைய குழந்தைகள்தான். தாய்க்குமுன் மகன் என்றும், மகள் என்றும் பேதமில்லை. ஆண் என்றும், பெண் என்றும் பேதமில்லை. உயர்வு, தாழ்வு இல்லை. ஜாதி பிரச்னையோ மொழி பிரச்னையோ கிடையாது. யார் வேண்டுமாயினும் நல்லதோர் குருவின் உபதேசத்துடன் வழிபடலாம். அந்த அன்னையை வழிபட்டோருக்கு இம்மையில் மட்டுமல்ல மறுமையிலும் பேரின்பம்கிட்டி மீண்டும் பிறவா அந்த மணித்வீபத்தில் நீங்கா இடம் பெற்று பேரின்பம் அடைகிறார்கள்.

இப்பேர்ப்பட்ட புனிதமான நவராத்திரியில் அன்னையை வழிபட்டு விஜயதசமி அன்று ஞானம் பெற்று தொடர்ந்து திருவிளக்கு பூஜை செய்து அன்னையின் அருளை அடைவோமாக!

## உலக அரங்கில்

( 4ம் பக்கத் தொடர்ச்சி)

வேற்றுமொழி, வேற்று இனத்தைச் சேர்ந்த ஒரு இளைஞனிடம் மனதைப் பறிகொடுத்த ஒரு யுவதியின் இனிய காதல் கதையைக் கவனிக்க முடிகிறது. சோனியா தனது மண வாழ்க்கையில் காந்தர்வலோகத் திருமணம் என்று கருதப்பட்ட திருமணத்தில் விதி விளையாடியது பற்றி எழுதியிருக்கிறார்.

தன் கைவசமிருந்த சுமார் ஒரு லட்சம் புகைப்படங்கள் கடிதங்கள் இவற்றிலிருந்து சுமார் 400 படங்களை மட்டும் தெரிவுசெய்து எடுத்து இந்த நூலில் சேர்த்திருக்கிறார். முன்னொருபோதும் பத்திரிகைகளில் வெளிவராத படங்கள் பல. ராஜீவின் தோளில் சோனியா தலை சாய்த்து படுத்திருப்பது போல ஒரு புகைப்படம். ராஜீவ் கொல்லப்படுவதற்கு 2 மாதங்களுக்கு முன் எடுக்கப்பட்ட இந்தப்படம் பார்ப்பவர் மனதை நெகிழ வைக்கிறது.

இத்தாலி நாட்டின் TURIN நகருக்கு அருகே உள்ள கிராமத்திலிருந்து ஆங்கிலம் படிப்பதற்காக இங்கிலாந்து சென்ற அழகி சோனியா, இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் நகரில் விஞ்ஞானம் படித்துக் கொண்டிருந்த ராஜீவை முதன் முதலாக சாதித்தது ஒரு உணவுச் சாலையில் அப்போது சோனியாவுக்கு வயது 18 ராஜீவுக்கு 20.

"அவரைக்கண்டதும் என் இதயம் ஏன் படக்படக் என்று அடிக்க ஆரம்பித்தது?" புனிதமான காதல் துளிர்விட ஆரம்பித்த அந்த இனிய நாட்களை வாசகர்களுடன் இந்த நூலின் ஒரு அத்தியாயத்தில் பகிர்ந்து கொள்கிறார் சோனியா.

இந்திரா அம்மையாரைப் பற்றியும் இந்த நூலில் குறிப்பிட சோனியா தவறவில்லை. வெளி உலகத்தவர் சிலரின் கண்களில் இந்திரா ஓர் இரக்கமற்ற எதேச்சாதிகாரி. ஆனால் சோனியாவின் கருத்தில் அவரது மாமியார் இந்திரா காந்தி உருக்கமானவர் நலன் பேணி கவனமும் அக்கறையும் செலுத்துபவர்.

சோனியா கூட வெளி உலகின் பார்வையில் 'உணர்ச்சியற்றவர் பட்டும்படாமல் நடப்பவர்.' இக்கருத்து தவறு என்று நிரூபிக்கிறது இந்த நூல். அன்பு மிக்கவர். கூச்சம் நிறைந்தவர் சோனியா. கூச்சத்தினால் அவரிடம் காணப்படும் மௌனத்தை பலர் தப்பாக அர்த்தம் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு பள்ளிச்சிறுமி எழுதுவது போல சோனியா எழுதியிருந்தாலும் படிக்கத்தூண்டும் ஒரு நூல் இது. வைக்கிங் நிறுவனத்தின் பிரசுரமான இந்த 214 பக்க நூலின் விலை சுமார் 30 ஸ்டேலிங் பவுண்.

ஐ.நா.மன்றத்தில் யூகோஸ்லாவியாவின் இருக்கை பறிக்கப்பட்டது.

உருக்குலைந்து சிதறி யூகோஸ்லாவியா என்ற பெயரில் இன்று எஞ்சியிருப்பது சேர்பியா- மொன்டிநிக்ரோ மட்டும்தான். தமது சகோதரக்குடியரசுகளான பொஸ்னியா மீதும், குறோஷியா மீதும் அட்டுழியங்களை செய்து கொண்டிருந்த (செய்து கொண்டிருக்கும்) இந்த இரு குடியரசுகளும் ஐ.நா. மன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளன.

ஐ.நா.மன்றத்திலிருந்து ஒரு நாடு விரட்டப்படுவது வரலாற்றில் இது இரண்டாவது தடவை. பல வருடங்களுக்கு முன் நிறத்துவேஷ தென்னாபிரிக்கா இவ்வாறு விரட்டப்பட்டது!

முன்னாள் யூகோஸ்லாவியாவின் இருக்கைக்கு இவை இனி புதிதாக விண்ணப்பிக்கலாம். ஆனால் மனித உரிமைகளை இவை மதித்து நடக்கின்றனவா என்பது கவனமாக பரிசீலனை செய்யப்பட்ட பின்னரே உறுப்புரிமை வழங்கப்படும் என்று வெளியேற்றப்பிரேரணையை முன்மொழிந்த பிரிட்டன் அறிவித்திருக்கிறது.

இதுமட்டுமல்ல பொஸ்னியாவில் சேர்பிய அட்டுழியங்கள் பற்றி போர்க்கால அட்டுழியங்கள் பற்றிய விசாரணைக் கமிஷன்(WAR ATROCITIES COMMISSION) ஒன்று நிறுவப்பட வேண்டும் என்று அமெரிக்கா கேட்கிறது!. தெய்வம் நின்று கேட்கும்; அமெரிக்கா அன்றே கேட்கும்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# பழைய நினைவுகள்

சோ.சிவபாதசுந்தரம்

## யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது 1927ம் ஆண்டு நிகழ்ந்த ஒரு சம்பவம் மறக்க முடியாதது. யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் என்ற அமைப்பு அந்த நாட்களில் இளைஞர்களிடையே அரசியல் சிந்தனையையும் கலாசார உணர்வையும் ஊட்டிக் கொண்டிருந்தது. இந்த அமைப்புக்கு மூலகாரணமாக இருந்தவர் ஹன்டி பேரின்பநாயகம். வட்டுக்கோட்டைக் கல்லூரியில் ஆசிரியராக இருந்துகொண்டு, இந்திய சுதந்திரப் போராட்டத்தின் நிழலில் இலங்கைக்கும் பூரண சுயராஜ்யம் தேடிக்கொள்ள வேண்டும் என்ற உணர்ச்சியில் மற்றும் சில இளைஞர்களையும் சேர்த்து புதிய அரசியல் களம் அமைத்தவர். கதர் ஆடை தரிப்பவர். அடிக்கடி இந்தியாவுக்குச் சென்று மகாத்மாகாந்தியையும் மற்றும் தலைவர்களையும் சந்தித்துப் பழகியவர். அந்தப் பழக்கத்தின் பயனாக 1927ம் ஆண்டு காந்தியடிகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யக் கிடைத்தது.

எங்கள் கல்லூரிக்கு அணித்தாக இருந்த (சேர் வைத்திலிங்கம் துரைசாமியின்) பங்களாவில் காந்தியடிகள் தங்கியிருந்தார். அந்தச் சமயத்தில் அவருக்கு வேண்டிய பணிவிடைகளுக்காக நியமிக்கப்பட்ட மாணவர் குழுவில் நானும் இருந்தேன். கோட்டை முனியப்பர் கோயிலை அடுத்துள்ள "முற்றவெளி" மைதானத்தில் மேடை அமைத்து பிரமாண்டமான பொதுக் கூட்டம் ஒன்று நடந்தது. அந்தச் சமயத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் இன்றும் எனது நினைவில் இருக்கிறது. காந்திஜியின் ஆங்கிலப் பேச்சைத் தமிழில் மொழி பெயர்த்தவர் மகாத்மாவோடு தொடர்ந்து பயணம் செய்த சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார். பேச்சு ஆரம்பித்து சிறிது நேரத்தில் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. இதைக் கவனித்த காந்திஜி அமைதியாக பக்கத்திலிருந்த மாணவர் காங்கிரஸ் நண்பர்களிடம் சலசலப்புக்குக் காரணம் என்னவென்று விசாரித்தபோது, ராஜாஜியின் தமிழ் அங்கு கூடியிருந்த மக்களுக்குப் புரியவில்லை என்பது தெரியவந்தது. அப்படியானால் உள்ளூர்க்காரர் ஒருவரை அழைத்து மொழிபெயர்க்கச் சொல்லுங்கள் என்று காந்திஜி கேட்டுக்கொண்டார். உடனே மாணவர் காங்கிரஸின் நிர்வாகிகளில் ஒருவரான அட்வகேட் எம்.எஸ்.இளையதம்பி ராஜாஜிக்குப் பதிலாக மொழிபெயர்க்க அழைக்கப்பட்டார். ஏற்கனவே அரசியல் கூட்டங்களில் எந்தச் சிக்கலான விஷயத்தையும் பொது மக்கள் புரிந்துகொள்ளும் வகையில், எளிய தமிழில் பொருத்தமான பழமொழிகளையும் சேர்த்து மேடையில் பேசிப் பொதுமக்களின் அபிமானத்தைப் பெற்றிருந்த அட்வகேட் எம்.எஸ்.இளையதம்பி, சால்வையை எடுத்து இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு மேடையேறியதுமே மக்கள் வெள்ளம் குதூகலித்தது.



காந்தியடிகளின் பேச்சை அதன் பொருள் குன்றாமல், அதே சமயம் யாழ்ப்பாண மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் பொருத்தமான பழமொழிகளுடன் பிரமாதமாக மொழிபெயர்த்த காட்சி மறக்க முடியாதிருந்தது. கூட்ட முடிவில் காந்திஜி அவரைப் பாராட்டிய காட்சியும் மக்களை மகிழ்வித்தது. (இந்தச் சம்பவத்தைப்பற்றி சென்ற ஆண்டில் சென்னையில் வெளிவந்த "தமிழ் நேஷன்" என்ற ஆங்கிலப் பத்திரிகை இதழ் ஒன்றில் செய்தியை மாற்றிப் போட்டிருந்ததைக் கண்டேன். ராஜாஜியின் தமிழ் புரியவில்லையென்றதால் அட்வகேட் இளையதம்பியை அழைத்தார்கள் என்பதற்குப் பதிலாக இளையதம்பியின் மொழிபெயர்ப்பு சரியில்லையென்று ராஜாஜியை அழைத்தார்கள் என்று அந்தச் செய்தியில் காணப்பட்டது).

காந்திஜியின் யாழ்ப்பாண விஜயத்தைத் தொடர்ந்து பேரின்பநாயகத்தின் முயற்சியில் பண்டித ஜவகர்லால் நேருவும் மனைவி கமலா நேருவும் புதல்வி இந்திராவும் நமது பட்டணத்துக்கு விஜயம் செய்ததும் அவர்களுக்கு நடந்த வரவேற்பு வைபவங்களும் இப்போது சிலருக்காவது ஞாபகத்திலிருக்கலாம். சின்னப் பெண் இந்திராவின் அழகில் மாணவர்கள் மயங்கியதையும் மறக்க முடியாது. அந்த நாட்களில் கொழும்பு வீரகேசரி இதழ்களில் இந்தியத் தலைவர்களின் புகைப்படங்கள் வழுவழுப்பான காகிதத்தில் வெளியிடப்பட்டு வந்ததையும் அந்தப் படங்களையெல்லாம் யாழ்ப்பாண மக்கள் தம் வீட்டுச் சுவர்களிலே பிரேம்போட்டு மாட்டி வைத்திருந்த காட்சியையும் சிலர் நினைவில் வைத்திருக்கலாம். நேரு குடும்பத்தின் விஜயத்தைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் கழித்து கமலாதேவி சட்டோபாத்யாய விஜயம் யாழ்ப்பாண மக்களுக்குப் புதியதோர் அரசியலுணர்ச்சியை ஊட்டியது. முக்கியமாக காந்தியடிகளின் உப்பு சத்யாக்கிரக எழுச்சியையும் அதை எதிர்த்து இந்திய அரசாங்கம் புரிந்த அராஜக அட்டூழியங்களையும், அப்பாவிப் பொதுமக்கள் அடைந்த துன்பங்களையும் கமலாதேவி எடுத்துச்சொன்ன மாதிரியில் யாழ்ப்பாண மக்கள் கொதித்தெழுந்தார்கள். அந்தக் காட்சியை மறக்க முடியாது. அந்தச் சமயத்தில் யாழ்ப்பாணத்தில் நடை பெறவிருந்த இலங்கைப் பொதுத்தேர்தலைப் பகிஷ்கரிப்பதென்று மாணவர் காங்கிரஸ் பிரச்சாரம் செய்துகொண்டிருந்தது.கமலாதேவியின் ஆவேசப் பேச்சும் கருத்தும் ஆதரவு- தந்ததில் யாழ்ப்பாண மக்கள் பகிஷ்கரிப்பு வெற்றியடைந்தது இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியமான செய்தியாகும்.

## திருவருளும் குருவருளும்

11ம் பக்கத் தொடர்ச்சி

குகின்றன. ஞானக் கதிரவன் செய்யும் அற்புதத்தைப் பிரத்தியட்சமாக அவரிடம் பார்க்கிறோம்.

மகாபக்த விஜயப் பிரவசனத்தினால் மக்களைக் கவரும் இவருக்குப் பல மொழிகளும் எளிதில் குருநாதர் அநுக்கிரகத்தால் கைவந்திருக்கின்றன.

பாடல்களில் பக்தி உணர்ச்சியும், குருவினிடம் உள்ள எல்லையற்ற நம்பிக்கையும் குரல் எழுப் புகின்றன; ஞானதாகம் குமுறி எழுகிறது; இடையீடு படாத பக்திச்சுவை எங்கும் பரந்து செறிந்திருக்கிறது.

சுவாமி ஹரிதாஸ்கிரி யைப்பற்றி பழம்பெரும் எழுத்தாளர் கி.வா.ஜகந்நாதன் அவர்கள் எழுதிய கருத்து இது:

### பக்தி இசை

"தியாகராஜர் கீர்த்தனை, மீராபஜன், துளசிதாஸ் பாடல் எதுவாயிருந்தாலும் தெளிவான உச்சரிப்பில் கணீரெனப் பாடுகிறார் சுவாமி ஹரிதாஸ். பாடலில் அவர் புகுத்தும் 'பாவம்' கேட்போரை மயங்க வைக்கிறது. உதாரணமாக தியாகராஜர் கிருதி ஒன்றை அவர் பாடும்போது அதில் ஏற்ற இறக்கங்களை வசனங்களை அழகாகப் பிரித்து, அர்த்தம் விளங்கக்கூடிய விதத்தில் ஒரு சில வார்த்தைகளை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி அழுத்திப் பாடுவது கல்நெஞ்சையும் கரைய வைக்கும்.

தியாகராஜ சுவாமிகள் 'சங்கீத ஞானமு' கீர்த்தனையில் கூறியிருப்பது போல- பக்தி இல்லாமல் வெறும் சங்கீதத்தில் பயனே இல்லை என்று உணர்ந்தவர் சுவாமி ஹரிதாசர். எனவே பல்வேறு மொழிகளிலும் அமைந்த தமது நாமாவளிகளில் அவையோருங் கலந்து பாடும்படி செய்கிறார். மெதுவாக ஆரம்பித்து, உச்சவேகத் திற்கு ஏறும்போது சபையோர் பக்திப் பரவசத்தினால்- கட்டுண்டவர்களாகி கைதட்டி ஆர்ப்பரிக்கிறார்கள். சிலர் எழுந்து நின்று ஆடுவதும் வழக்கம். அவரது ஞானானந்த ஆராதனா வைபவங்களில் டாக்டர் பாலமுரளி, எம். எஸ்., டாக்டர் செம்மங்குடி ஸ்ரீநிவாசஐயர் போன்றோர் கலந்து பாடுவதும் வழக்கம். காந்திஜியைப் போல வெறும் கதர்த்துண்டை இடுப்பில் அணிந்த ஒருவர்- சங்கீதத் தையோ, தமிழ் மற்றும் பிறமொழி இலக்கியங்களையோ முறையாகப் படிக்காத ஒருவர் இத்தனை பேரையும் ஈர்த்திருப்பது எப்படி? "நான் என் குருநாதனை மட்டுமே நம்பியிருக்கிறேன்!" என்கிறார் சுவாமி ஹரிதாஸ் குருஜி அவர்கள்.

**THE STATESMAN** என்ற ஆங்கில பத்திரிகையில் புகழ்பெற்ற இசை, நடன விமர்சகர் 'சுப்புடு' அவர்கள் எழுதிய கட்டுரையின் சில கீற்றுக்கள் இவை.

சத்குரு சுவாமி ஞானானந்தரின் பரிபூரண அருட்கடாசத்தை சுவாமி ஹரிதாஸ் குருஜி அவர்கள் பெற்றிருக்கிறார் என்பது மட்டுமல்ல, இன்றும் குருஜி மூலமாக தமது அருளை பக்தர்களுக்கு வழங்கி வருகிறார். தனது மகிமைகளை திருவிளையாடல்களை குருஜி மூலமாக செய்து காட்டி வருகிறார்.

இதற்கு நடமாடும் சான்றுகளாக இருக்கிறார்கள் இன்று இலங்கையில், மலேசியாவில், இங்கிலாந்தில், அமெரிக்காவில், தென்னாபிரிக்காவில் குருஜிக்கு இருக்கும் பல நூற்றுக்கணக்கான பக்தர்கள். குருஜி அவர்கள் தமது நாம சங்கீர்த்தனங்களை, உபந்நியாசங்களை ஆரம்பிக்கும்போது- "என்னுள்ளே இருந்து என்னை இயக்குவிக்கும் எல்லாம் வல்ல என் குருநாதன் என்னை இயக்கிப் பேச வைக்கட்டும்..." என்று பிரார்த்தித்துவிட்டுத்தான் ஆரம்பிப்பார்.


அந்தக் குருநாதன் குருஜியை பேசவைக்கும் விதத்தைப் பார்த்து வியப்படைந்த தமிழ் அறிஞர்கள் ஏராளம்.

அந்தக் குருநாதன் குருஜியைப் பாடவைக்கும் விதத்தைக்கண்டு ஆச்சரியமடைந்த சங்கீத மேதைகள் பலர்.

அந்த குருநாதன் குருஜி மூலமாக நிகழ்த்தும் அற்புதங்களை தமது வாழ்வில் அனுபவித்துவரும் பக்த கோடிகள் ஆயிரம். "என் குழந்தைகள் என்னைக் குருவாக மனதில் வரித்து எனக்கு செய்யும் பணிவிடைகள்- அர்ச்சனை அபிஷேகங்கள்- அனைத்தும் எல்லாம் வல்ல என் குருநாதனையே போய்ச் சேரும்!" என்று கூறுகிறார் குருஜி அவர்கள்.

### குருவும் திருவும்

ஆதி சங்கரருக்கு இன்னோர் பெயர் 'பகவத் பாதர்' என்பது. அதாவது பகவானின் பாதமானவர் என்று பொருள். ஆதி குரு சங்கராச்சாரியாரை நாம் தொழுதால் அது ஆண்டவனின் பாதங்களைத் தொழுதமைக்கு ஒப்பாகும். குருவைப் பிடித்தால்- திருவைப் பிடித்தமைக்கு சமமாகும். நாளடைவில் குருவே திரு. குருவே பிரம்மம் என்பது தெரியவரும். இதைத்தான் குருபிரம்மா, குரு விஷ்ணு, குருவே சிவன். அவனே பிரம்மம் என்று எம் முன்னோர் பாடியிருக்கிறார்கள்.




### ஆருத்ரா பௌர்ணமி

இதனை அனுபவித்தவர் செயலில் காட்டி வருபவர் சுவாமி ஹரிதாஸ் கிரி குருஜி அவர்கள். மகான்கள்- பிரம்ம நிஷ்டர்கள் மறைவதில்லை. அவர்களின் ஊனுடல்தான் மறையுமே தவிர அவர்களின் ஆத்மா பக்தர்களுக்கு என்றென்றும் அருள் பாலிக்கும். ஆருத்திரா பௌர்ணமியன்று பரவொளியில் இரண்டறக்கலந்தும் இன்னும் தன்னை நம்பிவரும் பக்தர்களுக்கு அருள் பாலித்துவரும் சத்குரு ஞானானந்தப் பெருமானின் ஆராதனை விழாவும்- அகில உலக பாகவத சம்மேளனத்தின் ஆண்டு விழாவும் ஆண்டு தோறும் ஆருத்திரா பொளர்ணமி தினத்தன்று தென்னாங்கூரில் நடத்தப்படுகிறது.

உலகின் பல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் தென்னாங்கூரில் கூடுகிறார்கள். இரண்டு நாட்களுக்கு நாம சங்கீர்த்தனம் நாதஸ்வரம் சம்பிரதாய பஜனை, இசைக்கச்சேரிகள், பரத நாட்டிய நிகழ்ச்சிகள். இவற்றின் பின் மூன்றாவது நாள் 16 குருமூர்த்திகளை வரித்து அவர்களுக்கு பாதம் அலம்பி, வஸ்திரம், வெள்ளிப்பாத்திரம், சால்வை பொருள் முடிச்சு எனப்பலவகை உபச்சாரங்கள். தீர்த்த நாராயண பூசையுடன் ஆராதனை விழா முடிவடையும் போது பக்தர்கள் அனைவர்க்குமே தீர்த்தத்தை தெளித்து குருஜி அனுக்கிரஹம் செய்வது வழக்கம்.

மாலையில் பாகவதசம்மேளனத்தின் ஆண்டு விழாவில் பாகவதர்களுக்கு குருஜி பட்டமளித்து கௌரவிப்பார். கடந்த ஆண்டில் வெளிநாட்டு பக்தர்கள் நால்வருக்கு 'குரு பக்த சிரோன்மணி' என்ற பட்டம் வழங்கி கௌரவித்தார்.

### விழிப்புணர்ச்சி

ஆன்மீகப் பணியாற்ற உலக நாடுகள் பலவற்றில் ஸ்ரீ ஞானானந்த சேவாசமாஜம் என்ற அமைப்பினை உருவாக்கி அதன் மூலம் நாம சங்கீர்த்தனங்கள், பஜனைகள் ஆகியவற்றை நடத்தி, பக்தர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகிறார் குருஜி அவர்கள். இலண்டனில் கடந்த எட்டு வருடங்களாக இயங்கி வரும் ஸ்ரீ ஞானானந்த சேவா சமாஜம், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வரி விதி விலக்குச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தர்ம ஸ்தாபனம்- அறக் கட்டளை நிறுவனமாகும்.

இந்த இலண்டன் சமாஜத்தின் அழைப்பை ஏற்று நவராத்திரி விழாவையும் திருவிளக்குப் பூஜையையும் ஆன்மீகப் பெருமையுடன் நடத்திவைக்க சுவாமி ஹரிதாஸ் கிரி குருஜி அவர்கள் செப்டெம்பர் 25ஆம் தேதி இலண்டனுக்கு வருகை தருகிறார்.

"ஈஸ்வரனுக்கு நேராகச் செய்யும் ஈஸ்வர பக்தி, அடியார்களுக்கு செய்யும் அடியார் பக்தி, குருவிற்கு செய்யும் குருபக்தி- இந்த மூன்றிலும் குருபக்தியே உயர்ந்தது! மனம் பக்குவப்பட்ட பக்தர்களுக்கு இறைவனே மனித உருவில் குருவாக வருவார். மாணிக்கவாசகப் பெருமானுக்கு எம்பெருமான் குருநாதராக வந்தார். அருணகிரிநாதர் 51 அனுபூதிகளின் கடைசியில் "என் குருவாக வந்து எனக்கு அருள் செய்" என்று முருகனைக் கேட்க, "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.." என்று பாடினார். முக்காலங்களையும் உணர்ந்தவர் குருநாதர். குரு சொன்னால் அது வேதவாக்கு. தெய்வத்திடம் நாம் பாபம் செய்தால் அதனை குரு தீர்த்து வைப்பார். ஆனால் குருவிற்கே பாபம் செய்தால் அது எங்குமே தீராது. ஆதலால் சிவபக்தியைக் காட்டிலும் குருபக்தியே உயர்ந்தது!..." சத்குரு ஞானானந்த சுவாமிகளின் வருடாந்த ஆரா தனை விழா மலர் ஒன்றில் 'குருபக்தி' என்ற தலைப்பில் சைவப் பெருங்கடல் திருமுருக கிருபானந்த வாரியார் எழுதிய நீண்ட கட்டுரையிலிருந்து சில கீற்றுக்கள் இவை!

மீண்டும் தென்னாங்கூருக்கு வந்து விட்டோம்.

"பிரபோ கணபதி!.... பரிபூரண வாழ்வருள்வாயே!..." காற்றிலே மிதந்து வருகிறது கணீரென்ற குரல். குருபக்திக்கே உதாரணமாகத் திகழும் குருஜியின் குரல்! நாங்களும் நாம சங்கீர்த்தனத்தில் கலந்து கொள்வோம். அருள்பெற்று இன்புறுவோம்.

## கோவிந்தன் வைபவம்

(நமது நிருபர்)

மனோர்பாக் ஸ்ரீ மகாலக்ஷ்மி கோவில் கோவிந்தன் வைபவம் இம்மாதம் 26ஆம் தேதி சனிக்கிழமை மாலை 7 மணி முதல் நடைபெறுகிறது.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சொற்சதுரங்கம் 5

தொகுத்தவர்:- ஜனா

அக்டோபர் 6ந் தேதிக்கு முன் கிடைக்கும் விடைகளில் முதலாவதமாக எடுக்கப்படும் சரியான விடைக்கு பரிசு 40 பவுண்கள்.

**சொற்சதுரங்கம்- 4க்கு எந்த ஒரு வாசகரும் சரியான விடை அளிக்காததால் சொற்சதுரங்கம் 5க்கான பரிசு அதிகரிக்கப்பட்டுள்ளது.**

**£40**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | ■ | 4 | 5 | | | 6 | |
| | ■ | | ■ | | 7 | ■ | | ■ | 8 | | |
| 9 | | | 10 | ■ | | ■ | | 11 | ■ | | 12 |
| | ■ | ■ | | ■ | 13 | | | | ■ | ■ | ■ |
| | ■ | 14 | | 15 | | ■ | | | | | 16 |
| 17 | | | | | ■ | 18 | ■ | | ■ | 19 | |
| ■ | ■ | 20 | | | | ■ | | ■ | 21 | ■ | |
| 22 | | | ■ | | ■ | 23 | 24 | | | | 25 |
| ■ | 26 | | | | ■ | | ■ | ■ | 27 | | |
| 28 | | ■ | | ■ | 29 | | ■ | | | 30 | 31 |
| | | | 32 | ■ | 33 | | | ■ | | ■ | |
| 34 | 35 | 36 | ■ | ■ | 37 | | 38 | | ■ | 39 | ■ |

**உங்கள் முகவரி**

பெயர் :.......................................................

முகவரி :.......................................................

.......................................................

.......................................................

.......................................................

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

**சொற்சதுரங்கம்-3**
**THAMIZHOSAI**
253 WESTERN AVENUE
LONDON W3 0PP

இடமிருந்து வலம்:

1. ஐம்பெரும் காப்பியங்களில் கிடைத்தற்கரிய காப்பியம்.(5)
4. வில் வன்மை காட்டுமிடம்.(6)
7. இல்லாள் சற்று ஏறுமாறாக இருப்பாளே ஆயின் கொள்ள வேண்டியது.(2) (தலைகீழ்)
8. பெண் என்பதை அழகாகச் சொல்லும் இன்னொரு சொல்.(3)
9. மீன் பொதிந்து நிற்கும் இதன் துளி இல்லாது புல் காண்பது அரிது.(4)
11. நகை இவ்வகைப்பட்டது.(2) (தலைகீழ்)
12. பசுவை.(2) (தலைகீழ்)
13. பாட்டு இயற்றியவன்- இயற்றுபவன்.(4)
14. இன்பச் சுதந்திரம் இன்னருளால் பெற்றது இந்த ராஜ்யத்திலிருந்து.(4)
16. கற்ற நூலின் அளவே ஆகுமாம் இது.(5) (தலைகீழ்)
17. எல்லாம் கடந்து நடப்பவர்.(5)
18. மன்மதனின் ஐங்கணைகளில் ஒன்று.(1)
19. இது இல்லாத மார்கழியா என்றார் கவிஞர் வாலி.(2)
20. பொறாமை, ஆசை, சினம், துன்பம் தருகின்ற பேச்சு என்ற நான்கினாலும் உந்தப்படாமல் செய்வது.(4)
22. நிறமுடைய.(3)
25. மும்மதத்து நால்வாய் உடையவருடைய முதல் இரண்டும்- மூலம் தமிழ்மூதாட்டி.(6) (தலைகீழ்)
26. களவிற்கு முகம் கொடுப்பது.(4)
27. துளசிக்கும் கன்னிகளுக்கும் இது உண்டு.(3)
28. விஜயனுக்குத் தெரியும் இது.(2)
29. இந்து மதத்தில் ஒரு பிரிவு.(2)
31. பக்குவப்படுத்துதல்.(4) (தலைகீழ்)
32. பூவும் புகையும் பொங்கலும் செய்வது- மூலம் சிலப்பதிகாரம்.(4) (தலைகீழ்)
33. கைவண்ணம் காட்டியவனின் புதல்வன்.(3)
34. நண்பர்கள் நட்பில் கடை ஆயர் இதுபோல்- நாலடியார் வரி.(3)
37. வீழ்ச்சிக்கு முன் இது வரும்.(4)
39. பாட்டு வரும்!!.(1)

மேலிருந்து கீழ்:

1. இவரை எதிர்பார்த்து காத்திருந்தால், தேவர்களுக்கு நல்ல விருந்தாவோம்.(6)
2. தேவருக்கும் மூவருக்கும் உவந்தளிக்கும் பொருட்டு நடைபெறுவது.(3)
3. விலக்கு.(2)
5. கன்னிமகள் நடைபயின்றது இது தேனிறைத்த போது என்றார் கண்ணதாசன்.(5)
6. தோள் துண்டு.
7. உணவுக்கான என்பது வள்ளுவர் வாக்கு.(4)
8. புண்ணிய திசை நோக்கி.(2) (தலைகீழ்)
10. தம்மைப் போற்றிக் காத்தவர்கள் இப்படி அழைக்கப்படுவர்.(5)
11. ஒரு கண்ணை மூடிக்கொண்டு மற்றொரு கண்ணைத் தன் பெட்டை மேல் தான் கொண்ட அன்பினால், அதன் மேல் செலுத்தி தூங்கும் இலக்கிய பறவை.(4)
12. ஆயன்பதி- கவிஞர் கண்ணதாசனால் பெண்களை வர்ணிக்க பயன்பட்டது.(3) (தலைகீழ்)
14. எல்லா உயிர்களிடத்தும் அருள் உடைமையினை மேற்கொண்டே நடப்பவன்.(5)
15. அமைதியும் தெளிவும் ஒன்றானால் இந்நிலை அடையலாம்.(5)
16. மரக்கொம்பின் நுனிவரை ஏறிச் சென்றவர்.(7)
19. இதோடு பிறந்தது ராகம் என்றார் கண்ணதாசன்.(2) (தலைகீழ்)
21. அங்கண்மா ஞாலத்து அரசர் இதனால் பங்கமாய் வந்து பள்ளிக்கட்டில் கீழ் சங்கம் இருப்பாராம்.(5)
23. தேவர்களுக்கு இன்னொரு பெயர்.(5)
24. செற்றார் திறலழிய சென்று இது செய்யும் குற்றம் ஒன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!.(2) (தலைகீழ்)
30. குளத்திற்கு இன்னொரு இலக்கியச் சொல்.(3) (தலைகீழ்)
32. முகத்தின்.(3) (தலைகீழ்)
34. என்றைக்கும் கெடுதலுக்கு உட்படாத சிறந்த செல்வம்.(3) (தலைகீழ்)
36. ஆரம்பத்தில்.(3,2) (தலைகீழ்)
36. ஒழுக்க மரபும், வாய்மையும், பழிக்கு நாணுதலும் தவற விடமாட்டார்கள் இதில் பிறந்தவர்கள்.(2) (தலைகீழ்)
37. சேரும் என்பார் சேராது.(3) (தலைகீழ்)
38. பலாத்கார.(2) (தலைகீழ்)

# சொற்சதுரங்கம் 4

விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ந | ளா | யி | னி | ■ | மீ | ரா | ■ | அ | ன | சூ | யை |
| ள | ■ | ■ | ச | ■ | ன் | இ | ■ | ன | ■ | ரி | ■ |
| ன் | ம | ரா | ■ | ■ | ■ | ■ | ப | ங் | க | ய | ம் |
| ■ | ட் | ■ | சி | வ | ■ | து | ர | க | ■ | ன் | வ |
| ச | பா | ■ | பி | ர | க | லா | த | ன் | ■ | ■ | த |
| டை | ண் | ச | ■ | த | ம் | ■ | ன் | ■ | பெ | ■ | ■ |
| ■ | ட | க | ■ | ன் | ச | ஈ | ■ | தோ | ற் | ற | ம் |
| ■ | ம் | ட | ச | ■ | ன் | த | ம | ■ | ற | ■ | ம |
| ■ | ■ | ■ | கு | தி | ■ | ல் | க | ங் | செ | ■ | ரு |
| த | ம | ய | ந் | தி | ■ | ■ | ர | ■ | ல் | ய | க |
| ■ | ■ | டை | த | ■ | த | ட | ம் | ■ | வ | ■ | ■ |
| நு | ண் | க | லை | ■ | லை | வி | ■ | பா | ம் | பு | ■ |

# படையினருக்கு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணிவெடி தூரத்தே இருந்து இயக்கி வெடிக்கப்பட்டிருக்கலாமென்ற கருத்தை நிராகரித்துள்ளார். பாதுகாப்பு படைகள் ஊர்காவற்றுறையைக் கைப்பற்றுவதற்கு முன்னரேயே இக்கண்ணி வெடிகள் புலிகளினால் புதைத்து வைக்கப்பட்டவை. மேலதிக சுமை கொண்ட இராணுவ வாகனம் பிரதான பாதையை விட்டு, விலக சோதிக்கப்படாத பகுதிக்குசென்ற போதே வெடிப்பு ஏற்பட்டது. இப்படிச் சோதனையிடப்படாத பகுதிகளுக்கு உயர் அதிகாரிகள் செல்லக் கூடாதன ஆணையாளர் ஆலோசனை தெரிவித்திருக்கிறார்.

# யாருக்காக உரிமை

( 7 ம் பக்கத் தொடர்ச்சி)

பணி நின்று விடுகிறது என்பது உண்மைதான். அதுசரி, அவர்கள் யாருக்காக எழுதுகிறார்கள்? அரசாங்கத்திற்கா? இருக்கலாம்; அரசாங்கம் குருடு மட்டும் மல்ல; அது செவிடும் கூட; செவிடு என்பதனாலேயே அது ஊமையுமாகிறது. அரசாங்கம் போகட்டும்? பத்திரிகைகள் என்ன அரசாங்க அதிகாரிகளுக்காக மட்டுமா எழுதப் படுகின்றன; மக்களுக்காகவும் பல சமுதாய அமைப்பினருக்கும் தானே! அவர்கள் ஏன் இந்தப் பிரச்னைகளை எடுத்துக் கொள்வதில்லை? நல்ல கேள்வி!

அவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள் சில பிரச்னைகளை;ஆபாச போஸ்டர்களை ஒட்டுவது; பத்திரிகைகளில் ஆபாசப் படம் ஓவியமாக வரைந்தால் கூட அவற்றை எதிர்த்துப் போலீசில் புகார் செய்வது; தொண்டுக் கிழவரான பத்திரிகை ஆசிரியரைக் கைது செய்து சிறையில் அடைப்பது என்று மகளிர் சங்கங்கள் இங்கே மகத்தான உரிமைப் போராட்டங்கள் நடத்தி வருகின்றன. மாதர்கள் உள்ளூர்ப் பத்திரிகையாளரைப் பிடித்துக் கொண்டால் அரசு வெளிநாட்டு பத்திரிகையாளரைப் பிடித்துக் கொண்டுள்ளது.

ராஜீவ் காந்தி படுகொலையை அடுத்து வேண்டியவர்கள்,வேண்டாதவர்கள் என்று பலரைக் கைது செய்த அரசு, செக்கு எது சிவலிங்கம் என்று வித்தியாசம் பாராமல் நக்கி, அல்லது கால் தூக்கி நீரடிக்கும் நாய்போல நடந்து கொண்டது. ஒரு விசாரணை முடியும் வரை சந்தேகத்துக்கு இடமானவர்களைக் கைது செய்வது என்பது எல்லா இடங்களிலும் ஒரு நடைமுறையே. எனினும் சந்தேகத்துக்கு இடம் இல்லாவிட்டால் அல்லது குற்றச்சாட்டு நிருபிக்கப்படாவிட்டால் மேற்படி நபரை விடுவிப்பது தானே சட்டம், தர்மம், நியாயம், மரபு. இது எதையுமே அரசு பல நபர்கள் விஷயத்தில் கண்டு கொள்ளவில்லை. சிம்ரஞ்சித் மான் என்று பஞ்சாப் தீவிரவாதியுடன் கைகுலுக்கியவர்கள், புலிகளின் வால்கள்,நகங்கள், ரோமங்கள் எல்லாமே இங்கே தைரியமாக அறிக்கைகள் வெளியிட்டு, மேடைகளில் பேசித் திரிகிறார்கள். அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. ஆனால் தன் ஆங்கில நாளிதழில் "லண்டனில் அச்சிடப்பட்டது" என்ற 'இம்ப்ரிண்ட்'டுக்காக தேசீயப் பாதுகாப்புச்சட்டப்படி 'இம்பிரிசன் மென்ட்' 'தமிழ் நேஷன்' ஆசிரியர் இலங்கைத் தமிழர் எஸ்.சிவநாயகத்திற்கு. ஒரு வருடகாலம் சிறையில் அடைப்பு; குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை; பிறகு அவர் விடுதலை செய்யப்பட வேண்டுமே. அதுதான் இல்லை; ஒரு சிறையிலிருந்து இன்னொரு சிறை போன்ற 'அகதிகள் முகாம்' என்ற பெயரிலான தீவிரவாதிகள் முகாமுக்கு மாற்றம். இடையிலே சிவநாயகத்தின் பேனா பிடித்த கை 'எக்ஸிமா' என்ற சிரங்கு பிடித்த கையாயிற்று. பேனா பிடிப்பது இருக்கட்டும்; பிறருடன் கை குலுக்கவே தயங்குகிறார் அவர். பங்குச் சந்தை ஊழலில் கோடிக் கணக்காகப் பணம் ஏப்பம் விட்டவர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் பிரமுகர் வார்டில் சிகிச்சை. சிவநாயகமோ, சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியை விட வேலூர் ஜெயில் தேவலை என்று மீண்டும் விரும்பியே சிறைக்குத் திரும்ப நேர்ந்த அவலம். இது பற்றிப் பத்திரிகைத் துறையின் எந்த பீரங்கி சிப்பாயும் ஏனோ இது வரை வாய் திறக்கவில்லை. அவர்களுக்கு ஒரு வேளை சட்ட சபையில் தயாராகி இருக்கும் 'கூண்டு' பற்றிய கவலையோ என்னவோ!

ஆக, இந்தியாவில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் மனித உரிமையைச் சக மனிதர்களோ அல்லது சர்க்காரோ கண்டு கொள்வதில்லை. இதில் சிவகாசியில் மொட்டுகள் கருகினால் என்ன, வேலூரில் சிவநாயகம் என்ற முதியவர் வாடினால்தான் என்ன? அதிகாரம் படைத்தவர்களுக்கே உரிமைகள் பூரணமாக உண்டு என்ற நிலை ஏற்பட்டுவிட்ட பிறகு சாமானியர்கள் தங்கள் உரிமைகள் பற்றிப் பேசலாமோ? இதே சங்கதிகளைத் தமிழ் நாட்டில் எழுதினால் அடுத்த 'தமிழோசை'க்கு என்னால் எழுத முடியாமல் போகலாம், உங்களுடன் தொடர்பு நீடிக்கட்டுமே என்று கடல் கடந்து என் எழுதுகோலைப் பிடிக்கிறேன். என்ன உரிமை எங்கள் உரிமை! உங்கள் பாடு பரவாயில்லை!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# உங்கள் ராசிபலன் எப்படி?

**சோமசன்மா**

இங்கு தரப்படும் பலன்கள் சந்திரலக்கின கோசார பலன்கள். கோசாரபலன் என்பது ஒருவர் பிறந்த சமயத்தில் சந்திரன் எந்த ராசியில் இருந்தாரோ அந்த ராசியை முதலாக வைத்து, இப்பொழுது மற்றைய கிரகங்கள் எங்கெந்த வீட்டில் இருக்கிறார்கள் என்பதை வைத்துக் கணித்துப் பலன் சொல்வதாகும். உதாரணமாக, நீங்கள் பிறக்கும்போது அசுவினி நட்சத்திரம் என்று வைத்துக்கொள்வோம். அப்படியானால் சந்திரன் மேட ராசியில் இருக்கவேண்டும்.

ஒவ்வொரு கிரகமும் எத்தனையாவது வீட்டில் இருக்கிறார் என்பதை அறிந்து, அதன்படி பலன் சொல்ல வேண்டும்.

உங்களில் சிலருக்கு சந்திர லக்கினம் தெரியாமலிருக்கலாம். நட்சத்திரம் மாத்திரம் தெரியலாம். அப்படியானால், உங்கள் நட்சத்திரத்துக்குரிய ராசியைப் பின்வரும் அட்டவணை மூலம் தெரிந்துகொள்ளலாம்.

அசுவினி, பரணி,
கார்த்திகை முதல் கால்........................................மேடம்
கார்த்திகை பின் முக்கால், ரோகிணி,
மிருகசீரிடம் முன்னரை........................................இடபம்
மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை,
புனர்பூசம்
முன்முக்கால்........................................மிதுனம்
புனர்பூசத்து நாலாங்கால்,பூசம்,
ஆயிலியம்........................................கர்க்கடகம்
மகம், பூரம், உத்தரத்து
முதற்கால்........................................சிங்கம்
உத்தரத்து பின்முக்கால், அத்தம்,
சித்திரை
முன்னரை........................................கன்னி
சித்திரையின் பின்னரை, சுவாதி,
விசாகத்து முன்முக்கால்........................................துலாம்
விசாகம் நாலாங்கால்,
அனுஷம்,
கேட்டை........................................விருச்சிகம்
மூலம், பூராடம்,
உத்தராடத்து முதல்
கால்........................................தனு
உத்தராடத்து பின்முக்கால், திருவோணம்,
அவிட்டத்து முன்னரை........................................மகரம்
அவிட்டத்துப் பின்னரை, சதயம்,
பூரட்டாதி
முன்முக்கால்........................................கும்பம்
பூரட்டாதி நாலாங்கால், உத்தரட்டாதி,
ரேவதி........................................மீனம்

## மேடம்

பல வழிகள் திறந்திருக்கும்போது எந்த வழியில் திரும்பவேண்டும் என்பதைத் தீர்மானிப்பது சுலப மல்லத்தான். முன் வைத்த காலைப் பின் வைக்காமல் உடனே எதிர்ப் படும் திசையில் திரும்புவதுதான் புத்திசாலித்தனம். புதிய நண்பர் ஒருவரின் தரிசனமும் கிடைக்கும். குழந்தைகள் விஷயத்தில் சில துன்பங்கள் எதிர்ப்பட்டால் என்ன செய்ய முடியும்? பொறுத்திருப்பது நல்லம். கிடைப்பதைக்கொண்டு முதலில் கடன்களைத் தீர்ப்பது நல்லது.

அதிஷ்ட எண்.7

## இடபம்

பிரயாணத்தில் தடை ஏற்பட்டால் சிறிது தாமதமாகத்தான் போனா லென்ன? சகோதரர் வழியில் ஒரு புதிய உறவுக்கு அஸ்திவாரம் போடப்படுகிறதை வரவேற்கலாம் என்று சொல்லுகிறார்கள். எதிர் பாராத புதிய செய்தி வந்தால் என்னவோ ஏதோ என்று பலரும் உடைத்துக்கொள்வது வழக்கம். ஆனால் செய்தி என்ன என்று தீர்மானிக்க வேண்டாமா? நல்ல செய்திதான் என்று சொல்கிறார்கள். பலனை அப்புறம் சொல்லுங்கள்.

அதிஷ்ட எண்.9

## மிதுனம்

கையில் கிடைத்த ஜாதகம் பொருந்தினால் திருமணத்தை ஏற் பாடு செய்ய வேண்டியதுதானே. மேலும் பொறுத்திருந்தால் பெரும் பொருள் தேடவேண்டி வரலாம். உங்கள் பொறுமை இனிமேல்தான் சோதனைக்குள்ளாகும். எதற்கும் மௌனம் நல்லது. சகோதரி யுடையவர்கள் நல்ல துணையை எதிர் பார்க்கலாம். வெளிநாட்டி லிருந்து நண்பர் வருவார். விரைவில் திரும்புவார்.

அதிஷ்ட எண்.6

## கர்க்கடகம்

குடும்பத்தில் அமைதியின்மை சாதாரணம். பழைய தொடர்புகள் நீங்கினால் எல்லாம் சுமுகமாகிவிடும். மக்கள் நலன்தான் முக்கியம். செல வினங்கள் திடீரென்று உயரலாம் என்றாலும் வருமானத்துக்குப் புதிய வழிகள் பிறக்கலாம். தலைநோய் போனாலும் வயிற்று நோய் தொடரலாம். எல்லாம் மனத்தைப் பொறுத்தது. கைச்செலவு அதி கரிப்பது யார் மூலமாக என்று பார்த்துக் கொள்ளவும்.

அதிஷ்ட எண்.5

## சிங்கம்

எடுத்த வியாபாரத்தை நடத்து வதா முடுவதா என்ற பிரச்னை ஒரு சிலருக்கு ஏற்படலாம். இன்றி ருக்கும் சூழ்நிலை அப்படிச் சிந்திக்கத் தூண்டலாம். முடவேண்டிய அவசி யம் இப்போது இருக்காது. புதிய நட்பு பணம் கொண்டு வரச் செய் யலாம். பிரயாசை மிகுதிதான், அதைத் தவிர்க்க இயலாது. பிரயா ணத்தை பின் வைத்துக் கொள் வார்கள். இப்போது என்ன அவச ரம். குழந்தையின் உடல் நிலையை கவனிக்க வேண்டியது.

அதிஷ்ட எண்.3

## கன்னி

எடுத்த காரியத்தில் எதிர்பாராத லாபத்தைக் கண்டவுடன் ஒரு சிலர் தம்மை மறந்துபோவார்கள். திடீ ரென உடல் நிலை பாதிக்கப் பட்டால் அதற்குரிய காரணத்தை நினைத்துப் பார்ப்பது நல்லது. எல்லாம் நம்மைப் பொறுத்த விஷயம்தானே? மோட்டார் வாகனம் வாய் பேசாத சாதனம் என்பதை சிலர் மறந்துபோவார்கள். விலை வாசிகளைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். நாட்டில் நிலைமை சொல்லக்கூடியதல்ல.

அதிஷ்ட எண்.1

## துலாம்

எதிர்பாராத சஞ்சலம் ஏற்பட்டு தேச சஞ்சாரம் போவதாக சிலர் துணியலாம். அதெல்லாம் வேண்டி யதில்லை. மனித சுபாவம் எப்படி யென்பதை எல்லாரும் உணருவ தில்லை. அஞ்சினவன் கண் என் பதுதான் இந்த வியாதி. எதற்கும் உற்ற நண்பர்களைத் துணைக் கொள்க. பதவியில் கோளாறு ஏற்படும் என்ற அச்சம் வேண்டாம். மனைவி வழியில் ஆறுதல் கிடைக் கும்.

அதிஷ்ட எண்.2

## விருச்சிகம்

எதிர்பாராத வெற்றியொன்று எதிர் வரும்போது கவலையெதற்கு? நண்பர்கள் விருந்துக்கு காத்தி ருக்கிறார்கள். இந்த அற்ப சுகத் தில் இல்லக் கிழத்தியர் தடுமாறாமல் இருக்கவேண்டுமே. கையில் இருக் கும் வேலையைப் பத்திரமாக வைத்திருப்பது புத்திசாலித்தனம். வெளியூர் விஜயம் வெறுமனே வேஷம் தான். நண்பர்களின் நெருங்கிய தொடர்பு அவசியம். எதிர்பாராத செலவினங்களை சமாளிக்க வேண்டி வரும்.

அதிஷ்ட எண்.4

## தனு

அயல் வீட்டுக்காரர் அனுப விப்பதை நாமும் அனுபவிக்க வேண்டும் என்று விரும்புவது சாதா ரணம்தான். ஓரளவு நல்ல பலன் கள் இவர்களுக்கும் கிடைத்தாலும், அதைக் காப்பாற்றிக் கொள்ளும் சாமர்த்தியன் தேவைதான். எதற்கும் உடல் நிலையும் தேவைதான். அதைப்பற்றித்தான் யோசனை அதிகம். குடும்பப் பிரச்னை யாரைத்தான் விட்டது. ஆயினும் ஒரு சிலருக்கு இது ஒரு தொடரும் பிரச்னை. வெளியூர் ஞாபகம்தான் காரணம்.

அதிஷ்ட எண்.5

## மகரம்

சகோதரர்களுக்கிடையில் வாக்கு வாதம் சில குடும்பங்களிடையே காணப்பட்டாலும் குடும்பச் சிக்கல் கள் நீடிப்பதில்லை. பொருள் விஷயத்தில் பிணக்கு ஏற்படலாம். உடல்நலக் குறைவு வருவதும் போவ துமாக இருக்கலாம். செலவினங் களைக் குறைக்கச் சொன்னால் எவர் கேட்கிறார்கள். ஒரு சில குடும்ப ஸ்திரீகள் லாப நஷ்டத்தைக் கவனிப்பதில்லை என்று சொன்னால் போதுமா.

அதிஷ்ட எண்.2

## கும்பம்

அடுத்த ஒரு வருடம் நன்றாயிருக்காது என்றுதான் சோதிடர்கள் சொல்வார்கள். அந்த எச்சரிக்கை எவ்வளவு தூரம் கவனிக்கப்படும். எச்சரிக்கையாக மாத்திரம் எடுத்துக்கொண்டு புத்தி சாலித்தனமாக நடப்பதுதான் நல் லது. அட்டமத்து குருபகவான் குறுக்கே நின்றாலும் குரு நல்லவர். செலவு செய்யச் சொல்லுவார்கள், பிரயாணம் செய்யச் சொல்வார், கண்டதையும் சாப்பிடச் சொல்வார். நாம் அவரைத் தெரிந்துகொண்டு ஜாக்கிரதையாயிருக்க வேண்டி யதுதான்.

அதிஷ்ட எண்.6

## மீனம்

புதிய தொழில் தொடங்குவதில் சிலர் மிகப் பெரிய பலனைப் பெறக்கூடும். ஒரு சிலர் தயங்கு வார்கள். அது வேண்டாம். நண் பர்கள் உதவி அமோகமாக உண்டு என்ற தைரியத்தில் புதிய தொழில் அல்லது உத்தியோகம் தொடங்கி நடத்த வாய்ப்புண்டு. அந்த அவச ரத்தில் உடல் நலக்குறைவு ஏற்படத் தானே செய்யும். புதிய விருந்தினர் வருவதற்கு அடையாளம் தெரிகிறது என்று ஒருவர் சொல்கிறார். அவர் என்ன சாமியாரா?

அதிஷ்ட எண்.5



இம்மாதம் 12 ஆம் திகதி லண்டன் லோகன் மண்டபத்தில் அரங்கேறிய செல்வி மீரா விஜயராகவனின் ஓர் அபிநயத் தோற்றம் இது. லண்டன் தமிழ்க்கழக ஆசிரியையான திருமதி உமா சந்திரதேவாவின் மாணவி இவர்.

## என் தாயை மறப்பேனா?



காலத்தின் கோலத்தால்
கல்வியை கைவிட்டு
காணிவிற்று கடனோடு
கடல்கடந்து வந்திங்கு
வேலைகள் ஏதுமின்றி
வேதனையில் வாடுகின்ற
சோதனையை எப்படிநான்
சாதனையாய் எழுதுவது!

சரியாகப் படித்தவரும்
சிறுவேலை கிடையாமல்
வீதியில் அலைகின்ற
சேதிகள் அறியாமல்
எல்லோரைப் போலும்
என்மகனும் உழைக்கின்றான்
என்றே மனம்குளிரும்
என்தாயை மறப்பேனா!

அம்மாவின் ஆசியினால்
அறிவில் உயர்வாகி
அன்புள்ள என்தங்கை
ஆசைகள் நிறைவேற்ற
பள்ளியில் சேர்ந்துள்ளேன்
பக்குவமாய் படிக்கின்றேன்
பாசாகி வேலைபெற்று
பாரங்கள் நீக்கிடுவேன்.

–சிவம்.பரமலிங்கம்
வெம்பிளி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழர் வாழ்வுரிமை மாநாடு

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் சென்னையில் தமிழர் வாழ்வுரிமை மகாநாடு ஒன்று நடத்தப்பட்டது. மாநாட்டை யொட்டி மிகப்பெரிய ஊர்வலம் நடைபெற்றது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், தொண்டர்கள் பஸ், லாரி, வேன்களில் வந்து குவிந்தார்கள். விடுதலைப் புலிகளை ஆதரித்து ஊர்வலத்தில் கோஷங்கள் எழுப் பப்பட்டன. சில தொண்டர்கள் விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் வி.பிரபாகரனின் உருவப் படத் தையும் ஏந்திக் கொண்டு போனார்கள். இந்த ஊர்வலத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டாக்டர் ராமதாஸ் தேனாம்பேட்டையில் அமைக்கப் பட்டிருந்த பிரத்தயேக மேடையி லிருந்து பார்வையிட்டார். ஊர்வலம் ஒரு இடைத்தைக் கடக்க சுமார் நான்கு மணி நேரம் ஆனது. சென்னையில் போக்கு வரத்து இதனால் பாதிக்கப்பட்டது. மாலை நான்கு மணிக்குத் தொடங்கிய ஊர்வலம் இரவு ஒன்பதரை மணிக்கு மெரினா கடற்கரையில் சீரணி அரங்கத்தை அடைந்தது. அங்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங், முன்னாள் மத்திய அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான், டாக்டர் ராமதாஸ், தமிழர் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறன், எம்.ஜி.ஆர் அண்ணா தி.மு.க. பொதுச் செயலா ளர் எஸ்.திருநாவுக்குரசு மற்றும் பலர் பேசினார்கள். இலங்கை அகதிகளைக் கட்டாயமாக இலங் கைக்கு அனுப்பி வைப்பதைக் கண்டித்தும், இலங்கையில் தமிழ் ஈழம் அமைய மத்திய அரசு அங்கீ காரம் அளிக்க கோரியும், தற்போதுள்ள இந்திய அரசியல் கூட்டத்திற்குப் பதிலாக தன்னுரிமை தரவல்ல புதிய அரசியல் சட்டத்தை உருவாக்க வேண்டியும் மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இம்மாதம் 12ம் தேதி நடைபெற்ற இந்த மாநாட்டில் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியது தேச துரோகம் என்று குற்றம் சாட்டப்பட்டு டாக்டர் ராமதாஸ், பன்ருட்டி ராமச்சந்திரன் உட்பட நான்கு பேர் 18ம் தேதி அதிகாலை கைது செய்யப்பட்டனர். ஜாமீன் ரத்து செய்யப்பட்டு மீண்டும் டாக்டர் ராமதாஸ், பண்ருட்டி ராமச் சந்திரன், மற்றும் இரண்டு பேரும் 21ம் தேதி இரவு கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப் பட்டார்கள்.

# பெரியார் நினைவகம் திறப்பு விழா ஒத்திவைப்பு

(சென்னை)

கேரள மாநிலம் வைக்கம் நகரில் தந்தை பெரியாருக்கு ஒரு நினைவகத்தைத் தமிழக அரசு அமைத்திருக்கிறது. அங்கு பெரியார் சிலையும் திறக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த விழா இம்மாதம் 17ம் தேதி நடைபெறுவதாக இருந்தது. கேரளா, தமிழகம் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் கலந்துகொள்ள விருந்தார்கள். ஆனால் ஒரு விபத்து காரணமாக திருவனந்தபுரத்தில் தான் தினமும் சிகிச்சை பெற வேண்டி இருப்பதால் விழாவில் கலந்து கொள்ள இயலாது எனத் தெரிவித்து கேரள முதல்வர் தமிழக முதல்வருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். மிகவும் முக்கியத்துவம் உள்ள இந்த விழாவில் இரு மாநில முதல்வர்களுமே கலந்து கொண்டால்தான் சிறப்பாக இருக்கும் என்று கருதப்பட்டதால் கேரள முதல்வரின் சிகிச்சையை முன்னிட்டு விழா தள்ளிப் போடப் பட்டிருக்கிறது.

# தமிழோசை — விளையாட்டுப் போட்டி

## விண்ணப்பப் படிவம்

விபரங்களுக்கு 081 993 7652

முழுப்பெயர் ..............................................................

முகவரி ..............................................................

..............................................................

..............................................................

பாடசாலை / கழகம் / தனிப்பட்டோர் ..............................................................

பிறந்த திகதி .............................. வயது ..............................

(01-09-1991 ல் உள்ளபடி)

பங்கு பற்றும் போட்டிகள்

தனி

1. ..............................................................
2. ..............................................................
3. ..............................................................

குழு

1. ..............................................................
2. ..............................................................
3. ..............................................................

**எனது அறிவுக்கெட்டிய வரையில் மேலே குறிப்பிட்டவையெல்லாம் உண்மையெனவும் போட்டி விதிமுறைகளுக்கு அமைய நடந்து கொள்வேன் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.**

கையொப்பம்
விண்ணப்பதாரர்/பெற்றார்/பாதுகாவலர்

குறிப்பு:-

1. பாதுகாப்புக்காகவும் நிகழ்ச்சிகளை சுமுகமாக நடத்துவதற்காகவும் நிகழ்ச்சிகளை மாற்றுவதற்கோ ரத்துச் செய்வதற்கோ நிர்வாகிகளுக்கு தனி உரிமை உண்டு.
2. வயதை உறுதிப்படுத்த தேவைப்படும் பட்சத்தில் அதனை நிரூபிக்க அத்தாட்சிப் பத்திரம் கொண்டு வரல் வேண்டும்.
3. கட்டணம்:
   தனி விண்ணப்பம்: £ 5.00 (ஒருவர் மூன்று தனி நிகழ்ச்சிகளில் மட்டுமே பங்கு பற்றலாம்.)
   குழு விண்ணப்பம்: £ 10.00 ( கயிறிழுத்தல், அஞ்சல் ஓட்டம்)
   (கட்டணத்தினை தபாற் கட்டளையாகவோ காசோலையாகவோ அனுப்பலாம்)
   **Please mark Cheques or Postal Orders Payable to " THAMIZHOSAI"**
4. ஒவ்வொரு வயதுக் குழுக்களிலும் கூடிய புள்ளிகள் பெறும் வீரர்/வீராங்கனை களுக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும்.
5. அதிகப் புள்ளிகள் பெறும் பாடசாலை/கழகத்திற்கு வெற்றிக்கேடயம் வழங்கப்படும்.
6. எல்லா நிகழ்ச்சிகளுக்கும் மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானது
7. புள்ளிகள்:-
   முதலாம் இடம் - 10 புள்ளிகள்
   இரண்டாம் இடம் - 7 புள்ளிகள்
   மூன்றாம் இடம் - 4 புள்ளிகள்
8. கராட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவோர் தமது உத்தரவுப் பத்திரங்களை (Licence) கொண்டு வரல் வேண்டும்

**அனுப்பவேண்டிய முகவரி:**

**THAMIZHOSAI**
**253 Western Avenue**
**London W3 0PP**

விண்ணப்ப முடிவுத் திகதி : 2-10-1992

### புள்ளிகளுக்குரிய தனி நிகழ்ச்சிகளும் போட்டி வயதெல்லைகளும், நிகழ்ச்சிகளும்

**8 வயதிற்கு உட்பட்டோர்:**
50 மீற்றர், நீளம் பாய்தல், கயிறடித்தல் (50 மீற்றர்)

**8 முதல் 11 வயதிற்குட்பட்டோர்:**
**ஆண்கள்/பெண்கள்**
100மீற்றர், 200மீற்றர், நீளம் பாய்தல், கயிறடித்தல் (50மீற்றர்), தடை ஓட்டம், அஞ்சலோட்டம் 4*100 மீற்றர் (பாடசாலை/கழகம்)

**11 முதல் 14 வயதிற்குட்பட்டோர்:**
**ஆண்கள்/பெண்கள்**
100மீற்றர், 200மீற்றர், நீளம் பாய்தல், கயிறடித்தல், தடை ஓட்டம், பந்தெறிதல் (CRICKET), அஞ்சலோட்டம் 4*100மீற்றர் (பாடசாலை/கழகம்)

**14 முதல் 17 வயதிற்குட்பட்டோர்:**
**ஆண்கள்/பெண்கள்**
100மீற்றர், 200மீற்றர், 400மீற்றர், நீளம் பாய்தல், தடை ஓட்டம், பந்தெறிதல் (CRICKET), அஞ்சலோட்டம் 4*100மீற்றர், 4*400மீற்றர் (பாடசாலை/கழகம்)

**17 முதல் 20 வயதிற்குட்பட்டோர்:**
**ஆண்கள்/பெண்கள்**
100மீற்றர், 200மீற்றர், 400மீற்றர், நீளம் பாய்தல் அஞ்சலோட்டம் 4*100மீற்றர் 4*400மீற்றர் (பாடசாலை/கழகம்)

**20 வயதிற்கு மேற்பட்டோர்:**
**ஆண்கள்/பெண்கள்**
100மீற்றர், 200மீற்றர், 400மீற்றர், நீளம் பாய்தல் அஞ்சலோட்டம் 4*100மீற்றர் 4*400மீற்றர் (பாடசாலை/கழகம்)

**20 முதல் 35 வயதிற்குட்பட்டோர்:**
குண்டெறிதல்

**35 வயதிற்று மேற்பட்டோர்:**
குண்டெறிதல்

**17 வயதும் - அதற்கு மேற்பட்டோரும்:**
800மீற்றர், 1500மீற்றர்

**கராட்டி**

**KUMITE**
**11-14 YEARS**
**14-16 YEARS**
**OVER 16 YEARS**
**KATA**

CHILDREN (7th to 4th KYU)
CHILDREN UNDER 16 (3rd KYU & Above)
MEN OVER 16 (7th to 4th KYU)
MEN OVER 16 (3rd KYU & Above)
MIXED WHITE BELT

**கயிறு இழுத்தல் போட்டி**
விண்ணப்பக் கட்டணம் £10.00

**பொது நிகழ்ச்சிகள்:**
(போட்டியிலன்று மைதானத்தில் விண்ணப்பங் களை கையளிக்கலாம்.)
தலையணைச் சண்டை, மிதிவண்டி மெதுவாக செலுத்தும் போட்டி. (மிதிவண்டிகள் கொண்டு வரல் வேண்டும்), விநோதஉடைப்போட்டி,மூன்று கால் ஓட்டப்போட்டி (தம்பதிகளுக்கு மட்டும்), சமனிலை ஓட்டம் (பெண்கள்) ,சங்கீதக் கதிரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சதாபிஷேக மகிமை

(10ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற விஷயத்தை தீர்க்கதரிசனமாக கூறியவர் அமரர் புதுமைப்பித்தன். 1941ல் புதுமைப்பித்தன் இவருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இவருக்கு வசதிகள் செய்து கொடுத்தால் அருமையான பயண நூல்களை எழுதுவார் என்று குறிப்பிட்டிருந்தார். பயண நூல்கள் எழுதும் பணியுடன் இவர் தம்முடைய தொழிலான ஒலிபரப்புப் பணியை மறந்துவிடவில்லை. இலங்கை வானொலியாலும், பி.பி.சியாலும் பெற்ற அனுபவத்தின் பயனாக 'ஒலிபரப்புக் கலை' என்ற நூல் ஒன்றையும், எழுதினார். தமிழகத்தின் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசு பெற்ற இந்த நூல், இந்தக் கலையைப் பற்றி முதன் முதலாகத் தமிழில் எழுதப்பட்டது. ஒலிபரப்புப் பயிற்சியாளருக்கு இன்றும் இது பாடப் புத்தகம் போல் பயன்படுகிறது.

## ஆழ்ந்த ஆராய்ச்சியாளர்

'தமிழோசை' ஒலிபரப்புப் பணி நிறைவடைந்த பிறகு சிவபாத சுந்தரம் இலங்கை திரும்பி ஒரு பெரிய விளம்பர நிறுவனத்தில் ஆலோசகராக சில ஆண்டுகள் பணி புரிந்தார். 1958ல் சென்னையிலேயே வந்து தங்கி ஒரு சிறு கைத்தொழிலை நடத்திக் கொண்டிருந்தபோது நாங்கள் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. சந்திக்கும் போதெல்லாம் இலக்கியத்தைப் பற்றியே அதிகமாகப் பேசுவோம். தமிழ் எழுத்தாளர்களுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டதன்பயனாக சிவபாத சுந்தரம், தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். மற்றும் 1959ல் சென்னையில் நடந்த 'அனைத்திந்திய எழுத்தாளர் மகாநாட்டின்' அமைப்பாளர்களில் ஒருவராக செயல்பட்டு அந்த மகாநாட்டை வெற்றிகரமாக நடத்திக் கொடுத்தார். இம் மாதிரி பல இலக்கிய அமைப்புகளில் பொறுப்பு ஏற்று உதவி செய்ததால் இலக்கிய சம்பந்தமான எல்லா ஏற்பாடுகளுக்கும் இவருடைய உதவி இன்றியமையாததாக இருந்தது. 1972-ல் பி.ஆர்.ராஜம் ஐயர் நூற்றாண்டு விழா குழுவில் பொருளாளராகப் பொறுப்பேற்றதோடு தமிழ் உரைநடயின், சிறப்பாக, நாவலின், தோற்றத்தைப் பற்றி விரிவான ஆராய்சி மேற்கொண்டார். இந்த ஆராய்ச்சியில் நானும், அவரும்பல நூலகங்களுக்குச் சென்று குறிப்புகள் தயாரிக்கும் வாய்ப்புகள் கிடைத்தன. இதன் தொடர்பாக மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் எங்கள் இருவரையும் அழைத்து 'இரட்டையர் உரை' என்ற தலைப்பில் தமிழ் நாவலைப் பற்றி 1976இலும் சிறுகதையைப் பற்றி 1978இலும் ஆராய்ச்சி மாணவர்களுக்கு உரை நிகழ்த்த ஏற்பாடு செய்தது. இந்தப் பேச்சுகள் பின்னர் நூல்களாகவும் வெளிவந்துள்ளன. ஆழ்ந்த ஆராய்ச்சியாளர் என்று சிவபாத சுந்தரத்தை அறிந்த பல கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் அழைத்து மாணவர்களுக்கு உரையாற்ற ஏற்பாடு செய்தது. :பல நிகழ்ச்சிகளுக்கு இவருடன் நானும் செல்லும் வாய்ப்புகளும் கிடைத்ததால், சென்ற 20 ஆண்டுகளாக எங்களுடைய இலக்கியப் பணி இணைந்தே நடைபெறுகிறது. இதன் பயனாக உருவான நூல்கள் "தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும்", "தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும்" ஆகும். சிறுகதை பற்றிய நூல் 1990ல் இலக்கியச் சிந்தனை பரிசு பெற்றது.



## இலக்கிய விழாக்கள்

இலக்கிய ஆராய்ச்சிப் பணியுடன் சிவபாத சுந்தரம் மேற்கொண்ட மற்றொரு சாதனை, இவர் 10 ஆண்டுகளுக்கு மேலாக சென்னை பாரதீய வித்யா பவன் கல்லூரியில் பத்திரிகைத் தொழில் மக்கள் தொடர்பு சாதனங்கள், விளம்பர விற்பனைக் கலை போன்ற விஷயங்களைப்பற்றி விரிவுரையாளராகப் பணியாற்றியது. இவ்வாறு பல துறைகளில் தன்னுடைய திறமையை வெளியிட்ட சிவபாத சுந்தரம் ஒலிபரப்புத் துறையிலும், விடாமல் தொடர்பு கொண்டிருந்தார். அனைத்திந்திய வானொலி நிகழ்ச்சிகளில் பரிசுக்காக சிறந்தவைகளைத் தேர்ந்தெடுப்பதில் ஒருவராக இருந்திருக்கிறார். அறிஞர் அண்ணா, ராஜாஜி, தந்தை பெரியார், காமராஜர் போன்றவர்கள் மறைந்த போது அவர்களுடைய இறுதி ஊர்வலத்திற்காக நேர்முக வர்ணனையாளராக ஒலிபரப்பியிருக்கிறார். மற்றும் தமிழக அரசின் பண்பாட்டுத் துறைக்காக திருநெல்வேலி மாவட்டத்தின் நாட்டுப்புற கலைகள் பற்றிய ஆய்வு நடத்தி புகைப்படங்கள், ஒலிப் பதிவுகள் அடங்கிய ஆய்வேடு ஒன்றை தயாரித்து தந்தார். சிவபாத சுந்தரம் ஈடுபட்டிருந்த இலக்கிய விழாக்களில் மிகவும் முக்கியமானது மணிக்கொடி பொன் விழா. 1984ல் நடந்த இந்த விழாவை ஒட்டிய கருத்தரங்கை மிகவும் சிறப்பாக நடத்திக் கொடுத்தார். பிரம்ம ஞான சங்கத்தின் தலைவர் George Arundale அந்த நிறுவனத்தைச் சேர்ந்த கவிஞர் Cousins போன்றவர்களின் நூறாவது பிறந்த நாள் கொண்டாட்டங்களுக்காக அமைக்கப்பட்ட குழுவில் சிவபாத சுந்தரமும், நானும் பணியாற்ற வாய்ப்பு கிடைத்தது.

பணியில் நேர்மைக்கும், ஒழுக்கத்திற்கும், பெயர் பெற்ற சிவபாத சுந்தரம் நட்பின் இலக்கணமாகத் திகழ்பவர். இன்று லண்டனில் குடியேறி இருக்கும் சிவபாத சுந்தரம் ஆங்கில இலக்கியத்தின் போக்குகளை பற்றி நேரடியாக அறியும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார். ஆங்கிலம், தமிழ் இலக்கியங்களின் ஒற்றுமைகளைப் பற்றி பல கட்டுரைகள் ஆங்கிலத்தில், குறிப்பாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ் வீக் என்ட்' பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார். லண்டனில் இருப்பதால் பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ள தமிழ் உரைநடை தோற்றத்திற்குக் காரணமான பல நூல்களையும்; ஆவணங்களையும் ஆராயும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. தமிழகத்தில் கிடைக்காத இலக்கியப் புதையல்களான முதல் தமிழ் நாவல், ஆதியூர் அவதானி மற்றும் 'வசன சம்பிரதாயக் கதை', 1891ல் பிரணதார்த்திஹர சிவன் என்பவரால் முதன் முதல் எழுதப்பட்ட 'சிலப்பதிகார' ஆராய்ச்சிக் கட்டுரைகள் போன்றவற்றை தேடி எடுத்து வைத்திருக்கிறார். இவைகள் நூல்களாக வெளியிடப்படுவதற்கு முயற்சிகள் நடந்து வருகின்றன. இலக்கிய விமர்சகர் என்ற முறையில் பல திறனாய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ள சிவபாத சுந்தரம் டில்லியில் உள்ள நூலாசிரியர் கழகத்தின்(Authors Guild of India) உறுப்பினராக இருந்திருக்கிறார். சென்னையில் கிறிஸ்துவ இலக்கிய சங்கம் (சி.எல்.எஸ்) பன்னிரண்டு ஆண்டுகளாக நடத்தி வந்த இலக்கிய கருத்தரங்கில் முக்கிய பங்கு வகித்திருக்கிறார்.

எனக்கு 2 ஆண்டுகள் இளையவரான சுந்தரம் இன்று 'முதுபெரும் எழுத்தாளராக' என்னுடன் தொடர்ந்து இலக்கியப் பணி ஆற்றுவதில் எனக்குத்தான் பயனும், மகிழ்ச்சியும் அதிகம். 80ஐ தாண்டிய குழுவில் இவரை வாழ்த்தி வரவேற்கிறேன். என்னுடைய 60 ஆண்டு நிறைவின் போது எனக்கு ஏற்பட்டிருந்த இதயநோயின் விளைவாக நான் செயலிழந்து இருந்த போது என்னை உற்சாகப்படுத்தி பல இலக்கிய முயற்சிகளில் என்னை ஈடுபடுத்தி என்னுடைய உடல் நலமின்மை முற்றிலும் மறைந்து போவதற்கு காரணமாயிருந்த பெருமை இவருடையது. தம்முடைய முத்த மகள் பிரபல மருத்துவ மனைகளில் ஆலோசகரான டாக்டர் மஞ்சுபாஷிணி, கணவர் சிவநாதன், மகன் ரவிலோசனன், மருமகள் மாலா, பேரன் சிவஸ்கந்தன், பேத்தி பிரியா, மனைவி ஞான தீபம் முதலியவர்களுடன் லண்டனில் வாழும் சிவபாத சுந்தரம் முழுமையான வாழ்வுப் பயன் பெற்றிருக்கிறார். ஆயினும் இந்த சந்தர்ப்பத்தில் 1980ல் தன்னுடைய 25ஆவது வயதில் காலமாகிவிட்ட இணையற்ற பரதநாட்டியச் செல்வி பிரசன்ன வதனி என்ற இவருடைய 2ஆவது மகளை நினைவு கொள்வது தவிர்க்க முடியாத சோகம்.

## இலக்கிய புதையல்

இந்திய நாட்டியக்கலை பற்றிய தபால்தலைகளை இந்திய அரசு சிறப்பாக வெளியிட்டபோது சென்னை கலாஷேத்ராவின் தலைவி ருக்மிணி தேவி அருண்டேல்,தமது மாணவி பிரசன்ன வதனியின் உருவத்தை பரத நாட்டியத்திற்காகத் தேர்ந்தெடுத்தது அந்தப் பெண்மணியின் நாட்டியக்கலைத் தேர்ச்சிக்கு அளித்த சான்றாக அமைந்தது. இந்த மகத்தான சோகத்தையும் மனதில் தாங்கிக் கொண்டு இலக்கியப் பணியாற்றி வரும் சிவபாத சுந்தரம் நீடுழி வாழ இறைவனை பிரார்த்திக்கிறேன்.

# சதாபிஷேக மகிமை

இந்து சமயத்தில் மனிதனுடைய பிறந்த நாளில் விசேஷ பூஜைகள் செய்வதைச் சிறப்பாக சொல்லப் பட்டிருக்கின்றது. ஒருவர் தான் பிறந்த நட்சத்திரத்தன்று செய்யும் வழிபாடுகளும் தானதர்மங்களும் பலமடங்கு நல்ல பயன்களைத் தரும். அதிலும் ஆண்டுதோறும் அவர் பிறந்த மாதத்திலேயே வரும் நட்சத்திரத்தில் பூஜைகள் செய்வது மிக அவசியமானது. இதேபோல் 60ஆவது வயது ஆரம்பிக்கும் பொழுதும், தான் பிறந்த வருஷம், மாதம் நக்ஷத்திரம் இவைகள் ஒன்றாக வரும் 60ஆவது வயது பூர்த்தியின் போதும் 70ஆவது வயது பூர்த்தியின் போதும் 80ஆவது வயது முடிவடையும்போதும் விசேஷ பூஜை ஹோமங்களை நிச்சயம் செய்ய வேண்டும்.

வேத சிவாகமங்களில் 59ஆவது பூர்த்தியை உக்ர ரதசாந்தி என்றும், 60ஆவது பூர்த்தியை ஷஷ்டியப்த பூர்த்தி என்றும் 70ஆவது பூர்த்தியை பீமரத சாந்தி என்றும் 80ஆவது பூர்த்தியை சதாபிஷேகம் என்றும் சிறப்பாக சொல்லப்படுகிறது.

பிறந்த நாளின் போது பெரியார்களை வணங்கும்போது நூற்றாண்டு காலம் வாழ்க, என வாழ்த்துவர். சதம் என்ற வடமொழிச் சொல்லுக்கு நூறு என்று பொருள். ஆனால் சதாபிஷேகம் என்ற சிறப்பு நிகழ்ச்சி மனிதனுடைய 80வது வயதிலேயே செய்யப்படுகிறது. ஏனெனில், 80வயது வாழ்ந்த ஒரு மனிதர் தனது வாழ்நாளில் ஆயிரம் பௌர்ணமி சந்திரனை கண்டதாக கருதப்படுவதால் அவர் நூற்றாண்டு காலம் வாழ்ந்த பெருமைதனை அடைகிறார். இத்தகைய பெருமை தனை தம்பதியாக இருந்து அனுபவிப்பவர்கள் மிகச்சிலரே. திருமண வைபவத்தில் சடங்குகளுக்கு முதலிடமும் மணிவிழாவில் சடங்குகளுக்கும் இறை வழிபாட்டிற்கும் முதலிடமும் அளிக்கப்படுகிறது. சதாபிஷேகம் செய்து கொள்ளுகின்ற தம்பதியினரை இறைவனுக்குச் சமமாக கருதுவதால் இவர்களுக்கு செய்யப்படும் பூஜைகளை அபிஷேகம் என்ற சொல்லால் அழைக்கப்படுகிறது.

கணபதி, கந்தன், உமை, ஈசன் இவர்களோடு 11 ருத்ரர்களுக்கும், நவக்ரஹங்களுக்கும் ஆயுள் தேவதைக்கும் பூஜைகள் நடத்தி யாகம் செய்யப்பட்டு, பிரசாதம் வழங்கப்படும். மங்களகரமான சுப முகூர்த்தத்தில் மாங்கல்ய தாரணம் செய்யப்பட்டதும் பெரியோர்களை அனைவரும் வணங்கி வாழ்த்து பெறுவது மிக முக்கியமானது.

–சிவஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாசாரியார்

# செய்திச் சரம்

3ம் பக்க தொடர்சி

துப்பாக்கி சூட்டிற்கு,தமிழ்நாடு உதவி பொலீஸ் அதிகாரி ஒருவர் பலியானார்.மதுரை கூடல் நகர் அகதி முகாமருகே சோதனையில் ஈடுபட்டிருந்த பொலீசார்,அங்கே வந்த மேற்படி இளைஞரை சோதனையிட முயன்றபோது, அவர் துப்பாக்கி பிரயோகம் செய்துவிட்டு தப்பி ஓடியுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக,தமிழக அரசியல் கட்சிகள் ஒன்றை ஒன்று குற்றம் சாட்டி தாக்க ஆரம்பித்துள்ள அதே வேளை, தமிழ் நாட்டில் பல பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.தமிழ்நாடு மற்றும் இலங்கைத் தமிழ் இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

### ஊழல் பட்டியல்

தமிழ்நாடு முதல்வர் செல்வி ஜெயலலிதா மீது,ஊழல் குற்றச்சாட்டு பட்டியல் தயாரித்து, மத்திய அரசிடம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும், மானிலத்தில் சட்டம் ஒழுங்கு பாதிப்பு,புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த தவறியமை போன்ற 5 குற்றச் சாட்டுகள் தொடாபாக, அக்டோபர் 2 ம் திகதி முதல் நாடு முழுவதும் பிரச்சாரம் செய்யப் போவதாகவும்,ஜனதா கட்சி டாக்டர். சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்..

22.09.92,

### இந்தியாவின் எண்ணம்

தமிழர்களின் நியாயபூர்வமான நலன்களை அங்கீகரிக்கும் ஒரு தீர்விற்கு கடப்பாடுள்ளதாகவே,இந்தியா இன்னமும் இருந்து வருகிறது.இராணுவ நடவடிக்கை வேண்டுமா இல்லையா என்பது சம்பந்தமாக முடிவெடுக்க வேண்டியது இலங்கையரசு. இலங்கை இனப்பிரச்சனைக்கு ஐக்கியப்பட்ட இலங்கைக் கட்டமைப்பிற்குள் ஒரு தீர்வைக் காணவேண்டும் என்பதே எமது கருத்து.

1987 ஒப்பந்தமும் அதனுடன் சம்பந்தப்பட்டனவும்,தொடர்ந்தும் செல்லுபடியானதாகவே இருக்கின்றன. இரு நாடுகளுக்குமிடையே உறவுகள் செழித்து வளருவதை விரும்பாத குழுக்களும், சக்திகளும், இன்னமும் இருக்கின்றன. இக் குழுக்களின் கை ஓங்காததை நிச்சயப்படுத்திக்கொள்ள, இலங்கை முயலவேண்டுமெனவும், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு.நாகேந்திரநாத் ஜா கொழும்பில் தெரிவித்துள்ளார்.

# சுப்பிரமணிய சுவாமியின் முயற்சி

(சென்னை)

தமிழ் நாட்டில் தி.மு.க, அ.இ.தி.மு.க. அல்லாத ஒரு மூன்றாவது அணியை உருவாக்கும் முயற்சியில் சுப்பிரமணிய சுவாமி ஈடுபட்டிருக்கிறார். சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது, "தமிழக முக்கிய அரசியலில் தலைவர்களை சந்தித்தேன். தமிழக அரசு பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்த ஏழு பேர் கொண்ட கமிட்டி ஒன்று அமைக்கப்படும். அது பற்றிய விபரங்களை அக்டோபர் மாதம் 2ம் தேதியன்று வெளியிடுவேன். இந்தக் குழு தமிழகம் முழுவதும் பயணம் செய்து பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளும். தி.மு.க., அ.இ.அ.தி.மு.க அல்லாத 3வது அணி ஒன்றை உருவாக்கும் நோக்கத்துடன் இந்தக்குழு அமைக்கப்பட்டிருக்கிறது. சுயமரியாதை உள்ள இ.காங்கிரஸ் காரர்களும் இந்த. அணியில் சேரலாம். நாங்கள் அவர்களை வரவேற்கிறோம்."

சமீபத்தில் சென்னையில் பாட்டாளி மக்கள் கட்சி நடத்திய ஊர்வலத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வி.பிரபாகரனின் படத்தை சிலர் ஏந்திக் கொண்டு சென்றதை சுப்பிரமணிய சுவாமி கண்டித்தார். ஜெயலலிதா மீது நான் கூறிய குற்றச் சாட்டுகளைத் தொடர்ந்து அவர் என் மீதுமான நஷ்ட ஈடு வழக்கு தொடரப் போவதாக கூறியிருக்கிறார். அந்த வழக்கைத் சந்திக்க நான் தயாராக இருக்கிறேன். நானே கோர்ட்டில் ஆஜராகி வாதாடுவேன் என்றும் அவர் கூறினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அக்டோபர் 11ம் திகதி

# தமிழோசையின்

# மாபெரும் விளையாட்டுப் போட்டி

அக்டோபர் 11ம் திகதி

இடம்:

**வில்ஸ்டன் ஸ்போர்ட்ஸ் சென்ரர்**

WILLESDEN SPORTS CENTRE, DONNINGTON ROAD, WILLESDEN, LONDON NW10

**காலம்: அக்டோபர் 11ம் திகதி காலை 10 மணி முதல் மாலை 6 மணி**

5 வயது முதல் 80 வயது வரை அனைவரும் பங்கு பற்றலாம்

* ஓட்டப் போட்டிகள்
100 M, 200M, 400M, 800M, 1500M
* தடை ஓட்டம்
* அஞ்சல் ஓட்டம்
4 x 100 M / 4 x 400M

கயிறடித்தோடல் *
நீளம் பாய்தல் *
பந்தெறிதல் *
கராத்தே *



* குண்டெறிதல்
* சங்கீதக் கதிரை
* மூன்று கால் ஓட்டம்
(தம்பதிகளுக்கு மட்டும்)

சமநிலை ஓட்டம் *
(பெண்களுக்கு மட்டும்)
விநோத உடை *
கயிறிழுத்தல் போட்டி *
(11 பேர் கொண்ட குழுகளுக்கு மட்டும்)

* மிதிவண்டி மெதுவாக ஓட்டும் போட்டி *

* தலையணைச்சண்டை *

**மாலை 6 மணி முதல் 8 மணி வரை**

**பரிசளிப்பு விழா நடைபெறும்**

மதிய உணவு, சிற்றுண்டிகள், குளிர்பானங்கள், மதுபானம் ஆகியன பெற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது

பார்வையாளர் பிரவேசக் கட்டணம்
**£ 3**

விண்ணப்பப் பத்திரம் 14ம் பக்கத்தில் உள்ளது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்